
கோகுலம்

GOKULAM

ஜூன் '93 ரூ. 3.00




AHEAD OF ACTION
"I just believe in action"
YOU GET THE
SAME SHOES
WE EXPORT
Action has always been part of my success.
Through all the excitement, through all the glory and action
action always keeps me ahead.
opener
SKIPPER
SHOES FOR THE NEW GENERATION.
action®
SHOES





கோகுலம்

1993 ஜூன் மாத இதழ்

மலர் : 11 இதழ் : 5

அருமைச் சிறுவர் சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம்.

தபால்காரர் தபால் பையைத் தூக்கிக் கொண்டு வரும் போதே பயமாக இருக்கிறது! எங்கேயாவது போய் ஒளிந்து கொண்டு விடலாமா என்று கூடத் தோன்றுகிறது! எல்லாம் நீங்கள் கோகுலத்திற்கு எழுதியனுப்பும் கடிதங்கள்தான் காரணம். கதை, கட்டுரை, பாடல் என்று நீங்கள் எழுதியனுப்பும் எண்ணிக்கையைப் பார்த்தால், கோகுலத்தின் மேல் ஒரு கடிதப் படையெடுப்பையே விடுமுறையில் தொடங்கியிருக்கிறீர்கள் என்று எண்ணத் தோன்றுகிறது. உங்கள் அன்புத் தொல்லை பெருக வேண்டும். அதனால் உங்கள் அறிவியல் ஈடுபாட்டுக்கும், கற்பனைத் திறனுக்கும் புதிய ஊக்கம் பிறக்க வேண்டும் என்று வாழ்த்தி வரவேற்கிறேன்.

தனது உருவத்தால் பள்ளி மாணவர்களின் ஏளனத்திற்கும் தாக்குதலுக்கும் இலக்கானவனாக ஓராண்டுக்கு முன் அறிமுகமான பரதன், தனது உறங்கிய சக்திகளை வானுயர வளர்த்து வெளிப்படுத்திக் கொண்டு, எல்லோரது நட்பையும் பெற்று, சாதனை படைத்து, ஒரு சமூக விரோதக் கும்பலையும் பிடித்து ஹீரோவாகி இந்த இதழில் நம்மிடம் இருந்து பிரியாவிடை பெறுகிறான். ''முயன்றால் நம்மால் எதுவும் முடியும். நம்மால் முடியாதது என்று எதுவுமே உலகில் இல்லை.'' இதுவே நூறு ரூபாய் இரகசியத்தின் வாயிலாக பரதன் உங்களுக்கு விடுக்கும் செய்தி. பார்க்கப் போனால் நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு பரதன் தான். உங்களுக்குள் அளவிட முடியாத ஆற்றல் உறங்கிக் கொண்டிருக்கிறது. அதைத் தட்டியெழுப்பி, வீறு கொள்ள வைத்து சாதனை படைத்துள்ள பரதனைப் போலவே நீங்களும் முயன்று வாழ்வில் அரிய பல வெற்றிகளை அடைய வேண்டும்.

இதே இதழின் இன்னொரு பக்கத்தில் புதிய தொடர்கதையின் அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதை எழுதப் போகும் 'வானொலி அண்ணா' கூத்தபிரான் ஏற்கெனவே தனது நாடகங்களின் மூலம் உங்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர். சிறுவர் இலக்கியத்தின் முன்னோடிகளாகத் திகழ்ந்த அறிஞர்களால் பட்டை தீட்டப் பெற்று ஒளிவீசி வருபவர். அவர் அறிமுகப்படுத்தும் அபிராமி, உங்கள் நெஞ்சைக் கொள்ளை கொள்ளப் போகிறாள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

கோகுலத்தை உங்கள் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் அறிமுகப்படுத்தி, வாங்கிப் படிக்கச் சொல்லுங்கள். ஆண்டுச் சந்தா கட்டி விட்டால் வீடு தேடி ஓடி வருமே. கிடைக்கவில்லையே என்ற ஏமாற்றத்தையும் தவிர்க்கலாம்.

அன்புடன்,

(கௌரவ ஆசிரியர்)

உயிர்களிடத்தில் அன்பு வேணும்
தெய்வம் உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்.

கோகுலம்

இந்த இதழில்...


ஜூன் 1993




★ பட்டுக் குல்லா பறந்து போ! - பக்கம் 34




★ கடல் அழகி - பக்கம் 41



* பரிதாபத்துக்கு உரியவர் யார்? - பட்டிமன்றம் - பக்கம் 65




* தொட்டால் மரவட்டை சுருள்வது ஏன்? - பக்கம் 81



* மயிலான கதை பக்கம் - 4

மயில் நமது தேசியப் பறவை. மயில் தோகை விரித்து ஆடும் அழகைக் கண்டு விட்டால் குழந்தைகளுக்குக் கொண்டாட்டம்தான். மயில் தேசியப் பறவையாக தேர்ந்தெடுக்கப்பட்ட கதையும், தேசியப் பறவைக்கு போட்டி




போட்ட மற்ற பறவைகள் பற்றியும் தெரியுமா உங்களுக்கு?

உலகப் பறவையினப் பாதுகாப்புக் கெனக் கழகம் ஒன்று உள்ளது. அந்தக் கழகம் உலக நாடுகளுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தது. அதன்படி தன்னாட்சி பெற்ற ஒவ்வொரு நாடும் தங்கள் நாட்டின் பெருமைக்கு சிறப்புச் செய்யும் ஒரு பறவையை தேசியப் பறவையாக அறிவிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டது.

அதன்படி உலக நாடுகள் எல்லாம் 'தேசியப் பறவை' ஒன்றைத் தங்கள் நாட்டுக்கெனத் தேர்ந்தெடுத்து பறவையினத்திற்கு சிறப்பு செய்தன.

நம் நாடும் அப் பணியைத் துவக்கியது. பல்துறை வல்லுநர்களும் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு விரிவான ஆய்வு ஒன்றை பல மாதங்கள் நடத்தியது.

முதலில் 'நீலநாரை' என்ற பறவையைத் தேர்ந்தெடுக்க முயற்சி செய்தனர். ஆனால் இப் பறவை நம் நாட்டில்




அரிதாகவே காணப்பட்டது. பார்வைக்கு மிக அழகான பறவை என்ற போதும் அரிதாக இருந்ததால் இதைப் புறக் கணித்தனர். கொக்கைத் தேர்ந்தெடுக் கலாம் என்று நினைத்தனர். ஆனால் அது வேறு பல நாடுகளிலும் இருந்ததால் அதையும் கைவிட்டனர்.

அடுத்ததாக திருமாலின் வாகன மாகக் கருதப்படும் கம்பீரமான தோற்ற மும், வலிமையும் பெற்ற கருடனைத் தேர்ந்தெடுக்க யோசித்தனர். ஆனால் கருடன் செத்து, அழுகிக் கிடக்கும் பிராணிகளை உணவாகக் கொள்வதால் மக்களின் அருவருப்புக்கு இலக்காகும் என அதையும் ஓரம் கட்டி விட்டனர்.

கடைசியாக இதில் வெற்றி பெற்றது மயிலே. இந்திய சமண, பௌத்த, இஸ்லாமிய மத விசேஷங்களிலும் மயில் தோகைக்கு சிறப்பான இடம் தரப்படுகிறது. மயில் தோகையால் விசிறி இல்லாத இந்தய மன்னர்களின் அரசவை கள் கிடையாதே. ஜஹான்கீரின் உலகப் புகழ் பெற்ற மயிலாசனம் எத்தனை அயல் நாட்டினரைக் கவர்ந்து வந்துள்ளது. இந்தியாவில் வெள்ளை மயில்களும் உண்டு என்றாலும் நீல மயில் சிறப்பித்து பேசப்படும் அளவுக்கு அவை மக்களை கவரவில்லை! ஆண் மயிலின் கம்பீரம் நிறைந்த எழிலுருவமும், அழகு வண்ணத் தோகையும் எல்லா நாட்ட வரையும், எல்லா வயதினரையும் கவரக் கூடியது. மேலும் இந்திய நாட்டு இலக்கியங்களில் மயில்களுக்கு தொன்று தொட்டே சிறப்பான இடம் உண்டு. மயிலைப் பற்றி வர்ணனை சிறிதாவது இல்லாத இந்திய இலக்கியத்தைக் காண் பதரிது என்பதால் ஆண் மயிலையே நம் பாரத நாட்டின் தேசியப் பறவையாக அறிவித்தனர். அழகு மயில் தேசியப் பற வையானதை யார்தான் மறுப்பார்கள்?

– ந. கமலக்கண்ணன், ஈரோடு.




நீல வானின்
சல்லடையாம்
ஓஸோன் வாழ்க, வாழ்கவே!
நெய்திடாத
உலகப் போர்வை
ஓஸோன் வாழ்க, வாழ்கவே.

வான வெளியின்
வடிகட்டியாம்
ஓஸோன் வாழ்க வாழ்கவே.
வளிமண்டலத்தின்
துளிமண்டலம்
ஓஸோன் வாழ்க, வாழ்கவே.

வெப்பக்கதிர்கள்
சுத்தமாக்கும்;
ஓஸோன் வாழ்க, வாழ்கவே.
விண்வெளியின்
கேடயமாம்
ஓஸோன் வாழ்க, வாழ்கவே.

உலகைக் காக்கும்
உயிர்க்காற்று
ஓஸோன் வாழ்க, வாழ்கவே.
உடைத்திடாமல்
பாதுகாப்போம்
ஓஸோன் வாழ்க, வாழ்கவே.

– நாரணமணிவண்ணன்



பெற்றோரைக் காணவும் தடை!

உண்மையைச் சொல்லுங்கள்!

உங்களுக்குப் படிப்பதற்கு ரொம்பப் பிடிக்குமா? விளையாடுவதற்கு ரொம்பப் பிடிக்குமா? ரொம்ப தர்மசங்கடமான கேள்வி இல்லையா? சரி. இப்படி வைத்துக் கொள்வோம். விளையாடி விட்டுப் படிப்பதற்கு ரொம்பப் பிடிக்கும். அப்படித்தானே?

உங்களால் அதிக அளவு, எத்தனை மணி நேரம் ஒருநாளைக்கு விளையாட முடியும்? மூன்று மணி நேரம் அல்லது நான்கு மணி நேரம். அதற்கு மேல் விளையாடினால் அப்பா அடிக்க மாட்டாரா? அதனால் நீங்கள் என்ன பண்ணுவீர்கள்? கிடைத்த நேரத்தில் விளையாடுவீர்கள். படிக்கிற நேரத்தில் படித்து விடுவீர்கள். சரிதானே! விளையாடுங்கள். ஆனால் நீங்கள் கண்டிப்பாகப் படித்துத் தானாக வேண்டும் என்று உங்கள் பெற்றோரும், ஆசிரியரும் சொல்வார்கள். ஆனால், விளையாடித்தானாக வேண்டும் என்று யாராவது சொல்வார்களா?

சரி, அப்படியே சொல்கிறார்கள் என்றே வைத்துக் கொள்வோம். உங்களுக்கு ஜாலிதான்! ஆனால், உங்கள் அப்பா, அம்மாவைப் பார்க்கக் கூடாது வேறெங்கும் ஊர் சுற்றக் கூடாது; டீ.வி., சினிமா பார்க்கக் கூடாது; உறவினர் வீடுகளுக்குப் போகக் கூடாது. வெறும் விளையாட்டு. அதுவும் ஒரே ஒருவகையான விளையாட்டை மட்டும்தான் சதா சர்வ காலமும் விளையாட வேண்டும் என்று சட்டம் போட்டால் நீங்கள் வரவேற்பீர்களா? 'எனக்கு வேண்டாம்ப்பா, அப்படி ஒரு விளையாட்டு!'

என்று ஓடிப் போய் விடுவீர்கள் இல்லையா? நீங்கள் மட்டும் அல்ல. உலகத்தில் எல்லோருமே இப்படித்தான் ஓடி விடுவார்கள்!

ஆனால், சீனாவில் ஒரு சிறுமி இருக்கிறாள். அவள் பெயர் பியூமிங்சியா. ரொம்பச் சின்னவள். பதினாலே வயது! அவள் ஒரு பெரிய நீச்சல் வீராங்கனை! போன முறை ஸ்பெயின் நாட்டில் நடந்த ஒலிம்பிக் நீச்சல் விளையாட்டுப் போட்டிகளில், பியூமிங்சியா தான் ஃபர்ஸ்ட்! பதினாலே வயதில் தங்கப் பதக்கம் பெற்று, தனக்கும் தன் நாட்டுக்கும் பெருமை சேர்த்தாள்!

ஆனால் பியூமிங்சியாவுக்கு ஒரு பிரச்னை. இத்தனை சின்ன வயதில் இத்தனை பெரிய சாதனை புரிந்திருந்தாலும், அவளால் ஜாலியாகத் தன் பெற்றோருடன் வசிக்க முடியாது. ஊர் சுற்ற முடியாது. சினிமாவுக்கோ, அல்லது வேறு எந்தப் பொழுதுபோக்குக்கோ - அவளே விருப்பப்பட்டால் கூடப் போக முடியாது!

காரணம் என்ன தெரியுமா?

தனது எட்டாவது வயதிலேயே தேசிய அளவில் நீச்சலில் சாதனை புரிந்த பியூமிங்சியாவை சீன அரசே 'தத்து' எடுத்துக் கொண்டு விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்!

வருடத்திற்கு இரண்டு முறைதான் அவள் தன் வீட்டுக்குப் போக முடியும்! மற்றபடி எப்போதும் நீச்சல் பயிற்சி தான்! பள்ளிப் பாடங்களைக் கூட, நீச்சலில் ரெஸ்ட் கிடைக்கும் போது தான் படிக்க முடியும்!

விளையாட்டுத் துறையில் இத்தனை கடுமையான பயிற்சிகளை மேற்கொள்வதால்தான் இன்றைக்கு சீனாவால் ஆசிய தடகள விளையாட்டுகளில் சாதனை படைக்க முடிகிறது!

இப்படி பியூமிங்சியாவை மிகக் கடுமையான கட்டுப்பாடுகளில் வைத்திருப்பதால் சீன நாட்டுக்குப் பல பெருமைகள் கிடைத்தாலும், சிறுமி பியூமிங்சியாவுக்கு ரொம்ப மன வருத்தம். அப்பா அம்மாவைப் பார்க்க முடியாமல், நண்பர்களோடு விளையாட முடியாமல், ஊர் சுற்ற, அரட்டை அடிக்க முடியாமல், ஏன், டீ.வி. பார்க்





பெப்பர்மிண்ட்

பல்லாண்டுகளாகச் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை சுவைத்து மகிழும் பெப்பர்மிண்ட் என்பது மிட்டாய் அல்ல. இது ஒருவகை செடியின் பெயர். இதன் இலைகளை கசக்கினால் எண்ணெய் உண்டாகிறது. இவ் வெண்ணெய் கமகமவென்று வாசனை தருவதால், மிட்டாய் தயாரிப்பாளர்கள் இதைக் கலந்து மிட்டாய் தயாரிக்கிறார்கள்.

- எம்.ஜி.ஆர்., சங்கமங்கலம்.



நன்றி

தங்கள் பிரசங்கத்தைப் பாராட்டி கூட்டத்தில் இருப்பவர்கள் கைதட்டும் போது தாங்களும் பேச்சை நிறுத்தி விட்டு கூடச் சேர்ந்து கைதட்டுவது ரஷ்யர்கள் வழக்கம் . கைதட்டலுக்கு நன்றி சொல்லும் அடையாளமே அது.

- எஸ். தட்சிணாமூர்த்தி, நாகலூர்.

கக் கூட முடியாமல் எப்போதும் நீச்சல் அடிப்பது ஒன்றிலேயே குறியாக இருப்பது அவளுக்கு முதலில் மிகவும் வருத்தமாக இருந்தது. 'சே. இது என்ன வாழ்க்கை?' என்று தனியாக இருக்கும் போதெல்லாம் அழுவாள்!

ஆனால் விரைவிலேயே நான் சாதாரணச் சிறுமி அல்ல. தாய் நாட்டின் பெருமையை உயர்த்த வந்த அதிசயப் பிறவி. சாதாரணச் சிறுமிகளைப் போல் நான் பாசத்திற்கும், அன்புக்கும் இடம் கொடுத்து வாழப் பிறந்தவள் அல்ல என்று அவள் தன்னைத் தேற்றிக் கொண்டு விட்டாள்!

'வெற்றிகளைக் குவிப்பது ஒன்று தான் நமது இலக்கு. அதன் மூலம் நாட்டுக்குப் பெருமை சேர்ப்பதே நமது குறிக்கோள்' என்று தன்னைத்தானே அவள் திடப்படுத்திக் கொள்ளப் பழகிக் கொண்டாள். அரசு விரும்பியபடியே நீச்சலுக்கு என்றே தன்னை அர்ப்பணித்துக் கொள்ளப் பழகிக் கொண்டாள். அதன் விளைவாக தொடர்ந்து பல உலக சாதனைகளைப் புரிந்து வெற்றிகளைக் குவித்து, நீச்சல் வரலாற்றில் சீனாவிற்கு தனிப் பெருமை தேடித் தந்தாள்! இன்று உலகளவில் பரபரப்பாகப் பேசப்படும் நீச்சல் வீராங்கனையாக பியூமிங் சியா இடம்பெற்று விட்டாள்!


தனது நாட்டின் பெருமைக்காகத் தன் சொந்த சுக துக்கங்களை ஒதுக்கி வைத்து விட்டு உழைக்கும் பியூமிங்சியாவை ஒரு லட்சியச் சிறுமி என்று சொல்வது பொருத்தம்தானே?

இன்று உலகத்தின் நெம்பர் ஒன் விளையாட்டுச் சாதனையாளர்கள் எல்லோரும் பியூமிங்சியாவோடு கை குலுக்கி, அவளைப் பாராட்டுவதைப் பெருமையாக எண்ணுகிறார்கள்! பியூமிங்சியாவை 'பூ மிங்காஷ்' என்று செல்லமாக அழைக்கிறார்கள். ஒரு நாளைக்குக் குறைந்த அளவு பத்து மணி நேரம் நீச்சல் பயிற்சி செய்கிறாள். இந்த அற்புதச் சிறுமிக்குப் பயிற்சி அளிக்கும் பெருமைக்கு உரியவர் நபென். இப்பொழுது இந்தக் கட்டுரையை நீங்கள் படித்துக் கொண்டிருக்கும் போது கூட பியூமிங்சியா நீச்சல் பயிற்சியில் ஈடுபட்டிருப்பாள்!

- எஸ். காந்திமதிபாய்

சந்தா விவரம் கடைசி பக்கத்தில்....

எத்தனை வளையங்கள்? போட்டி



படத்தைப் பார்த்தீர்களா? ஷீலக்கா ஒரு பெரிய தட்டைத் தலையில் வைத்துக் கொண்டிருக்கிறாள். இதில் ஏராளமான வளையங்கள். இதில் எத்தனை வளையங்கள் உள்ளன என்பதைக் கணக்கெடுத்து எழுத வேண்டும். பரிசு உண்டு. கூப்பனைப் பூர்த்தி செய்து, அதிலேயே விடையையும் எழுதி, ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 97 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். ஒரு கூப்பனில் ஒரு விடையை மட்டுமே எழுதலாம். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

எத்தனை வளையங்கள்?
- போட்டி

பெயர் : ....

வயது : ....

முகவரி : ....
....
....

பின்கோடு : ....

முடிவு தேதி 15.6.93

விடையை இந்த வட்டத்தில் எழுதவும்.


இந்தக் கூப்பனை மட்டும் கத்தரித்து பூர்த்தி செய்து அனுப்பினால் போதுமானது.

"மம்மி! எங்க டீச்சருக்கு எதுவுமே தெரியலை..."

"எதை வைச்சு சொல்றே?"

"எங்களிடம் கேள்வி கேட்டு அவங்க தெரிஞ்சுக்கறாங்க!"

- உதய்



துப்பறியும் சிறுவர்கள், ரா. கண்ணன் மகேஷ், பக். 96, ரூ. 12/-, நவபாரதி பிரசுரம், 14, தெற்கு மாடவீதி, திருநின்றவூர், சென்னை – 602 024.

பல மதங்களைச் சேர்ந்த சிறுவர் சிறுமியர்கள் துப்பறியும் கிளப் ஒன்றை ஆரம்பிக்கிறார்கள். அவர்களுக்கு ஏற்றபடி ஒரு கள்ள நோட்டுக் கேசும் கிடைக்கிறது. கேட்கவா வேண்டும்? பக்கத்துக்குப் பக்கம் சஸ்பென்ஸ் தான்! நாவலை ஒரே மூச்சில் படிக்காமல் கீழே வைக்க முடியாது. பெரியவர்களுக்காக எழுதி வரும் ஆசிரியருக்கு இது பெரிய வெற்றிதான். சிறுவர் நாவல் என்பதால் ஒரு சில படங்களையாவது சேர்த்திருக்கலாம்.

அறிவுரை கூறும் அற்புதக் கதைகள், மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு, பக் 104, ரூ. 14.50, மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை – 600 017.

புராணம், இதிகாசம், இலக்கியம், வரலாறு, கர்ண பரம்பரைக் கதை, நாடோடிக் கதை, தெனாலிராமன் கதை, மரியாதை ராமன் கதை, மகான்கள் கூறிய கதை, பஞ்ச தந்திரம் என்று எதையும் விடாது எல்லாவற்றிலும் சிறப்பான



ஒரு கதையைத் தேர்ந்தெடுத்து. அதற்கு ஒரு நீதியையும் சேர்த்து அழகான தொகுப்பாகத் தந்திருக்கிறார்கள். எல்லாமே சிறுவர்கள் படிக்க ஏற்றவை என்று கூறிவிட முடியாது. ஆனால் இளைஞர்களுக்கு முற்றிலும் ஏற்ற பயனுள்ள தொகுப்பு, மனமாற்றம் கொண்ட இராவணன் போன்ற கதைகளின் புதிய அணுகு முறையை எத்தனை வேண்டுமானாலும் பாராட்டலாம்.

நகைச்சுவை விருந்து, மு. சாயபு மரைக்காயர், பக். 140, ரூ. 18/-, கங்கை புத்தக நிலையம், தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை – 600 017.

நகைச்சுவையாகப் பேசுவதிலும் எழுதுவதிலும் வல்லவரான பேராசிரியர் சாயபு மரைக்காயரின் தொகுப்பு இது. தமிழில் நகைச்சுவை நூல்கள் அதிகம் இல்லை என்பதைப் போக்கும். உதாரணத்துக்கு இதோ :

★ அவரைக் குழந்தை எழுத்தாளர் என்கிறீர்களே! குழந்தைகளுக்காகக் கதை எழுதுவாரா?

இல்லை, சன்மானத்துக்குப் பதில் சாக்லேட் கொடுத்தாலும் வாங்கிக் கொள்வார்

★ எங்க வீட்டிலே பற்பசை உபயோகிப்பதே இல்லை.

ஏன்?

அது சொத்தை எல்லாம் அழிக்கிறதாம்!

இப்படி இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். படிக்க ஆரம்பிக்குமுன் வயிற்று வலிக்கு மாத்திரை வாங்கி வைத்துக் கொண்டு ஆரம்பிப்பது நலம். ஆனால் எல்லா ஜோக்குகளுமே சிறுவர்களுக்கானவை அல்ல. சிறுவர்களுக்காகவும் எழுதிப் பரிசுகளும் பெற்றுள்ள எழுத்தாளர், சிறுவர்களுக்கான ஜோக்குகளை மட்டும் பிரித்துக் கடைசி ஓரிரு பக்கங்களில் தந்திருந்தால் வசதியாக இருந்திருக்கும்.

அன்புள்ள மகனுக்கு, டி. என். கவி சுப்ரமணியன், பக். 104, ரூ. 13/-, அமிழ்தம் பதிப்பகம், 15, முத்துப்பிள்ளை தெரு, வ. உ. சி. நகர், வேலூர் – 1.

கடித அமைப்பில், வாழ்வியல் அனுபவங்களை முன்மாதிரியாகக் காட்டி கடைப்பிடிக்க வேண்டிய பண்பு நெறிகளை அமரர் 'கவி' அவர்கள் சிறுவர்களுக்காகத் தந்திருக்கிறார். எங்கெல்லாம் பண்பாளர்களுக்கு இடர் வரும், தடுக்கி விழும்படி இருக்கும் என்பதையெல்லாம் சுவையாகக் குறிப்பிடுகிறார். மனித மனத்தைப் பண்படுத்தி, உயர்ந்த இலட்சியங்களுக்கு அழைத்துச் செல்லத் தூண்டும் பயன்மிக்க படைப்பு. தமிழில் வாழ்வியல் கட்டுரைகள் குழந்தைகளுக்கு அதிகம் இல்லை என்ற குறையை இது போக்கும்.

சின்னச் சின்னக் கதைகள் – எஸ். திருமலை, பக். 76, ரூ. 10/-, கங்கை புத்தக நிலையம், தீனதயாளு தெரு, சென்னை – 600 017.

ஏற்கெனவே நாம் கேட்ட கதைகள்தான். ஆனாலும் சொல்லும் விதம் மாறுபட்டுச் சுவையாகத் தரப்பட்டுள்ளது. கதைகளுடன் கூடவே அறிஞர் பெருமக்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளும் தரப்பட்டுள்ளன. கதைகளிலும் சரி, நிகழ்ச்சிகளிலும் சரி, சுவைக்குப் பஞ்சமில்லை. (உ-ம்) பரம ஏழை ஒருவனுக்கு தெய்வீக சக்தி மிக்க அவனது நண்பன் உதவ முன்வந்து, ஒரு விரலால் செங்கல்லைத் தொடுகிறான். அது பொன்னாகிறது. அதை எடுத்து ஏழையிடம் தருகிறான். அவன் மகிழ்ச்சியடையவில்லை. இப்படியே கதவு, சன்னல், என்று பல பொருள்களைத் தங்கமாக்கித் தந்தும் ஏழை நண்பன் மகிழ்ச்சி அடையாததைக் கண்டு வியப்புறும் நண்பன், ''உனக்கு என்னதான் வேண்டும்?'' எனக் கேட்கிறான். ''தெய்வீக சக்திமிக்க உன் விரல்'' என்கிறான் ஏழை. நல்ல படைப்பு.

கி. பி. 2100, டாக்டர் வ. தேனப்பன், பக். 88, ரூ. 12/-, அம்மன் பதிப்பகம், சுந்தர நிலையம், குருவிக்கொண்டான்பட்டி – 622 415, புதுக் கோட்டை மாவட்டம்.

சிறுவர்களுக்காக மட்டும் இன்றிப் பெரியவர்களுக்காகவும் எழுதிப் புகழ் பெற்ற டாக்டர் தேனப்பனின் அறிவியல் கட்டுரைத் தொகுப்பு இது. வரும் நூற்றாண்டில் அறிவியல் உலகம் எப்படி இருக்கும்? சாதாரண மக்களை எந்த அளவுக்குப் பாதிக்கப் போகிறது என்பதை மிகவும் சுவையாகத் தந்துள்ளார் ஆசிரியர். குறிப்பாக 'எதிர்காலவியல்' கட்டுரை, எல்லோரையும்

அதிசயத்திற்கு ஆளாக்கக் கூடியது. வீட்டில் இருந்தபடி கணிப்பொறி வாயிலாகத் தேர்வு எழுதும்(!) முறை, ரோபோக்கள் ஆதிக்கம் செலுத்தப் போவதை விளக்கும் கட்டுரைகளும் அறிவியல் உலகின் பிரமிக்கும் சாதனைகளை நன்கு அறிமுகப்படுத்துகின்றன. வரப் போகும் அறிவியல் யுகத்திற்கான நுழைவாயிலை ஆசிரியர் தெளிவாகத் திறந்து விளக்கியுள்ளார். எல்லோரும் படிக்க வேண்டிய நூல்.

குறும்புக்கார மாணவிகள் - சுப்புலட்சுமி கணபதி - பக். 54, ரூ. 10/-, ஆண்டாள் பதிப்பகம், த. பெ. எண். 1068, சைதை, சென்னை - 600 015.

பள்ளியையும், ஆசிரியைகளையும் கலங்க அடிக்கும் வால்முளைக்காத சிறுமிகள் ஐவர். அவர்கள் ஒற்றுமையாக ஆசிரியர்களையும், சக மாணவியரையும் தங்கள் வால்தனத்தால் கதி கலங்க வைப்பது, அவர்களை நல்லவர்களாக்க உறுதிபூண்டு விடாமுயற்சியுடன் பாடுபடும் ஆசிரியை பரணி இவர்களை வைத்து நாவல் பின்னப்பட்டுள்ளது. இறுதியில் சாரணர் முகாமுக்குச் செல்லும் ஐவரும் மற்றவர்களுக்கு உதவியாக இருந்து தீரச்செயல்கள் புரிந்து அகில இந்தியப் புகழ் பெறுகிறார்கள். நாவலைப் படிக்கும் போதே ஆசிரியை, மாணவிகளின் குறும்புகளை தினமும் ரசித்து மகிழ வேண்டிய சூழ்நிலையில் பணியாற்றும் பள்ளி ஆசிரியர் என்பது புலப்படுகிறது. புது கதைக்களம். சுவையாகக் கதையைக் கொண்டு போயிருக்கிறார். இருந்தாலும் தயாரிப்பில் கூடுதல் கவனம் செலுத்தியிருந்தால் மேலும் மெருகு கூடியிருக்கும். சிறுவர் நாவல் என்பதால் இரண்டொரு படங்களையும் சேர்த்திருக்கலாம்.

பல்லவ மல்லன் - டாக்டர் பூவண்ணன், பக். 160 - ரூ. 25/-, குழந்தை இலக்கியக் கழகம், 72, கிருஷ்ணா நகர், (மூவரசம்பட்டு அருகில்), சென்னை - 600 091.

சிறுவர்களுக்காக வரலாற்று நாவல் எழுதுவோர் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களே. இவர்களுள் குறிப்பிடத்தக்கவர் பூவண்ணன். இவரைப் பற்றிக் கோகுலம் வாசகர்களுக்கு அறிமுகம் தேவையில்லை. பிற்காலப் பல்லவர்களில் தனிச் சிறப்பு வாய்ந்த நந்திவர்மனின் இளமைக் கால நிகழ்ச்சிகளை வரலாற்று அடிப்படையில் அமைந்த நாவலாக ஆசிரியர் தந்துள்ளார். பல்லவ மல்லனாக குருவிடம் விடைபெறும் நிகழ்ச்சியில் இருந்து நாவல் தொடங்கி, நந்தி வர்மனாக முடிசூடிக் கொள்ளும்வரை பீடுநடை போடுகிறது. புத்தகத்தைக் கையில் எடுத்தால் முடிக்கும்வரை கீழே வைக்க முடியாது! பெருமை மிக்க படைப்பு!

மதிப்புரைக்கு நூல்களை அனுப்புவோர் இரண்டு பிரதிகளை ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். பொது நூல்களும், அறிவியல் நூல்களும், சிறுவர் நூல்களும் மட்டுமே மதிப்புரைக்கு ஏற்கப்படும். கட்டணம் கிடையாது.

புதையல் வேண்டாம்; மழை கொடுங்கள்!

அந்த வருடம் மழை பெய்ய வில்லை. சேமிப்பில் இருந்த அணைத் தேக்க நீர் போதாது போல் இருந்தது. மழை பொய்த்து விட்டால் விவசாயம் ஏது? விளைச்சல் ஏது? பார்த்தான் மன்னன். மந்திரியைக் கூப்பிட்டு யோசனை கேட்டான்.

''மந்திரியாரே! இந்த வருடம் விளைச்சல் இருக்காது போலிருக் கிறதே! நாட்டில் பஞ்சம் ஏற்பட்டு விட் டால் என்ன செய்வது?''

மந்திரி சொன்னார். ''மன்னா! நம் மக்கள் உழைப்புக்கு அஞ்சாதவர்கள்! அவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஏதேனும் பரிசுத் தொகை வைப்போம். இந்த வருஷம் அதிக உற்பத்தி காட்டுகிற விவசாயிக்குப் பரிசு என்று அறிவிப் போம். மக்கள் போட்டி போட்டுக் கொண்டு பாடுபடுவார்கள். பின், உற் பத்தி தன்னால் பெருகும்!''

மன்னருக்கும் இந்த யோசனை சரி என்றே பட்டது. நாடு முழுதும், 'அதிக உற்பத்தி செய்யும் விவசாயிக்கு 10,000 பொன் பரிசு' என்று தண்டோரா போட்டு அறிவித்தார்கள்.

மன்னர், எதிர்பார்த்தபடியே மக் களும் வெகு உற்சாகமுடன் உழைக்க ஆரம்பித்தார்கள். மிகவும் கஷ்டப்பட்டு கிணறு வெட்டி, பயிர் செய்தனர்.

அந்த ஊரில் முனியப்பன் என் றொரு விவசாயி. மிகவும் நல்லவன். கடுமையான உழைப்பாளி. ரொம்ப சிரமப்பட்டு கிணறு வெட்டியும் ஏனோ அவன் கிணற்றில் மட்டும் தண்ணீர் ஊறவே யில்லை! அதனால் அவன் இறைவனிடம் சென்று முறை யிட்டான். அவனது நல்ல மனத்திற்கு, கடவுள் அவனுக்கு ஒரு பரிசு தர விரும்பினார்.



மறுநாள் முனியப்பன் தன் கிணற்றைத் தோண்டச் சென்ற போது அங்கு ஒரு குடத்தில் புதையல் கிடைத்தது. பொன்னும், மணியும், ஏராளமான பணமும் அதில் நிறைய இருக்கக் கண்டான்! ஆனால் அவன் மனம் அதை நாடவில்லை. அவன் நேரே அவற்றை எடுத்துக் கொண்டு கடவுளிடம் சென்று, ''எனக்கு உழைக்காமல் கிடைத்த இந்தப் புதையல் வேண்டாம்! என் உழைப்பைக் கொடுத்து, இந்த நாட்டையும் வாழ வைக்க வசதியாக மழை பெய்து கிணற்றில் நீர் சுரந்தால் போதும்!'' என்று வேண்டினான்.

மறுநாளே முனியப்பனின் கிணற்றில் அருமையான நீர்!

முனியப்பன் சந்தோஷமாக உழைத்தான்! அந்த வருஷத்தின் அதிக உற்பத்தியாளனாகவும் வந்தான்! அரசன் அவனைக் கூப்பிட்டு, ''முனியப்பா! உன் கடும் உழைப்புக்கு இதோ என் பரிசு! ஏற்றுக் கொள்!'' என்று 10,000 பொன் முடிப்பை அளித்தான்.


முனியப்பன், ''மன்னா! தங்கள் கருணைக்கு நன்றி. ஆனால் இந்தப் பணத்தை, உற்பத்தி குறைவாயுள்ள விவசாயிகளின் நலனுக்கு அளித்து விடுங்கள். எனக்கு வேண்டாம்!'' என்று மறுத்து விட்டான்!


மன்னன் பார்த்தான். 'இத்தனை நேர்மையான, திறமையான, அதிக ஆசைப்படாத ஓர் விவசாயியா!' என்று வியந்து அவனைப் போற்றிப் பாராட்டி, பல பரிசுகளால் அவனை கௌரவித்து அனுப்பி வைத்தான்!


அவைகளை முனியப்பன் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டான். ஏனெனில் அவை உழைப்புக்குக் கிடைத்த பரிசுகள் அல்லவா? — விஜயலட்சுமி

எப்படிக் காப்பீர்? - போட்டி முடிவு

சரியான விடை







இந்தப் போட்டியும் இரண்டாயிரம் பேர்களுக்கு மேல் கலந்து கொண்டது என்ற பெருமையைப் பெறுகிறது. அதோடு 90% சரியாக பிரித்துக் காட்டி, திணற அடித்திருந்தீர்கள்! வெளி மாநிலங்களில் இருந்தும் பலர் இதில் உற்சாகமாகக் கலந்து கொண்டிருக்கிறீர்கள். பரிசு பெற்றவர்களைத் தேர்ந்தெடுக்க குலுக்கல் முறையே கை கொடுத்தது.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர் :

1. ஜி. சீனிவாசன், அரிசிபாளையம்
2. என். சாமுவேல், பெருந்தலையூர் அஞ்சல்
3. எல். மீனாக்ஷி, வேலூர் - 6
4. அ. அனில் அகமது, திருச்சி - 12
5. க. அரவிந்த், பூர்ணாநந்தம் பேட், விஜயவாடா
6. சஃபி சலீம், சென்னை - 14
7. அ. ஆனந்த குமார், தவளகுப்பம், பாண்டி - 7
8. கே. தஸ்தகீர், தஞ்சை - 9
9. அ. சங்கர், காவிகட்
10. டி.எஸ். மஹேந்தர், பம்பாய் - 19
11. க. உமாகார்த்திகா, பூதாமூர் அஞ்சல்
12. வெங்கடேஷ், பம்பாய் - 5
13. பிரசாந்த், மீரத், உத்தரப்பிரதேசம்
14. ஆர். பிரசாந்த் வெங்கடேஷ், இந்தூர், மத்தியப் பிரதேசம்
15. என்.கே. சுவாமிநாதன், சென்னை - 53
16. எம். நர்மதா, கோவை - 29
17. பி. நவீன் குமார், பெங்களூர் - 33
18. மேகா ஆர். நடராஜன், நாகபுரி - 440 022
19. கே. வேல், விழிதியூர் அஞ்சல்
20. எஸ். சாம்பவி, சேலம்

பரிசு பெற்றவர்களுக்கு கோகுலம் வாசகர் சார்பில் பாராட்டுகள். சரியான விடையை அனுப்பிய ஆயிரக் கணக்கானவர்களின் (1800 பேர்களுக்கும் மேல்!) பெயரையும் வெளியிடுவது என்றால் இரண்டு முழு கோகுலம் தேவை! எனவே இப்படி ஏராளமாகக் கலந்து கொண்டு திணற அடித்துள்ள கோகுல அபிமானிகள் அனைவருக்கும் வாசகர் சார்பில் நன்றி.

We are proud to present you the

Dynam®

LOW COST
MICROSCOPE

With all the features of the more sophisticated types.

The wonders of nature invisible to the naked eye, like the tiny cells of the leaf, cross-sectional details of the various stems, intricate parts of tiny insects, Micro-Organisms in a stagnant water-all these now become a reality with the Dynam Microscope.


Available at all leading Toy, Departmental Stores and scientific equipment dealers or direct from us.


DYNAM ENGINEERING CORPORATION
138, Gangadhara Chetty Road
BANGALORE-560 042. India.

NATIONAL AWARD WINNER



BUY THIS LITTLE
MICROSCOPE
& BUY YOURSELF AN
EDUCATION!





MAGNIFIES 60 TIMES WITH ADAPTOR 100 TIMES

I am interested in buying a Microscope at Rs. 75/- + 25/- towards taxes, Packing & Forwarding. Please send me .... kit/kits. I am enclosing a crossed D. D./Money Order (@ Rs. 25/- per kit.) as advance and promise to pay the balance when I receive the V. P. P.

NAME: ....

ADDRESS: ....

.... PIN ....



★ வி. கஜபதிராஜா, திருக்கோகர்ணம்.

ராகு காலம், குளிகை காலம் என்கிறார்களே, இதில் இந்தக் குளிகன் என்பது யார்?



குளிகன் என்பவர், சனீஸ்வர பகவானின் பிள்ளை. குளிகன் என்ற பெயரே குளிகை ஆயிற்று.

★ கு. முகமத் பேய்க், சித்தூர்.

பகத்சிங் ஏதோ புரட்சி இரகசியப் படையை அமைத்ததாகக் கூறுகிறார்களே, அதன் பெயர் என்ன?

இதன் பெயர் HINDUSTAN SOCIALIST REPUBLICAN ARMY என்பது.

★ வ. சத்தியசீலன், பட்டாபிராம்.

ஆல்பிரட் ஹிட்ச்காக்கின் படமான THE MAN WHO KNEW TOO MUCH என்ற ஆங்கிலப் படத்தை கறுப்பு வெள்ளையாகப் பார்த்ததாக எங்கள் தந்தை கூறுகிறார். இதையே கலர்ப் படமாகப் பார்த்ததாக என் அண்ணன் சாதிக்கிறார்! இதில் யார் கூறியது உண்மை? போட்டி வைத்திருக்கிறோம்.



இருவர் கூறுவதும் உண்மையே! முதலில் கறுப்பு வெள்ளையில் எடுக்கப்பட்ட இதே படம் பிறகு ஆல்பிரட் ஹிட்ச்காக்காலேயே கலரிலும் எடுக்கப்பட்டது. பரிசை எனக்கு அனுப்பி வைப்பதுதானே முறை?

★ வெ. செல்லம்மாள், புழல்.

இளம்பிள்ளைவாதத்திற்கான போலியோ மருந்தை யார் கண்டுபிடித்தார்கள்?

இளம்பிள்ளைவாதத்தை வரவழைப்பவை மூன்று வைரஸ்கள் என்பதை மருத்துவ விஞ்ஞானிகள் கண்டுபிடித்தும், அவைகளைப் பிரித்துப் பயன்படுத்த, (CULTURE) நிலையே பல ஆண்டுகளுக்கு நீடித்தது. இரு வைரஸ்களை மட்டும் டாக்டர் JONAS SALK, டாக்டர் ALBERT SABIN ஆகிய இருவரும் பிரித்தனர். மூன்றையும் பிரித்து இதற்கான வேக்சினை உருவாக்கிய பெருமையை பின்னால் வந்த



டாக்டர் JOHN FRANKLIN ENDERS தட்டிக் கொண்டார்.

இதற்கான நோபல் பரிசும் இவருக்கே (1954) கிடைத்தது. இருந்தும் போலியோ மருந்து என்றதும் டாக்டர் SABIN ஐத்தான் மருத்துவ உலகம் நினைக்கிறது!

★ ஏ. சுந்தர்பாபு, உடுமலை.


இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது அவசியம்தானா?



இறந்தவர்கள் ஆற்றியுள்ள தொண்டின் பயனை நாம் அனுபவிக்கும் போது, அவர்களை நன்றிக்கடனுக்காகவாவது நினைத்து அஞ்சலி செலுத்துவது நியாயம்தானே? வானொலியை நமக்குத் தந்த மார்க்கோனி 1937, ஜூலை 20 அன்று இறந்த போது உலக நாடுகள் எல்லாம் தங்கள் கம்பியில்லாத் தந்தி அலைவரிசைகளை ஒரே நேரத்தில் இரண்டு நிமிடங்களுக்கு நிறுத்தி வைத்தன. இந்தப் பெருமை யாருக்குக் கிடைக்கும்? இப்படி அஞ்சலி செலுத்துவது தவறா?

★ வ. வள்ளிநாயகம், புதுப்பாளையம்.

சூரியனை விடப் பெரிய கோள்கள் இருக்கின்றனவா?




இருக்கிறது என்கிறார்கள் வானியல் ஆராய்ச்சியாளர்கள். பூமியில் இருந்து 4600 இலட்சம் கி.மீ. (உயர) தூரத்திற்கு அப்பால், நமது சூரிய மண்டலத்தைப் போலவே இன்னொரு விண்வெளி மண்டலம் உள்ளது. இதன் தலைமைக் கோள், நமது சூரியனை விட இரண்டு பங்கு பெரிதாம்! பல மடங்கு அதிக ஒளிதரக்கூடியதாம்!

★ வெ. கஸ்தூரி, சிறுகடம்பூர்.

உலகத்தின் மிகப் பெரிய, குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருள் கடை எங்கே இருக்கிறது? அமெரிக்காவில்தானே?

இல்லை. இங்கிலாந்தில் - லண்டன் நகரில் இருக்கிறது. இதன் பெயர்



HAMLEYS. இது 6 மாடிகளைக் கொண்ட கடை. இதில் 400 பேர் வேலை பார்க்கிறார்கள் என்றால் பாருங்களேன்!

★ **து. பானுமதி, கடலூர்.**

சாதாரண சோப்புக்கும், டிட்டர்ஜண்ட் சோப்புக்கும் என்ன வித்தியாசம்?



மனிதனால் (செயற்கையாக) தயாரிக்கப்பட்ட பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்படுவதே டிட்டெர்ஜெண்ட் சோப். சாதாரண சோப்பு இயற்கையான பொருள்களைக் கொண்டு (கொழுப்பு, எண்ணெய்) தயாரிக்கப்படுவதாகும்.


★ **கு. பெருமாள்சாமி, சிதம்பரம்.**

இந்தியப் படங்களில் முதன் முதலாகப் பின்னணி பாடியவர் யார்?



நம்மிடம் உள்ள தகவல்களின்படி முதல் பின்னணிப் பாடகர் என்ற பெருமையைப் பெறுபவர் விதுவர்க. சரஸ்வதி தேவி என்ற பெண் கலைஞர். படம் அச்சுத் கன்யா (இந்தி). இது இப்பொழுது சர்ச்சைக்கு உரியதாகியுள்ளது. அயல்நாட்டில் எடுக்கப்பட்ட இந்தித் திரைப்படம் ஒன்று இதற்குப் போட்டி போடுகிறது. அதனால் இந்தியாவில் எடுக்கப்பட்ட திரைப்படங்களில் முதல் பின்னணிப் பாடகர் என்ற பெருமையை இவர் பெறுகிறார் என்று கூறிக் கொள்ளலாம்.

★ **கொ. குமாரவேலன், வேட்டைக்காரன்புதூர்.**




இந்திய சீன எல்லைக் கோடாக மக்மோகன்லைன் இருப்பது போல், இந்திய பாகிஸ்தான் எல்லைக் கோடு இருக்கிறதா? பெயர் என்ன?

எல்லைக் கோடு இல்லாத நாடும் இருக்கிறதா? இந்திய - பாகிஸ்தான் எல்லைக் கோட்டின் பெயர் 'ராட் கிளிப் லைன்'. இவர் இந்திய - பாகிஸ்தான் எல்லைக் கமிஷனின் தலைவராக இருந்தவர். முழுப் பெயர் சர் சிரில் ராட் கிளிப். இவர் பெயரையே எல்லைக் கோட்டுக்கு வைத்து விட்டார்கள்!

★ **உ. சிவாஜி, தஞ்சை – 2.**

எந்த ஓர் சாமிக்காவது ஆந்தை வாகனமாக இருக்கிறதா?


ஆந்தை மேல் என்ன இத்தனை அன்பு? கிளியை விட மனித இனத்திற்கு அதிக நன்மை செய்யும் ஆந்தையை, தென் மாநிலங்களைச் சேர்ந்த நாம்தான் அபசகுனம் மிக்க பறவையாக வெறுக்கிறோம். ஆனால் வட மாநிலங்களில் ஆந்தையை சுபசகுனமாகவே எண்ணுகிறார்கள்! காரணம் அவர்களுக்கு ஆந்தை லட்சுமியின் வாகனம்! இரவில், ஆந்தை




யில் லட்சுமி பவனி வந்து அருள்வதாக அவர்கள் நம்புகிறார்கள்!

★ சு. வரதாம்பாள், பெரிய காஞ்சிபுரம்.

பொதுப் பணிகளுக்கு நிதி திரட்ட ஏன் குழந்தைகளை வைத்துக் கலை நிகழ்ச்சிகளை நடத்துவதில்லை?



படிப்புக் கெட்டுப் போக வேண்டாம் என்ற நல்ல எண்ணமாக இருக்கும்! 1986 டிசம்பர் 11 அன்று புது டில்லியில் UNICEF அமைப்புக்காக பிரபல சரோட் கலைஞர் உஸ்தாத் அம்ஜத் அலிகான் ஒரு உதவி நிகழ்ச்சி வழங்கினார். இதில் உலகத்தின் பல நாடுகளில் இருந்தும் வரவழைக்கப்பட்ட 7-17 வயதிற்கு உட்பட்ட குட்டிக் கலைஞர்கள் 37 இசைக் கருவிகளைக் கொண்டு ஒரு முழுநேர நிகழ்ச்சியைத் தந்தனர். இவர்களை ஒன்று சேர்த்துப் பயிற்றுவித்த பெருமைக்கு உரியவர் அம்ஜத் அலிகானே. உங்கள் மனக்குறை தீர்ந்ததா?



★ கூ. அடைக்கலசாமி, புதுக்கோட்டை.

பைசா நகரத்து சாய்ந்த கோபுரம் போல் வேறு சாய்ந்த கோபுரங்கள் இருக்கிறதா?

ஒன்று அல்ல, இரண்டு சாய்ந்த கோபுரங்கள் இருக்கின்றன. முதலாவது மெடியாஸ் நகரில் (மத்திய ருமேனியா) உள்ள VICTORY DRUM TOWER. பகைவர் வருகையை அறிந்து முரசடித்து அபாய அறிவிப்புச் செய்ய 1450ல் கட்டப்பட்டது. கட்டும்போதே சாய்வுதான்! இரண்டாவது, செயின்ட் மோரீஸ் நகரில் (தென் கிழக்கு ஸ்விட்சர்லாந்து) மாதா கோவில் மணிக்காக 1573-ல் கட்டப்பட்ட மணி கோபுரம். கட்டும் போது நேராக இருந்த இது, 1738-ல் ஏற்பட்ட பூகம்பத்தில் சாய்ந்து விட்டது.


★ கி. பட்டாபிராமன், வரகூர்.

சட்டை அணியும் பழக்கம் ஆங்கிலேயர் வந்த பிறகுதான் நமக்கு ஏற்பட்டது என்கிறார் எனது ஆசிரியர். சரிதானா?



தவறு. புராண காலத்திலும், சங்க காலத்திலும் சட்டை அணிந்ததாக சான்றுகள் உள்ளன. சமஸ்கிருதத்தில் சட்டைக்கு கஞ்சுகம் என்று பெயர். தமிழில் மெய்ப்பை என்பது பெயர்.

பிருந்தாவனக் கவியரங்கம்



புத்தகம்!

நல்ல நல்ல புத்தகம்,
நம்மை உயர்த்தும் புத்தகம்!
வல்ல பெரிய அறிஞர்கள்,
வாழும் கருத்து புத்தகம்!

அறிவு சேர்க்கும் புத்தகம்,
அரிய செல்வம் புத்தகம்!
நெறிகள் சொல்லும் புத்தகம்,
நெஞ்சை அள்ளும் புத்தகம்!

பாட்டு சொல்லப் புத்தகம்,
பாடம் சொல்லப் புத்தகம்!
கேட்டு வாங்கு, கடையிலே.
கேடில்லாத புத்தகம்!

- இரா. பிரபாகரன்,
பட்டுக்கோட்டை.



பூனை!

வெள்ளை நிறப் பூனை - எங்கள்
வீட்டில் வளருது!
தொல்லை தரும் எலியை - அது
துரத்திப் பிடிக்குது!

என்னைக் காணும் போது - அது
ஏனோ ஓடுது!
எண்ண மெல்லாம் அதற்கு - எலி
மேலே இருக்குது!

பட்டு மெத்தை போல - பஞ்சு
மேனி கொண்டது!
தொட்டுத் தடவப் பார்த்தா - அது
தோழமை கொள்ளுது!

- ரா. கோபாலகிருஷ்ணன், வல்லநாடு.

கோடை காலம் வந்தது

வேனில் காலம் வந்தது,
வியர்வை எங்கும் கொட்டுது!
வானில் வெயில் காயுது,
வறண்டு தொண்டை வலிக்குது!

கோடைக் காலம் வந்தது,
குளுமை இன்றித் தவிக்குது!
ஓடை குளம் வறண்டது,
ஓய்ச்சல் இன்றித் துவண்டது!

விடுமுறை காலம் வந்தது,
விளையாட்டெல்லாம் கூடுது!
கெடுதல் இன்றி வாழவே
குந்திப் படிக்கத் தோணுது!

-இராம. வேதநாயகம்,
வடமாதிமங்கலம்.





பிருந்தாவனக் கவியரங்கம்

பார்! பார்!


ஓடிவரும் நிலா பார்!
ஓடிச்சென்று அருகில் பார்!
பாடிச் செல்லும் குயிலைப் பார்
பாட்டின் சுவை பருகிப் பார்!

இடியினோசை கேட்டுப் பார்
இணைந்து வரும் மின்னல் பார்
ஆடிவரும் மயிலைப் பார்
அழகுக் கிணை உண்டோ பார்!

கொடியில் பூக்கும் மலரைப் பார்
கொத்தாய் பறித்து முகர்ந்து பார்!
தேடித் தேனை சுவைத்துப் பார்
தெவிட்டா இன்பம் உண்டோ பார்!

- அ. இருதய சிலுவை ராசு, மதுரை.






உழைக்கணும்!

வானம் போல வாழணும்
வறுமைப் பேயை விரட்டணும்
தானம் செய்யப் பழகணும்
தானும் உயர உழைக்கணும்!

தந்தை, தாயை மதிக்கணும்
தமிழை நல்லாப் படிக்கணும்
இந்த உலகம் போற்றவே
இணையில்லாது உயரணும்!

- கே. நடராஜன், திருவண்ணாமலை.

நாய்க்குட்டி!

சின்னச் சின்ன நாய்க்குட்டி,
சிரிக்கும் செல்ல நாய்க்குட்டி!
கொள்ளை அழகு நாய்க்குட்டி,
கொஞ்சி மகிழ நாய்க்குட்டி!

வாலை ஆட்டிக் குதிக்குமாம்,
விரும்பிப் பாலைக் குடிக்குமாம்!
ஆளைக் கண்டால் குரைக்குமாம்,
அஞ்சிடாமல் இருக்குமாம்!

வீட்டைச் சுற்றி வந்திடும்,
வேடிக்கைகள் காட்டிடும்
பாட்டி, தடியைத் தூக்கினால்
படியில் வந்து முடங்கிடும்!

- என். பாலசுப்ரமணியம், பாலப்பட்டி.




பிருந்தாவனக் கவியரங்கம்

காத்திடுவோம்!

பொதுச் சொத்தைக் காத்திடுவோம்
பொல்லாத் தீமை சாய்த்திடுவோம்.
மதங்கள் வேற்றுமை அகற்றிடுவோம்
மனிதர் ஒன்றாய் வாழ்ந்திடுவோம்!

உயர்ந்த ஒழுக்கம் பெற்றிடுவோம்
உன்னத நிலையை அடைந்திடுவோம்
உயர்ந்த உள்ளம் கொண்டிடுவோம்
உண்மை உயர உழைத்திடுவோம்!

சாலை விதிகளை மதித்திடுவோம்
சாதி வெறியை அகற்றிடுவோம்
மழையைப் பொழிய வைத்திடவே,
மரங்கள் பலவும் நட்டிடுவோம்!

- ம. திலிப் குமார், சென்னை - 2.



நூலகம்!

நூல்கள் எல்லாம் குடியிருக்கும்
நாங்கள் விரும்பும் நூலகம்!
நல்ல பல கருத்துக்களை -
அள்ளித் தரும் ஆலயம்!

சிறுவர் முதல் கிழவர் வரை
சேர்ந்து பயிலும் ஆலயம்!
அறிவு வளர நூல்கள் பல
அமர்ந்திருக்கும் ஆலயம்!

- இரா. கோபாலகிருஷ்ணன்,
வல்லநாடு.

பூரி

வட்ட வட்ட பூரியாம்
விரும்பித் தின்னும் பூரியாம்
எண்ணெய் என்ற கடலிலே
எழுந்து வந்த பூரியாம்!
அன்னை பிசைந்த மாவிலே
அக்கா இட்ட பூரியாம்!
மண்ணில் உள்ள மாந்தர்கள்
மகிழ்ந்து உண்ணும் பூரியாம்!

- எஸ்.பி. புனிதா, இராசிபுரம்.



படிக்கணும்!

பட்டம் வாங்கப் படிக்கணும் - உயர்
பண்பை வளர்க்கப் படிக்கணும்!
திட்டம் போட்டுப் படிக்கணும் - மனத்
தளர்வு இன்றிப் படிக்கணும்!

பெற்ற நாட்டின் பெருமையை - நிதம்
பேணிக்காக்கப் படிக்கணும்.
உற்ற கலைகள் பெருமையை - உள
உயர்வை வேண்டிப் படிக்கணும்.

நல்ல நூல்கள் நட்பினால் - பல
நன்மை எல்லாம் கூடிடும்.
வல்ல மேதை எழுத்தினால் - நல்ல
வளமை பண்பு பெருகிடும்!

- கே. ரமேஷ், பெரும்பாலை.



பிருந்தாவனக் கவியரங்கம்

வாழைபோல வாழணும்!


வாழை மரம் பாருங்க!
வனப்பு ரொம்ப ஜோருங்க.
வாழும் வரை உதவிடும்
வழி அறிந்து கொள்ளுங்க!


முதலில் இலை கொடுக்குது.
முதிரும் போது மேலுமே
மடல் நிறைந்த பூவையும்
மனமுவந்து தருகுது!

காய்களென்ன, கனிகளென்ன
கட்டிவைக்க நார்களென்ன
சாயும் போதும் ஓய்ந்திடாமல்
சமைக்கத் தண்டு தருகுது!

வாழை போல வாழணும்.
வாழ்க்கை முழுக்க உதவணும்
வாழை குணம் கொள்ளணும்
வள்ளலாக சிறக்கணும்!

- பொன். குமார், சேலம் - 6.







நெல்!

பச்சை வயலில் விளையும் நெல்
பார்க்க அழகாய் இருக்கும் நெல்
இச்சை கொண்டு சமைத்தாலே
இனிதே பசியைப் போக்கும் நெல்.

அரிசிச் சோறாய் ஆக்கிடலாம்,
அப்படியேயும் பொரித்திடலாம்.
பெரிசாய்ச் சத்து அதற்குள்ளே
பொதிந்து கிடக்குது அறிந்திடலாம்!

- பி. மகேஷ், பள்ளிநெலியனூர்.

சேமிப்போம்!

சேமிப்பே உன் முதல் செலவு!
சிக்கனமே உன் முதல் வரவு!
நாமெப் போதும் சேமிப்போம்!
நலமாய் வாழ்வில் கால் வைப்போம்!

வரவுக்குள்ளே செலவென்ற
விதியை நாமே வகுத்திடுவோம்!
உறவு நமக்கு சேமிப்பே!
உயர்ந்தே ஒரு நாள் ஓங்கிடுவோம்!

சிறு சேமிப்பின் சிறப்புக்கள்
சிலதா? இல்லை! மிகப் பலவாம்.
உடனே நாமும் சேமிப்போம்
உயர்வோம் நாளும் வாழ்வினிலே!

- சுதாமணிமேகலை, வேலூர் - 4.





பிருந்தாவனக் கதையரங்கம்

சுதந்திரம்

குமார் ஒரு அழகான கிளியைக் கூண்டில் அடைத்து வளர்த்து வந்தான். அந்தக் கிளியை தினமும் எடுத்துக் கொஞ்சி விட்டு மறுபடியும் கூண்டிலேயே அடைத்து விடுவான். அவனுடைய அம்மா, ''குமார், அந்தக்கிளி பாவம். அதை விட்டுவிடு. அது சுதந்திரமாக வாழட்டும்'' என்று பல முறை கூறியும் அவன் கேட்கவில்லை.



ஒரு நாள் அவனுடைய பள்ளியில் பன்னிரண்டு மாடிக் கட்டடத்தைச் சென்று சுற்றிப் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தனர். குமாரும் அதில் கலந்து கொண்டான். எல்லோரும் லிப்ட் மூலம் மேலே சென்றனர். திடீரென்று கரண்ட் கட் ஆனதால் பாதியிலேயே 'லிப்ட்' நின்று விட்டது. வெகு நேரமாகியும் கரண்ட் வரவில்லை. குமார் பயத்தால் அழுதே விட்டான். அப்போதுதான் அவனுக்கு சுதந்திரத்தின் அருமை புரிந்தது. ஒரு வழியாக கரண்ட் வந்தது. அவன் கட்டடத்தைக் கூடச் சுற்றிப் பார்க்காமல் கூண்டிலிருக்கும் கிளியை விடுவித்து சுதந்திரம் வழங்க விரைவாக வீட்டுக்குக் கிளம்பினான். அவனுடைய அம்மாவிற்குத் தெரியும் அவன் திருந்தி விடுவான் என்று. ஏனெனில் ஆசிரியரிடம் சொல்லி கரண்ட் கட் பண்ணச் சொல்லியதே குமாரின் அம்மாதானே!

- பி. ஜெயக்குமார், வந்தவாசி.



மூன்று பிள்ளைகள்

ஒரு வயதான கிழவருக்கு மூன்று மகன்கள் இருந்தனர். அவர் இறக்கும் சமயத்தில் மூன்று பேரையும் அழைத்து ''என்னிடம் உங்களுக்குக் கொடுக்க எதுவும் இல்லை. இந்த மூன்று பொருள்கள்தான் இருக்கின்றன. இவற்றை வைத்து சமயோசிதமாகப் பிழைத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறி முதல் மகனுக்கு ஒரு சேவலையும் இரண்டாம் மகனுக்கு ஓர் அரிவாளையும் மூன்றாம் மகனுக்கு ஒரு பூனையையும் கொடுத்து விட்டு இறந்தார்.

முதல் மகன் சேவலை எடுத்துக் கொண்டு ஒரு தீவிற்குச் சென்றான். அந்தீவில் சேவல் கிடையாது. அதனால் அங்கு உள்ள மக்கள் பொழுது விடிவதே தெரியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவன் அந்த மக்கவிடம் சேவலைப் பற்றிச் சொல்லி அதைத் தந்தான். அவர்கள் மகிழ்ச்சியடைந்து ஒரு கழுதை சுமக்குமளவிற்கு அவனுக்கு தங்கத்தைப் பரிசாகக் கொடுத்தார்கள்.

இரண்டாவது மகன் மற்றொரு தீவிற்குச் சென்றான். அங்குள்ள மக்களுக்கோ அரிவாளைப் பற்றித் தெரியாது. நெல்லை கையால் பிடுங்கி கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தனர். அவன், தான் கொண்டு போன அரிவாளால் கதிர்களை அறுக்கச் சொல்லிக் கொடுத்தான். மகிழ்ச்சியடைந்த அவர்கள் ஒரு படகு நிறைய அவனுக்குப் பொன்னும் மணியும் கொடுத்து அனுப்பி வைத்தார்கள்.

மூன்றாம் மகன் ஒரு நாட்டிற்குச் சென்றான். அங்கு எலிகளின் தொல்லை அதிகம். அங்கு பூனைகளே கிடையாது. எலிகளால் மக்கள் படும் துன்பத்தைப் பார்த்த அரசன் 'எலிகளை ஒழிப்பவருக்கு என் மகளைத் திருமணம் செய்து இந்நாட்டின் அரசனாக்குவேன்' என்று அறிவித்திருந்தான். மூன்றாம் மகன் தான் கொண்டு போன பூனையை வைத்து எல்லா எலிகளையும் ஒழித்தான். இளவரசியை மணந்து கொண்டு சுகமாக வாழ்ந்தான்.

– பி. ஜெயக்குமார், வந்தவாசி.

தன்னம்பிக்கை

ஒரு காட்டில் இரண்டு தவளைகள் இருந்தன. அவை இரண்டும் தாவித்



தாவிக் குதித்துக் குதித்து ஒரு குடியானவன் வீட்டிற்குச் சென்றன. அந்த விவசாயியின் மனைவி அப்பொழுதுதான் பாலைக் காய்ச்சி, உறை ஊற்றி வைத்திருந்தாள். ஆனால் பால் பானையை மூட மறந்து போயிருந்தாள்.

மூடாத பால் பானையைப் பார்த்த இரண்டு தவளைகளும் மிகவும் சந்தோஷப்பட்டன; தாவி, பானைக்குள் குதித்தன.

இரண்டு தவளைகளும் வயிறு முட்டப் பாலைக் குடித்தன. வெளியேற முயன்ற போது, வயிறு நிறைய பால் இருந்ததால் அவற்றால் பானைக்கு வெளியில் குதிக்க முடியவில்லை.

ஒரு தவளை தனது அவல நிலையை நினைத்து வருந்தியது. இனிப் பிழைக்க முடியாது என்று மிகவும் சோர்ந்து போனது. பால் பானைக்குள் மூழ்கி செத்துப் போனது. மற்றொரு தவளையோ, தன்னம்பிக்கையை விடவில்லை. தாவித் தாவிக் குதித்து பார்த்தது. அது குதிக்க, குதிக்க உறை ஊறிய பால், மோர் ஆனது. அதில் வெண்ணெயும் திரண்டது. வெண்ணையின் மேல் ஏறி, பானைக்கு வெளியே குதித்துச் சென்று விட்டது.

தன்னம்பிக்கையும் முயற்சியும் இருந்தால் வாழ்க்கையில் வெற்றி பெறலாம் என்பதை அந்தவளை எல்லோருக்கும் நன்கு உணர்த்தியது.

– தக்கோலம் அ. முஸ்தபா.

சின்னச் சின்ன தப்புகள்

விநோதுக்கு வயது பன்னிரண்டு. ஏழாம் வகுப்பு. அவன் புத்திசாலியாக இருந்தாலும் ஆசிரியருக்கும், பெற்றோருக்கும் தொந்தரவு கொடுப்பான். நன்றாகப் படித்து மார்க் வாங்குவான். ஆனால் விஷமம் அவனை விட்ட பாடில்லை. வேண்டுமென்றே தன்னை விடச் சிறிய குழந்தைகளை அழ வைத்து வேடிக்கை பார்ப்பான். அது அவனுக்கு மிகவும் பிடித்தமான விளையாட்டு.



ஆசிரியர்கள் கூறும் அறிவுரைகளும், பெற்றோரின் நல்லுரையும் அவனை மாற்றவில்லை.

''பெரிய ஆளாக வளர்ந்தவுடன் இந்த மாதிரி சேட்டைகளை நானே விட்டுடுவேன். இதுக்கெல்லாம் வருத்தப்படுறீங்களே!'' என்பான்.

விநோதின் மாமா ஊரிலிருந்து வந்திருந்தார். மாமாவை அவனுக்கு ரொம்பப் பிடிக்கும். நல்ல நல்ல கதைகள், பாடல் எல்லாம் சொல்லுவார்.

விநோத்தின் அப்பா, மாமாவிடம் அவனைப் பற்றிய குறைகளைக் கூறி வருந்தினார். மாமா அவனைத் திருத்த முயற்சி எடுத்தார்.

ஒரு நாள் விநோதை ஒரு தாளில் ஒரு சிறிய புள்ளி வைக்கச் சொன்னார். விநோதும் ஏதோ விளையாட்டு என்று சிறிய புள்ளி வைத்தான். ''சரி இதைப் பெரிய புள்ளியாக்கு'' என்றார் மாமா. அவனும் பெரிய புள்ளியாக்கினான். ''சரி இப்ப இதை அழிக்காமல் பழைய படிக்கு சிறிய புள்ளியாக்கு பார்க்க

லாம்'' என்றார் மாமா. ''அழிக்காம அது எப்படி மாமா முடியும்?'' என்றான் -வினோத்.

''இதே மாதிரிதான் - பெரிய ஆளா வந்தவுடன் சின்ன தப்பை விடணும்னு நீ நினைச்சாலும் அது உன்னால் முடியாது. சின்ன தப்பு வேணும்னா பெரிசா வளருமே தவிர, பெரிசு சின்னதாகவே ஆகாது.'' வினோத் தவறை உணர்ந்தான். ''நல்ல பிள்ளை'' என எல்லோரிடமும் பெயரெடுத்தான்.

– சுகாராஜ், மதுரை – 2.

அடிமையா?

வானம் ஒரு நாள் பூமியைப் பார்த்து அசட்டுத்தனமாக, ''ஏ, பூமியே! ஏன் நீ மனிதர்களுக்கும் அங்கு வாழும் உயிரினங்களுக்கும் அடிமையாய் இருக்கிறாய்?'' என்று கேட்டது. அதற்கு பூமி, ''ஏ, வானமே! நான் ஒன்றும் இங்கு அடிமையாய் இல்லை'' என்று பதில் கூறியது.



வானம் விடவில்லை! ''உன்னைத் தான் வெட்டுகிறார்கள், உழுகிறார்கள், ஆனால் நீயோ, தினமும் அவர்களைச் சுமக்கும் அடிமையாய் இருக்கிறாய். என்னைப்பார்! எவ்வளவு சுதந்திரமாக மனிதர்களுக்கெல்லாம் எட்டாத தூரத்தில் இருக்கின்றேன்'' என்று இழிவாகப் பேசியது.

கோபம் கொண்ட பூமி, ''ஏ, சோம்பேறி வானமே! நீதான் மனிதர்களையும், உயிரினங்களையும் சுமக்கப் பயந்து மேலே இருக்கிறாய். நான் அப்படியல்ல. எனக்கு இறைவன் வழங்கியுள்ள சக்தியைக் கொண்டு இந்த மனிதர்களையும் மற்ற உயிரினங்களையும் நான் வாழ வைக்கின்றேன். நீ அப்படி அல்லாமல் சோம்பேறித்தனமாக யாருக்கும் பயன் படாமல் மேலே இருக்கின்றாய்! அதற்காக வருந்தாது பெருமை வேறுபடுகிறாய்!'' என்று சொன்னது.

உண்மையை உணர்ந்த வானம் தன் தவறை உணர்ந்து பூமியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டது.

– சி.பூ. இனியவன், மேலவாசல்.

சிறந்த ஆயுதம்

ஒரு முறை அக்பர் தன் சக அமைச்சர்களுடன் வெளியே உலாவச் சென்ற போது தன்னுடைய அமைச்சர்களிடம் 'எது சிறந்த ஆயுதம்?' என்று வினவினார். அப்போது பீர்பாலும் அங்கு இருந்தார். அக்பரின் கேள்விக்கு ஒருவர் ஈட்டிதான் சிறந்த ஆயுதம்' என்றார். இன்னொருவர் 'வாள்தான் சிறந்த ஆயுதம்' என்றார். இன்னொருவர் 'பீரங்கி தான் சிறந்த ஆயுதம்' என்றார். இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டு பீர்பால் மௌனமாக இருந்தார். உடனே அக்பர் 'பீர்பால் இந்த விஷயத்தில் உன்னுடைய கருத்து என்ன?' என்று கேட்டார். அதற்கு பீர்பால் 'ஒருவருக்கு ஆபத்து நேரும் காலத்தில், எது கையில் கிடைக்கிறதோ அதுதான் சிறந்த ஆயுதம்' என்று பதில் கூறினார். அதைக் கேட்ட மற்ற அமைச்சர்கள் 'என்ன




முட்டாள்தனமான பதில்!' என்று கூறினார்கள். எள்ளி நகையாடினார்கள்.


அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே ஒரு யானை வீதியில் வேகமாக ஓடி வந்து கொண்டிருந்தது. அது கிட்டே வருவதைக்கண்ட பீர்பால் ஒரு சுவற்றின் பக்கத்தில் உறங்கிக் கொண்டிருந்த பூனையின் வாலைப் பிடித்துத் தூக்கி, ஓடி வந்து கொண்டிருந்த யானையின் மீது போட்டார். பயந்து போன பூனை யானையைப் பிராண்டி விட்டுக் கீழே இறங்கி ஓடிவிட்டது! மிரண்டு போன யானை வேறு பக்கமாக ஓடத் தொடங்கியது. இதைக் கண்ட அக்பர் 'பீர்பால் நீ சொன்னது உண்மைதான். ஆபத்தின் போது எது கையில் கிடைக்கிறதோ அதுதான் சிறந்த ஆயுதம்' என்று ஒப்புக் கொண்டார்.

பீர்பாலை எள்ளி நகையாடிய மற்ற அமைச்சர்கள், தங்கள் எண்ணம் பலிக்காததைக் கண்டு தலை குனிந்தனர். அதோடு பீர்பால் மட்டும் எப்படி தனது அறிவுத்திறனை இந்த அளவுக்கு பயன்படுத்தி எல்லாவற்றிலும் வெற்றி அடைகிறார் என்பது அவர்களுக்கு புரியாத புதிராக இருந்தது.

- இந்திரா கோபாலன்.



"ஆடுபுலியாட்டம் ஆடலாமா?"


JUNE ' 93
BRINGS IN SCHOOL
LIFE AGAIN!
A LOOK
INTO
THE WORLD OF
ADMISSIONS!
BUY YOURSELF A
COPY TODAY!
96 Pages
for just Rs. 3/-
GOKULAM
The monthly magazine for children
Gokulam, Ekkaduthangal,
Madras - 97

சின்னப்பையன் பெரிய டாக்டர்



அமெரிக்காவில் படித்து வரும் தமிழ் நாட்டைச் சேர்ந்த சிறுவன் 17 வயதில் டாக்டராகி கின்னஸில் இடம் பெற்றுள்ளான். உலகிலேயே மிகக் குறைந்த வயதில் டாக்டரானவன் இவனே. பாலமுரளி கிருஷ்ணா (பாடகர் அல்ல) என்ற இச் சிறுவன் வடஆற்காடு அம்பேத்கர் மாவட்டம் வேலூரில் பிறந்தவன். பெற்றோர்களுடன் அமெரிக்காவில் படித்து வருகிறான். அமெரிக்காவில் படிப்பில் மிகச் சிறப்பாக விளங்கும் மாணவர்களை 2, 3 வகுப்புகள் ஒரே ஆண்டில் தாண்டிப் போகும் நடைமுறை உள்ளது. அதன் படி 12 வயதான பாலமுரளி நியூயார்க் பல்கலைக் கழக கல்லூரியில் 3 வது ஆண்டு மாணவனாகச் சேர்ந்துள்ளான். இந்த ஆண்டு அவன் மருத்துவக் கல்லூரியில் சேர முடியும். இதனால் அவன் தனக்கு 17 வயது 10 மாதம் ஆகி இருக்கும் போதே டாக்டராகி விட முடியும்!




இப்போது 18 வயது 3 மாதத்தில் டாக்டர் படிப்பை முடித்ததுதான் உலக சாதனையாக உள்ளது. அதை பாலமுரளி முறியடித்து கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளான்.

படிப்பில் தனது இந்த சாதனையைப் பற்றி பாலமுரளி கூறுகையில், ''பெற்றோர்களின் ஊக்கத்தாலும், கடவுளின் ஆசியாலும் தான் நான் இதைச் செய்ய முடிகிறது எனக் கருதுகிறேன்'' என்றான்.

'4 வயதாக இருக்கும் போதே டாக்டராக வேண்டும் என முடிவு செய்தேன்' என்றும் பாலமுரளி கூறுகிறான்.

தனது மூத்த சகோதரன் ஜெயாவுடன் சேர்ந்து தனது 11வது வயதிலேயே ''எய்ட்ஸ்'' பற்றிய புத்தகம் ஒன்று எழுத உதவியாக இருந்து அந்த புத்தகத்தின் ஆசிரியன் ஆனான் இந்தச் சிறுவன்!

– தங்க சங்கர பாண்டியன்




"தவளை ரேஸ்ல நீ முதல்ல வந்தியே, எப்படிடா....?"

"எனக்குப் பின்னால பாம்பு ஒண்ணு துரத்திச்சே, கவனிக்கலையா நீ....?"

- சீர்காழி வி. ரேவதி



வி. ஆர்



கோட்டக்கரை இ. இராமசாமி

சிரிப்..





கோட்டக்கரை இ. இராமசாமி



சீர்காழி க. ஜெயந்தி

செ

ஸ்காட்லாந்து கதை.

பட்டுக் குல்லா, பறந்து போ!

பியோநாக் அழகான காட்டு வாசிப் பெண். அமெரிக்காவுக்கு வடக்கே உள்ள ஸ்காட்லாந்து நாட்டில், ஒரு சிறு தீவில் வசித்து வந்தாள்.

பியோநாக் இருந்தது கிராமப் பகுதி. ஸ்காட்லாந்து நகர்ப்புறத்தில் பணிபுரிய வேண்டும் என்று அவளுக்குக் கொள்ளை ஆசை! கிராமத்தின் எளிமையான, அமைதியான வாழ்க்கை அவளுக்குப் பிடிக்கவில்லை. படாடோபமான, பகட்டு வாழ்க்கையின் மேல் அவளுக்குத் தணியாத ஏக்கம் இருந்தது.

ஆனால் தாய், தந்தையரோ, வேறு உறவினரோ யாரும் துணைக்கு இல்லாத நிலையில், தனியாக ஒரு பெண் எப்படி பட்டணத்திற்குப் போக முடியும்? ஆகவே பியோநாக் வேறு வழியின்றி, கிராமத்திலேயே வாழும்படி ஆயிற்று.

பியோநாக், ஒரு நாள், 'டன்கன்' என்ற மீனவ வாலிபன் ஒருவனைச் சந்தித்தாள். டன்கன் நல்லவன். கடினமான உழைப்பாளி. இருப்பதைக் கொண்டு மன அமைதி அடைபவன். எளிய வாழ்க்கையையே விரும்புபவன். டன்கனிடம் மீன் வாங்கப் போன பியோநாக், அவனுடன் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தாள். அவனும் தாய், தந்தையரை இழந்தவன். உறவினர் வேறு யாரும் இல்லை! எனவே இருவரும் திருமணம் செய்து கொள்ள முடிவெடுத்தனர்! விரைவில் திருமணமும் நடந்தது. நாட்கள் அமைதியாகக் கழிந்தன.

ஆனால், நமது 'பியோநாக்'தான் ஆடம்பர வாழ்க்கையை விரும்புபவளாயிற்றே! வசதியான, ஆடம்பரமான வாழ்வுதான் அவளது ஒரே குறிக்கோள். ஆனால், டன்கன் ஒரு சாதாரண மீனவன். அவனால் எப்படித் தன் மனைவியின் ஆடம்பரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும்? ஆகவே, தினமும் இருவருக்கும் சண்டைதான்!

''என்ன கணவன் நீ! மனைவியின் ஆசைகளை நிறைவேற்ற முடியவில்லையே உன்னால்? சாப்பிடுவதற்கு வசதியாக நல்ல ஸ்பூன் கூட இல்லை. இது என்ன வாழ்க்கை? ஒரு கப் அண்ட் சாஸர் இல்லை. நல்ல நாற்காலி இல்லை. அவ்வளவு ஏன், உடுத்திக் கொள்ள, நல்லதாக ஒரு சட்டை கூட இல்லை! நீ என்னதான் செய்யப் போகிறாய் இதற்கெல்லாம்?'' என்று பியோநாக், டன்கனிடம் சண்டை பிடிப்பாள்!

பாவம், டன்கன்! இவையெல்லாம் வாங்குவதற்கு எத்தனை பணம் தேவை? பணத்திற்கு அவன் எங்கே போவான்?

ஒரு நாள் தன் இயலாமையை எண்ணி வருந்தியபடி டன்கன், அருகி

தமிழில் : தம்பி சீனிவாசன்.



விருந்த குன்றின் மேல், ஏதோ சிந்தித்தபடி ஏறிச் சென்றான்!

உச்சிக்குச் சென்றதும், சற்று ஓய்வெடுக்க நினைத்தான். சட்டென்று நின்றான்!

யாரோ சிலர் உலவும் சப்தம் அங்கிருந்த புதருக்குப் பின்புறமிருந்து கேட்டது. டன்கன் உற்றுக் கேட்டான்! சற்று நேரத்தில் சப்தம் நின்று விட்டது! டன்கன் மெல்ல அடியெடுத்து புதரின் அருகில் சென்று பார்த்தான்.

யாருமில்லை!

ஆனால்....

அந்த இடத்தில் சில தங்கக் கோப்பைகள், பொன் தட்டுக்கள், பொன் ஸ்பூன்கள் இருந்தன! வியப்பால் டன்கனின் கண்கள் விரிந்தன!

ஆஹா! எப்பேர்ப் பட்ட வாய்ப்பு! மனைவி கேட்ட சாதா ரணக் கோப்பைகள், ஸ்பூன்களையே நம்மால் வாங்க முடியவில்லையே என்று வருந்தினோம். இப்போது பொன் கோப்பைகள், பொன் ஸ்பூன்களை கிடைத்திருக்கே என்று மகிழ்ந்தான் டன்கன்.

ஆனால் உடனே, 'இவை அடுத்தவர் பொருளல்லவா? இவற்றை எடுப்பது பாவமாயிற்றே!' என்றும் நினைத்தான். இறுதியில் 'கிராமத்துக்குப் போய் மனைவியிடம் இது பற்றிச் சொல்லி, முடிவு செய்யலாம்' என்று அவைகளைப் புதரோரம் நகர்த்தி வைத்து விட்டு வேக வேகமாக மலையிலிருந்து கீழே இறங்கினான்.!

விஷயத்தைக் கேட்டதும் பியோநாக் குதித்தாள்.

''ஏன் அதை நீங்கள் எடுத்து வரவில்லை?''

''அவை நம்முடையது அல்லவே?''

''அதனால் என்ன? நம் ஏழ்மைக்கு விடிவே வரக் கூடாதா? போங்கள்! போய்க் கொண்டு வாருங்கள்!'' என்றாள் பியோநாக்.

வேறு வழியின்றி, டன்கன் மறுபடியும் மலைக்குச் சென்றான்! இப்போதும் அங்கு, யாரோ உலவுவது போன்ற சப்தம்! டன்கன் புதர் பின்னால் ஒளிந்து கொண்டு நடப்பதைக் கவனித்தான்.

அங்கே....

மூன்று குள்ளர்கள்!

ஒவ்வொருவர் தலையிலும் ஒரு நீலக் குல்லாய்!

முதல் குள்ளன் பேச ஆரம்பித்தான்.

''அடேய்! நாம் இல்லாத போது யாரோ இங்கு வந்திருக்கிறார்கள்! நமது கோப்பைகளையும் ஸ்பூன்களையும் எடுத்துப் பார்த்திருக்கிறார்கள்!''

டன்கன் பயந்து விட்டான்! எங்கே குள்ளர்கள் தன்னைக் கொன்று விடுவார்களோ என்று பயந்து போய் இன்னும் நன்கு பதுங்கிக் கொண்டான்!

அடுத்த நீலக் குல்லா குள்ளன் சொன்னான், ''ஆமாம்! யாரோ வந்திருக்கிறார்கள். நம் பொருட்களைத் தொட்டிருக்கிறார்கள்!''

மூன்றாவது குள்ளன் சொன்னான், ''மற்றவர் தொட்ட பொருள், நமக்கு வேண்டாம்! நாம் புதிதாக வேறு பொருள்களைக் கொண்டு வருவோம்! வாருங்கள்!''

''அதானே! நமக்குப் பொருள்களுக்கா பஞ்சம்? இந்தப் பொருள்களை எடுத்த அதே அரண்மனைக்கு மறுபடி போவோம் வாருங்கள்!''

டன்கன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, மூவரும் கை கோர்த்துக் கொண்டார்கள்.

''பட்டுக் குல்லா லண்டன் போ!

பறந்து ராஜா அரண்மனை போ!'' என்று கூறியபடி குல்லாவை அணிந்தார்கள்!

அவ்வளவுதான்!

மூவரும் விண்ணிலே பறக்க ஆரம்பித்து விட்டார்கள்!


டன்கன் அவர்கள் போவதை வியப்புடன் பார்த்தான்! குள்ளர்கள் வேண்டாம் என்று விட்டுப் போன பொன் தட்டுகளையும் பொன் ஸ்பூன்களையும் பொன் கிண்ணங்களையும் எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தான்.

பியோநாக்குக்கு ஓரே குஷி. புதுப் பொருள்களைப் பார்த்துப் பரவசமானாள். ''எந்தப் பட்டணத்தில் இப்படிப்பட்ட பொருள்கள் கிடைக்கும்!'' என்று டன்கனை மிகவும் பாராட்டினாள்!

''நீ ஆசைப்பட்ட பொருள்கள் கிடைத்து விட்டன. இனி திருப்தி தானே!'' என்று டன்கன் கேட்டான்.

''இதோ பார்! நாம் ஒரு சிரமமும் படாமலேயே இவையெல்லாம் கிடைத்திருக்கின்றன. ஏன்? கடவுள், நாம் சந்தோஷமான வாழ்வு வாழ்வதையே விரும்புகிறார் என்பது, இதிலிருந்து புரியவில்லையா? ஒன்று செய். என் சீப்பு பல் உடைந்து விட்டது. என் முகம் பார்க்கும் கண்ணாடியின் பளபளப்பு போய்விட்டது. இவை இரண்டையும் எடுத்துப் போய், அந்த மலை உச்சியில் போடு. பதிலுக்கு புதுசு வருமா பார்ப்போம்'' என்றாள் பியோநாக்.

வேறு வழியின்றி டன்கன் அவள்




சொன்னபடி காலையிலே மலைக்குப் போய் அப் பொருட்களைப் போட்டு வந்தான். மாலையில் போய்ப் பார்த்தால் -

என்ன ஆச்சர்யம்?

புத்தம் புதிதாய் பளபளக்கும் தந்தச் சீப்பும், வெள்ளிச் சட்டம் மாட்டிய கண்ணாடியும் அங்கு இருந்தன!

அவைகளைக் கொண்டு வந்து மனைவியிடம் தந்த டன்கன், ''பார்! நீ விரும்பியபடியே கிடைத்துவிட்டது! இனியாவது திருப்தியாக இரு!'' என்றான்.

தன் கூந்தலை தந்தச் சீப்பால் வாரி, வெள்ளிக் கண்ணாடியில் பெருமையுடன் முகம் பார்த்தபடியே பியோநாக் சொன்னாள், ''அழகுதான்! வலிய வருகிற அதிர்ஷ்டத்தை விடுவதாக்கும்!



அதெல்லாம் முடியாது. இனி இதே போல் ஒவ்வொரு பொருளாகப் போய் போட்டுவிட்டு வாருங்கள்!'' என்றாள்.

பாவம் டன்கன். அவன் என்ன செய்வான்! வேறு வழியின்றி பியோநாக் சொல்படியே வீட்டிலிருந்த பழைய

தட்டுமுட்டு சாமான்களை ஒவ்வொன்றாக எடுத்துச் சென்று மலையில் போட்டு வருவதும், பின் அவை புதிதாக மாற்றியபடித் திரும்பிக் கொண்டுவருவதும் அவன் தினசரி கடமைகளாகி விட்டன!

இப்படியே நடந்து வருகையில் ஒரு நாள் டன்கன், வீட்டில் இருந்த பழைய போர்வை ஒன்றை மலைக்குக் கொண்டு சென்றான். அன்று, அவன் அறியாமல் பியோநாக்கும் உடன் சென்று அவன் என்ன செய்கிறான் என்பதை ரகசியமாகக் கவனித்தாள்.

டன்கன் போர்வையை மலை உச்சியில் போட்டு வந்ததும், மூன்று குள்ளர்களும் அதை எடுத்துக் கொண்டு, தலையில் குல்லாவை வைத்து,

''பட்டுக் குல்லா லண்டன் போ!

பறந்து ராஜா அரண்மனை போ!''


என்று சொன்னவுடன் பறந்து போனதையும், சிறிது நேரத்தில் பட்டு, ரத்னக் கம்பளத்துடன் திரும்பி வருவதையும் பியோநாக் பார்த்து விட்டாள்! அவளுக்கு மட்டற்ற மகிழ்ச்சி!

அன்று மாலை அவள் தன் கணவனிடம் கேட்டாள், ''சும்மா சும்மா எத்தனை முறைதான் மலை உச்சிக்குப் போய், பழைய சாமான்களைப் போட்டு, புதியவற்றைப் பெற்று வருவது? நம்மிடம் மட்டும் அந்தப் பட்டு நீலக் குல்லாய் இருந்தால், நாமே லண்டனுக்குப் பறந்து போய் மொத்தமாகக் கொண்டு வந்து விடலாமே!'' என்றாள்.

தன் மனைவியின் பேராசை கண்டு டன்கன் மனம் வருந்தினான்.

''உங்க அப்பா பெரிய பாகவதரா இருக்கலாம்... அதுக்காக, இது என்ன 'சீசன்'னு கேட்டா, 'சங்கீத சீசன்'னு நீ சொல்றது நல்லா இல்லே!''

– சீர்காழி
வி. ரேவதி



''பியோநாக்! போதும் இத்தனை வசதி. இதற்கு மேல் நமக்கு எதற்கு ஆடம்பரம்! உன் பேராசையை விட்டு விடு!'' என்றான்.

ஆனால் பியோநாக் கேட்பாளா? அவள் தன் கணவனைத் தொந்தரவு செய்ய ஆரம்பித்தாள்.

டன்கன் என்ன செய்வான்? மன வருத்தத்துடன் மீண்டும் அவன் மலைக்குப் போனான்.

குள்ளர்களிடமிருந்து தொப்பியை எப்படி வாங்குவது? அவர்கள் என்ன அந்தனை சுலபத்தில் தந்து விடுவார்களா என்ன?

இவ்வாறு எண்ணியபடி டன்கன் மலை உச்சிக்குப் போனான்.

அங்கு -

மூன்று குள்ளர்களும் உட்கார்ந்து ஏதோ சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்!

முதல் குள்ளன் பேச ஆரம்பித்தான், ''யாரோ தினம் இங்கு வருகிறார்கள். அடிக்கடி பல பழைய பொருட்கள் இங்கு கிடைக்கின்றன. நாம் மெனக்கெட்டு, அவைகளைப் புதிதாக மாற்றி வந்தால் மறுநாள் அவை காணாமல் போய் விடுகின்றன!''

''ஆமாம். அது சரிதான். ஆனால் அவை காணாமல் போனால்தான் என்ன? நமது லண்டன் அரண்மனையில் புதிய பொருள்களுக்கா பஞ்சம்!'' - இது இரண்டாவது குள்ளன்!

''அதுசரி! அதுசரி!'' என்றான் மூன்றாவது குள்ளன்.

இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போது, சட்டென்று டன்கன், புதர் மறைவிலிருந்து வெளியே வந்தான்!

அவனைப் பார்த்ததும் குள்ளர்கள் அதிர்ச்சியடைந்தார்கள்!

''ஏய்! எதிரி யாரோ வந்து விட்டான்! ஓடு! ஓடு!''

மூன்று குள்ளர்களும் சட்டென்று பறக்க ஆரம்பித்தார்கள்!

அவசரத்தில் ஒருவனது குல்லாய் கீழே விழுந்து விட்டது! ஆனாலும் அவன் பறந்து விட்டான்!



டன்கன் மிக்க மகிழ்ச்சியுடன் அந்தக் குல்லாயை எடுத்துப் பார்த்தான்!

''ஆஹா! எத்தனை மென்மை! என்ன அழகான நீல நிறம்!''

டன்கன் குல்லாயைத் தலையில் வைத்துக் கொண்டான். அந்தக் குள்ளர்கள் சொன்ன மந்திரம் ஞாபகத்திற்கு வந்தது!

''பட்டுக் குல்லா லண்டன் போ!
பறந்து ராஜா அரண்மனை போ!''

அவ்வளவுதான்!

டன்கன் பறக்க ஆரம்பித்து விட்டான்!

சற்று நேரத்திற்கெல்லாம் லண்டன் மாநகரம் கீழே தெரிந்தது! பிரும்மாண்டமான மாட மாளிகைகள் விளக்கு வெளிச்சத்தில் ஜகஜ்ஜோதியாக மின்னின! தேம்ஸ் நதியில் படகுகள் அழகாக பவனி வந்தன!

டன்கன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவன் ஓர் மிகப் பெரிய அரண்மனையின் இருட்டு அறை ஒன்றில் இறங்க ஆரம்பித்தான்!

இறங்கியதும் அவனுக்கு எங்கு இருக்கிறோம் என்பதே புரியவில்லை. எங்கும் இருட்டு!

ஆனால் சுற்றிலும் பலவிதமான பொருட்கள். ஆபரணங்கள், வைரக்கற்கள் யாவும் நிறைந்திருப்பது தெரிந்தது.

சுற்று முற்றும் பார்த்தபடி மெல்லக் காலெடுத்து வைத்தான்!

தடால்....!

பெரும் சப்தம்! ஏதோ பாத்திரம் உருண்டது!

அவ்வளவுதான்! வெளியே பலமான குரல் கேட்டது.

''திருடன், திருடன்! பிடியுங்கள்!''

டன்கன் பயந்து போனான்! ஓரமாக ஒளிந்து கொண்டான்! சட்டென்று அறை யில் விளக்கு எரிந்தது.

''இதோ இருக்கிறான்! திருட்டுப் பயல்! பிடியுங்கள்!''

காவலர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டு கையில் விலங்கு மாட்டினார்கள்!

''அடிக்கடி அரண்மனையில் பொருட்கள் களவு போவதன் காரணம் புரிந்து விட்டது! இவன்தான் திருடன்! இவனைக் கழுவில் ஏற்றுங்கள்!'' என்றார் தலைமைக் காவலர்.

பாவம் டன்கன்! என்ன செய்வான்! அவன் மனைவியின் பேராசையால் அவன் மாட்டிக் கொண்டான்!

தன் மனைவி தன்னைக் காணாமல் தேடுவாளே என்று அவன் கவலைப் பட்டான்! பொருட்கள் மீது ஆசைப் பட்டதால்தானே இந்தக் கஷ்டம்?

அடுத்த நாள் காலை.

வீரர்கள் டன்கனைத் தூக்கு மேடைக்கு அழைத்துச் சென்றார்கள். சட்டென்று அவனுக்குத் தன் குல்லாவின் நினைவு வந்தது!

''அடடா! குல்லா இருக்க பயம் ஏன்?'' என்றபடி அவன் சட்டென்று குல்லாவை எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டு,

''பட்டுக் குல்லா ஊருக்குப்போ
பறந்து விரைந்து வீட்டுக்குப் போ!'' என்றான்!

அவ்வளவுதான்! டன்கன் பறக்க ஆரம்பித்து விட்டான்!

சிறிது நேரத்தில் வீடு வந்து விட்டது!

அங்கே - பியோநாக் அழுது கொண்டிருந்தாள்.

''ஐயோ தெய்வமே! எனக்கு இனி ஆடம்பரம் எதுவும் வேண்டாம்! என் கணவன் உயிரோடு நல்ல படியாய் வந்து சேர்ந்தால் போதும்!''

அடுத்த கணம் -

அவள் முன்னே டன்கன் நின்று கொண்டிருந்தான்! பியோநாக்குக்கு பயங்கர சந்தோஷம்! தன் கணவனிடம், தன் தவறான போக்கு குறித்து மன்னிப்பு கேட்டாள்.

என்ன ஆச்சர்யம்?

புதிதாகச் சேர்ந்த பொருள்கள் அத்தனையும் மாயமாய் மறைந்து விட்டன! டன்கனின் குல்லாவும்தான்!

ஆனால் இப்போது பியோநாக் அதற்காக வருத்தப் படவில்லை!

''அவையெல்லாம் போனால் போகட்டும். அவைகளால் வெறும் ஆடம்பரத்தைத் தவிர வேறு என்ன பிரயோஜனம்? என் கணவன் நல்லபடியாய்த் திரும்பி வந்ததே போதும்!'' என்றாள் பியோநாக்!


ஆம்! பியோநாக் உண்மையிலேயே மாறி விட்டாள்!

''எக்ஸாம் ஹால்லே தூங்கிட்டு வரேன்னு சொல்றேயே, வெக்கமாயில்லை.''

''நீங்கதானேப்பா கேள்விகளுக்கு விடை தெரியலைன்னு 'முழிச்சிட்டு' இருக்காதேன்னு சொன்னீங்க?''

- ஏ. ஹரிகிருஷ்ணன்







''5 + 5 = 9 தானேன்னு கேட்டா, உங்க பையன் ஆமாம் சார்னு சொல்றானே...?''


''ஹி... ஹி.... நான் தான் சார் வாத்தியாரை எதிர்த்து, எதுவும் பேசக்கூடாதுன்னு சொல்லியிருக்கேன்!''

- சீர்காழி வி. ரேவதி





கடல் அழகி
கதை: ஆனந்தி
படம்: செல்லம்
கடலரசனான யாளியின் மகள் லிங்லிங்...
லிங்லிங்! 'கடற்கரைக்குப் போகாதே, ஆபத்து' என்று எத்தனை தடவை சொல்றது!
காற்றும் மரங்களும் சின்ன வீடுகளும் வண்ணப் பூக்களும் எவ்வளவு அழகு!
அழகு இருக்குமிடத்தில் ஆபத்தும் உண்டு... உம்... உனக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணிவைத்து விட்டால்தான் எனக்கு நிம்மதி!
மந்திரி! மாப்பிள்ளை தேடச் சொன்னேனே?
மேற்குக் கடலில் உள்ள சுறா இளவரசன் நம் இளவரசிக்குத் தகுந்த வரன்.
அப்பா! சுறா இளவரசன் கொடியவன்; சுயநலக்காரன். வீரமும் இரக்கமும் எளிமையும் மிக்கவனைத்தான் நான் மணப்பேன்!


சில நாட்கள் சென்று தளபதி டால்பின்...
யார் அது?
அரசே! வருந்தாதீர்கள். இளவரசிக்கு ஏற்ற வரனைக் கண்டுபிடித்து விட்டேன்!
சூசிங். தங்கமான மனம். வீரனும் கூட. கடற்கரை கிராமத்தில்...
ஹும்! மனிதனா?
கடல்கன்னியான என் மகள் பூமியில் சந்தோஷமாக வாழ முடியாது... வேண்டாம்.
டால்பின் இளவரசியிடம் போய்...
என்ன வருத்தம்?
சுறா இளவரசனைக் கல்யாணம் செய்து கொள்ளுமாறு அப்பா சொல்கிறார்.
நான் சூசிங்கைக் கடலோரம் வரச் செய்கிறேன்!
ஜாக்கிரதை.


அன்றிரவு சூசிங்கும் அவன் அண்ணனும் தூங்கும்போது....
சூசிங்! கடலரசன் மகளைக் காண வா! நீயே அவளுக்கேற்ற கணவன்!
இருவரும் எழுந்து அமர்ந்து....
அண்ணா! ஏதோ கனவில் கேட்பது போல ஒரு குரல்! 'இளவரசியைக் காண வா' என்று.
பிதற்றாதே! பேசாம தூங்கு
சற்று நேரத்தில்....
அசந்து தூங்கறான். இது தான் சமயம்....
அண்ணன், குடிசையை விட்டு வெளியேறி....
என் காதிலும் அந்தக் குரல் ஒலித்தது. இளவரசி எனக்குத் தான்!
கடலோரத்தில்....
அழகியே! நான்தான் சூசிங்!
அப்படியா! நீங்கள் வீரமும் கருணையும் மிக்கவர்னு டால்பின் தளபதி சொன்னாரே!


ஆமாம்! நான் பெரிய வீரன்! திமிங்கலங்களைக் கூட வேட்டையாடுவேன்! சுறாக்களைக் கொல்வேன்! டால்பின்களையும் விட மாட்டேன்!
ஐய்யோ!
இதற்கிடையில் சூசிங் விழித்தெழ...
அண்ணனைக் காணோம். கடற்கரைக்குப் போய்ப் பார்க்கலாம்.
கனவில், கடலரசன் மகள் அழைப்பதாக ஒரு குரல் கேட்டதே! நீங்கள் தான் இளவரசியா?
உங்களில் யார் சூசிங்?
ஏன், நான் தான்!
இல்லை நான்தான்.
இதென்ன வம்பு!
இளவரசி, என்னை மணந்து கொள்! மேற்குக் கடற்கரை வரை வென்று உனதாக்குவேன்!


என் அண்ணனைப் போல் யாரையும் ஜெயித்து அடக்குவதில் எனக்கு ஆசையில்லை. நான் ஏழை. உனக்கு என்னால் எதுவும் தர முடியாது.
உங்களில் யார் சூசிங் என்று எனக்குத் தெரியவில்லையே....? சரி, இருளில் ஒளிவீசும் முத்து ஒன்று இருக்கிறது; அதைக் கொண்டு வருகிறவரை நான் மணப்பேன்!
அது எங்கே இருக்கிறது?
மேற்குக் கடலில் நாக அரசன் குகையில். இந்தச் சங்குகள் உங்களுக்கு உதவும்...
அண்ணன் குதிரை ஏறிச் செல்ல...
ஹும், எனக்கேது குதிரை? கால்நடை தான்! எதற்கும் முயற்சியைக் கை விடக் கூடாது.
ஒரு நதிக் கரையோரம்...
பாவம், அந்த நாயை அடிக்காதீர்கள்...



தொடர்ச்சி பக்கம்-51

புள்ளி உள்ள கட்டங்களுக்கு
கறுப்பு அடித்துப் பாருங்கள்!




1,00,00,000
1
2
3
7
8
9
7
13
14
15
19
20
21



கோடை விடுமுறைப் போட்டி - 2

இங்கே மொத்தம் 24 படங்கள் இருக்கின்றன. இரண்டு படங்களைச் சேர்த் தால் ஒரு பெயர் வரும். இப்படி மொத் தம் 12 பெயர்கள். இவற்றைத் தனிக் காகிதத்தில் எழுதி, எண்களையும் குறிப்பிட்டு கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்புங்கள். பரிசு உண்டு. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. பார்க்க மலைப்பாகத் தோன்றினாலும் இது மிகவும் எளிதான போட்டி. சிறிது சிந்திக்க வேண்டும். உங்களால் முடியாதா என்ன? அனுப்ப வேண்டிய முகவரி ஆசிரியர் கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடு தாங்கல், சென்னை - 600 097.

இந்தப் பக்கத்தைக் கிழிக்காதீர்கள். கூப்பனை மட்டும் கத்தரித்து அனுப்புங்கள்

விடுமுறைப் போட்டி - 2

பெயர் : ....

வயது : ....

முகவரி: ....

....

....

....

பின்கோடு : ....


முடிவு தேதி 15. 6. 93


கையில் இருப்பது என்ன?





பிச்சைமுத்துவின் கையில் ஒரு செல்லப் பிராணி இருக்கிறது. 1 முதல் 58 வரை கோடு போட்டு இணைத்தால் அதைக் கண்டு பிடிக்கலாம்.

46ம் பக்கத் தொடர்ச்சி





மறுநாள்...
அண்ணா! லிங் லிங் கொடுத்த சங்கு இருக்கா...?
கேவலம், ஒரு சங்கினால் என்ன பயன்? வீண் சுமை என்று வழியிலேயே தூக்கி எறிந்து விட்டேன்!
சூறாவளி வீச...
ஐயோ, செத்தோம்!
லிங் லிங் தந்த சங்கே, எங்களுக்கு உதவு...
படகு கவிழ்ந்தது...
குபுக் குபுக்...
ஆனால் மந்திரச் சங்கு வழி காட்டியது...
அட, நமக்கு மூச்சு முட்டலையே! சங்கைப் பின்தொடர்வோம்!
நாக அரசனிடம் அவர்களை அழைத்துப் போயிற்று சங்கு.
நீங்கள் எதற்கு வந்திருக்கிறீர்கள் என்று தெரியும்!


நாக அரசன் அவர்களைப் பொக்கிஷ அறைக்கு அழைத்துப் போனான்...
அடேயப்பா! இத்தனை செல்வமா!
ஆளுக்கு ஒரு பொருள் மட்டுமே கேட்கலாம்... முத்து, பவழம், ரத்தினம், சங்கு... சூசிங், முதலில் நீ கேள்!
சூசிங் யோசித்தான்.
லிங்லிங்! என்னை மன்னித்து விடு! நம் இருவர் சந்தோஷத்தை விட கிராம மக்களின் நலம் பெரிது.
எனக்கு அந்த தங்கச் சங்கு கொடுங்கள்!
எனக்கு முத்து! இருளில் ஒளி வீசும் முத்து!
சூசிங்! இந்தா, இதை கோயிலில் வைத்தால் அந்த ஊரில் வளம் கொழிக்கும், வெள்ள விபத்தே ஏற்படாது.


அண்ணனிடம்...
இந்தா, வீட்டுக்குப் போகும் வரை சிப்பியைத் திறந்து பார்க்காதே. இதிலுள்ள முத்து உன் குணத்தையே பிரதிபலிக்கும்.
நன்றி கூறிய சகோதரர்கள் கடற்கரையை அடைந்து...
சூசிங்! போய் வரேன்! நீ மெள்ள வந்து சேரு!
காதலியை காணும் அவசரம் அவனுக்கு... ஹும்...
மனவருத்தம் இருந்தாலும் ஜியாங்சி கிராமத்துக்குப் போனான் சூசிங்.
மந்திரச்சங்கு கிடைத்ததா?
வெற்றிதான்! உங்க மகிழ்ச்சி தான் எனக்கு ஆறுதல்.
கிராமத்தில் வெள்ளம் வடிந்தது...
சூசிங் வாழ்க!
தங்கச் சங்கைக் கோயிலில் வைத்துப் பூசியுங்கள். வளம் கொழிக்கும்.
சில தினங்கள் சென்று...
நான் ஊர் திரும்ப வேண்டும்.
உன்னை அனுப்பவே கிராமத்தில் யாருக்கும் மனம் வரலையே!


ஆயினும் ஆசிங் கிளம்பினான். எளிய மக்கள் சிறு பரிசுகள் தந்தனர்.
இந்தா, தொப்பி.
புது சொக்காய்!
என்னிடமுள்ள ஒரே முத்து. நூலில் கோத்திருக்கேன்.
நானும் ஒரு முத்தைத் தேடித்தான் புறப்பட்டேன்...
இதற்கிடையில் கிராமத்துக்குத் திரும்பிய அண்ணன்...
இளவரசி! இதோ, நீங்கள் கேட்ட முத்து!
திறந்து காட்டுங்கள்!
அண்ணன் சிப்பியை திறந்து முத்தை ஆர்வத்தோடு பார்க்க...
ஆ! கறுத்து விட்டதே!
ஐயோ! உருகி வழிகிறது!
நீங்கள் கஷ்டப்படுகிறவர்-களைக் கண்டு மனம் இரங்கவில்லை, அதான்!


அண்ணன் ஏமாற்றத்துடன் திரும்ப...
உண்மையான சூசிங் வருவார். பொறுமையுடன் காத்திருப்பேன்.
சில தினங்கள் சென்று...
லிங் லிங்! நீ கேட்ட பொருளை என்னால் கொண்டு வர முடியலை... என் அண்ணன்...
அவர் கொண்டு வந்த முத்து உருகிவிட்டது... அது சரி, உன் நெஞ்சில் ஏதோ பளபளக்கிறதே, என்ன?
ஷியாங்சி கிராமத்தில் கிடைத்த பரிசு. சாதா முத்துத் தான்.
சட்டைக்குள்ளிருந்து நூல் மாலையை எடுத்து...
அட, இதென்ன அதிசயம்! இருளிலும் ஒளிர்கிறதே!
உன் நல்ல இதயத்தை முத்து பிரதிபலிக்கிறது.
இருவரும் கணவன்-மனைவியாக...
லிங் லிங்! நீ உண்மையில் மனிதஜாதியில் பிறந்தவள்தான். கடலரசனால் வளர்க்கப்பட்டாய். சந்தோஷமாய்ப் பல்லாண்டு வாழ்வீர்கள்!

நூறு ரூபாய் ரகசியம்

டாக்டர் பூவண்ணன்



13. எச். ஜி. வெல்ஸ்

கிணற்றுக்குள்ளே தண்ணீர் இல்லை. முற்றிலும் வற்றி இருந்தது. கிணற்றின் நடுவில் இரண்டு மீட்டர் விட்டத்தில் ஒரு உறை கிணறு இருந்தது. அதிலும் தண்ணீர் இல்லை.

புருவமில்லாதவனும், தோட்டத்து ஆளும் படிகளில் இறங்கினர். கிணற்றில் அவர்கள் தேடிய குள்ளனைக் காணோம்.

உறை கிணற்றில் அவர்கள் எட்டிப் பார்த்தார்கள். அப்போது அந்த உறை கிணற்றிலிருந்து ஒருவன் ஒரு கையில் பெரிய பையோடு, மேலேறி வந்து கொண்டிருந்தான். வந்தவன் அவர்களைப் பார்த்து, ''நான்தான் நோட்டு எடுத்துட்டு வர்றேன்னு சொன்னேனே சோமு அதுக்குள்ளே இந்த ஆளையும் அழைச்சக்கிட்டு இரகசிய இடத்துக்கே வந்துட்டையே?'' என்று கேட்டான்.

''மணி, மருது நம்ம ஐயாவுக்கு ரொம்ப வேண்டியவருடைய தம்பி. நாங்க உன்னைத் தேடி இங்கே வரலை. யாரோ ஒரு பையன், நாங்க பேசிக்கிட்டிருந்த அறையிலே எட்டிப் பார்த்தான். அவனுக்குக் கள்ள நோட்டு விஷயம் நல்லா தெரிஞ்சிருக்காம். இவன் கிட்டேயிருந்த ஒரு முக்கியமான நோட்டு அந்தப் பையன்கிட்டே சிக்கிடிச்சாம். அவன் ஆபத்தானவனாம். அவனை விரட்டிக்கிட்டு ஓடி வந்தோம். இந்தக் கிணற்றுப் பக்கத்திலே ஓடி வந்தவனைக் காணோம். ஒருவேளை கிணற்றுக்குள்ளே இறங்கிட்டானோன்னு பார்க்க வந்தோம். இங்கே காணோம். அவன் உறைகிணற்றுக் குள்ளே இல்லையா?''

சோமு கேட்டான்.

''இல்லே, வளத்தியான ஆளாலே தான் இந்தப் படியிலே இறங்க முடியும். சின்னப் பையனெல்லாம் இறங்க முடியாது. அவன் வேறெங்காவது ஓடியிருப்பான். வா. மேலே போய்ப் பார்க்கலாம்.''

மணி சொல்லி விட்டு பையோடு படிகளில் ஏறினான். அவனிடமிருந்த பையில் புத்தம் புதிய நூறு ரூபாய் நோட்டு, கத்தை கத்தையாக இருந்தது.

சோமுவும் புருவமில்லாதவனும் கிணற்றை ஒரு முறைக்கு இருமுறை பார்வையால் அலசி, யாருமில்லை என்று உறுதி செய்து கொண்டு மேலே ஏறினர்.

மூவரும் அங்கே நின்று சுற்றுமுற்றும் பார்த்தனர்.

நான்கு திசையிலும் தோட்டத்து எல்லை வரை புல் பூண்டும் இல்லாத பொட்டல் வெளி. அங்கே யாரும் பதுங்கியிருக்க முடியாது.

''பையன் கிணத்திலே இறங்காம ஏதோ ஒரு திசையிலே ஓடியிருப்பான். நீங்க எப்படியோ தப்ப விட்டுட்டீங்க. ஐயா மருதமலைக்குப் போயிருக்கார். ராத்திரி இங்கே வர்றதா சொல்லியிருக்கார். வந்ததும் அவரிடம் விஷயத்தைச்

சொல்வோம்'' என்று கூறிய மணி, ''நீங்களும் இருங்க. ஐயாவைப் பார்த்த பிறகு இந்த நோட்டை எடுத்துட்டுப் போகலாம்'' என்றான்.

மூவரும் ஓட்டு வீட்டை நோக்கிச் சென்றனர்.

அப்போதே வெளிச்சம் மங்கி, இருள் பரவத் தொடங்கி விட்டது.

மயில்சாமி தோட்டத்துக்கு வெளியே, வேலியை ஒட்டிய கற்றாழைப் புதர் பின்னே மறைந்து நின்று ஞானமும், சுகுமாரும் தோட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

பரதன் ஓடி வருவதும், அவன் பின்னே புருவமில்லாதவனும் மற்றொருவனும் ஓடுவதும் தெரிந்தது. கொஞ்ச நேரத்துக்குப் பின் அந்த இருவரோடு மற்றொருவன் பையோடு ஓட்டு வீட்டுக்கு வருவது தெரிந்தது.

பரதன் அவர்களுடன் வரவில்லை

பரதன் தப்பி ஓடி விட்டானா?


அல்லது பரதனைப் பிடித்து எங்கேயாவது வைத்து விட்டு வருகிறார்களா?

''பரதன் தப்பிச்சிருப்பான்னு நினைக்கிறேன்'' என்றான் ஞானம்.

''ஆமாம். தப்பி எந்தப் பக்கம் போனான்னு தெரியலே. இப்பவே இருட்ட ஆரம்பிச்சிடுத்து. நாம் என்ன செய்யலாம்?'' சுகுமார் கேட்டான்.

''பரதன் சொன்னபடி ஒரு மணி நேரம் இங்கேயே காத்துக்கிட்டிருப்போம். அப்புறம் நேரே நாகன் வீட்டுக்குப் போய் பரதன் சொன்னபடி செய்வோம்'' என்றான் ஞானம்.

சுகுமார் வாட்சைப் பார்த்தான். மணி ஆறரை. ''சரி. ஏழு மணி வரை இங்கேயே இருப்போம்'' என்று ஒப்புக் கொண்டான்.



ஏணி சின்னத்தில் ஜெயிச்ச உங்களுக்கு மாலையிட ஏணியோட வந்திருக்கோம்... கொஞ்சம் கழுத்தை வளைச்சுக் குனியறீங்களா...?

உண்மையில் பரதன் எங்கே?

அவன் கிணற்றில் இறங்கியது உண்மை.

ஆனால் கிணற்றுக்குள் அவன் இல்லையே! மூன்று பேரும் நன்றாகப் பார்த்து விட்டார்களே!


பரதன் எங்கே?

பரதன் ஆபத்திலேயிருந்து தப்ப, அருகே இருக்கும் கிணற்றில் இறங்க விரும்பினான். திறந்த வெளியில் தப்ப வழியில்லை. கிணற்றில் ஏதேனும் வழி தென்படலாம். தண்ணீர் வற்றிப் போன கிணறு என்று சுகுமார் சொன்னது நினைவுக்கு வந்தது. கிணற்றில் செடி கொடிகள் வளர்ந்து புதர் போல இருக்கும் என்று கிணற்றிலே முதல் படியில் கால் வைத்துக் கீழே பார்த்தான்.

கிணற்றில் மறைந்து கொள்ளப் புதர் இல்லை. உறைகிணற்றில் மறைந்து கொள்ள இடம் இருக்குமா என்பதும் தெரியவில்லை. புலிக்குப் பயந்து ஓடி, புலிக் குகைக்குள் புகுந்து விட்ட உணர்வு வந்தது.

கிணற்றின் படி ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் இடையே சுமார் முக்கால் மீட்டர் தூரம் இருந்தது. ஒரு 'லாங்க் ஜம்ப்' செய்து இரண்டாம் படியில்,நின்றான். இப்படியே 'ஜம்ப்' செய்தால், கரணம் தப்பினால் மரணம் ஏற்பட்டுவிடும். அப்படியே கரணம் தப்பாமல் இறங்கினாலும், பின் தொடர்ந்து வருபவர்கள் பிடித்துக் கொள்வார்கள். இங்கிருந்து தப்பிச் செல்ல வழியே இல்லையா?

''பரதா, கதவு மூடியிருந்தால், ஐயோ வெளியே போக வழியில்லையே என்று அழுபவன் கோழை. இந்த வழியில்லை என்றால் வேறு வழி இல்லாமலா போகும்? அதைக் கண்டுபிடித்து வெளியேறுவேன் - வெளியேறியே தீருவேன்



என்று முடிவு செய்தால் அழுகை பறக்கும்! பகுத்தறிவு கண் திறக்கும்! அறையிலே பின் வாசலோ, சன்னலோ திறந்திருப்பது தெரியும். அப்படியே வேறு வழியில்லை என்பது தெரிந்தாலும் அஞ்ச வேண்டாம். மூடிய கதவிலே முட்டி மோதி அதை உடைத்து வெளியேறுவேன் என்ற நம்பிக்கை கொள்ள வேண்டும். கதவிலே மோதுவதால் இறந்தாலும் இறக்கலாமே தவிர, தப்பிக்க வழி இல்லையே என்று புலம்பும் கோழைத்தனத்தால் இறக்கக் கூடாது!''

வெள்ளியங்கிரியின் வெண்கலக் குரல் உதிர்த்த பொன் மொழி பரதனின் செவியில் கேட்டதும், அவன் இதயம் இரும்பானது! எஃகானது!

பரதன் புத்துணர்வு பெற்றவனைப் போல, தலைநிமிர்த்தி, பார்வையைக் கூர்மையாக்கி, கிணற்றுச் சுவரை அணு அணுவாக அலசினான்.

என்ன ஆச்சர்யம்!

அவன் நின்ற படிக்கும், முதல் படிக்கும் இடையிலே சுவரிலே ஒரு சிறு செடி. அந்தச் செடிக்குப் பின்னே சுவரின் கல் விழுந்து விட்ட குழி. அதை பெருச்சாளிகள் கொஞ்சம் சுரண்டி பெரிதாக்கி இருந்தது. காற்றிலே செடி அசைய, செடிக்குப் பின்னே அந்தக் குழி ஒரு சின்ன பெட்டி போலத் தெரிந்தது.

பரதன் முகம், பதினாலு ஆண்டுக்குப் பின் நாடு திரும்பிய ராமனைப் பார்த்த பரதன் முகம் போல மலர்ந்தது. அவன் அந்தச் செடியைக் கையால் விலக்கி, ஒரு காலைத் தூக்கி அதிலே வைத்து, மறு காலை பலம் கொண்ட வரை நிலத்திலே ஊன்றி, மேலே தாவினான். உடல் மேல் நோக்கிஎழுந்ததும், மறு கை முதல் படியைத் தொட, அதைப் பிடித்தபடி மற்றொரு காலையும் அந்தப் பொந்திலே வைத்தான். பிறகு தன் உடம்பை அந்தப் பொந்திலே இறக்கினான்.

பரதனின் உடல் அந்தப் பொந்திலே பக்குவமாகப் பதிந்து கொண்டது. உடனே சிறிது முன்நோக்கி வளைந்த செடியின் ஒரு கிளையைப் பிடித்துத் தன்னை நோக்கி மெல்ல இழுத்தான். செடி, பொந்துக்குப் பொருத்தமான மூடியானது.

சில நொடிகளில் சோமுவும் மருதுவும் கிணற்றில் இறங்கினார்கள். சல்லடையாய் முகத்தை மூடிக் கொண்டவனைப் போலச் செடிக்குப் பின்னே இருந்த பரதன் இருவர் இறங்கியதிலிருந்து, மூவராய் அவர்கள் மேலேறிப் போனது வரை நடந்த அனைத்தையும் பார்த்தான். அவர்கள் பேசிய அனைத்

தையும் கேட்டான். மூன்றாவது ஆளான மணி, படியில் ஏறி வந்த போது அவன் கையில் இருந்த பெரிய பையில் புத்தம் புதிய நூறு ரூபாய் நோட்டுக் கத்தைக் கத்தையாக இருந்ததையும் பார்த்தான்.

பரதன் மூச்சு விடவில்லை.

அரை நிமிடத்தில் அவர்கள் கடைசி நான்கு படிகளைக் கடந்து மேலே போய் விட்டார்கள்.

பரதன் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டான்.

அவர்களிடமிருந்து தப்பி விட்டோம் என்ற நிம்மதி! கள்ள நோட்டுக் கள்ளனின் இரகசிய இடத்தைக் கண்டுபிடித்து விட்டோம் என்ற நிம்மதி!

குள்ளமாக இருப்பது ஒரு குறை என்றே அந்த நிமிடம் வரை நினைத்துக் கொண்டிருந்த பரதன், குள்ள வடிவத்தை எண்ணிப் பலமுறை உள்ளம் வருந்திய பரதன், அன்றுதான் - அப்போதுதான் தன்னைக் குள்ளனாகப் படைத்த இறைவனுக்கு நன்றி செலுத்தினான். இல்லையென்றால் சுமார் அரை மீட்டர் உயரம் - அகலம் கொண்ட பொந்தில் ஒருவன் மறைந்து இருக்க முடியுமா? பரதன் தன் உடலை மூன்றாக மடிந்தது போல, உட்கார்ந்து, தலையையும் மடியில் புதைத்துக் கொண்டான். ஒரு மீட்டர் உடல் 1/3 மீட்டராகக் குறைந்து அவனைக் காத்தது! நாகனின் குடும்பத்தைக் காத்தது! நாட்டின் பொருளாதாரத்தைக் காத்தது!

மூவரும் கிணற்றிலிருந்து வெளியேறிய பிறகும் பரதன் பொந்திலிருந்து வெளியே வரவில்லை. சுமார் ஐந்து நிமிடத்துக்குப் பின் வெளியே வந்தான். பொந்தில் இருந்தபடி முதல் படிக்குத் தாவி அங்கே உட்கார்ந்தான். எழுந்து நின்றும் பார்க்கவில்லை.

இருள் நன்றாகச் சூழ்ந்த பிறகு, பரதன் கிணற்றுக்கு வெளியே வந்து உட்கார்ந்து கொண்டான்.

ஓட்டு வீட்டில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

மணி ஏழுக்கு மேலே இருக்கும். ஞானமும் சுகுமாரும் நாகன் வீட்டுக்குப் போயிருப்பார்கள். இருட்டான நிலையிலும் இந்தத் தோட்டத்து வாயிலை நோக்கிப் போவது கூடாது. பின் எங்கே போவது?

அடுத்த தோட்டம் கிருஷ்ணமூர்த்தியின் ரோஸ் காட்டேஜ். அந்தக் கிருஷ்ணமூர்த்தி சுகுமாருடைய தாத்தாவின் நண்பர். அதனால் ரோஸ் காட்டேஜ் போக முடிவு செய்தான். உடனே உட்கார்ந்த நிலையில் கையையும் காலையும் நிலத்தில் ஊன்றித் தவளை போலத் தத்தித் தத்திச் சென்றான். கொஞ்ச தூரம் சென்ற பின்பு எழுந்து ஓடினான். முள் வேலி வந்தது. அதிலே நுழைந்து மறுபுறம் போனான்.

ரோஸ் காட்டேஜ் தெரிந்தது.

காட்டேஜில் மாலை முரசு படித்துக் கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தி நாய் குரைக்கும் சப்தம் கேட்டுத் தலைநிமிர்ந்திப் பார்த்தார். காட்டேஜ் வாயிலில் பரதன் நிற்பது தெரிந்தது.

இன்னமும் குரைத்துக் கொண்டிருந்த நாயை ''டைகர்! கீப் கொய்ட்!'' என்று அதட்டியவாறு, ''உள்ளே வா தம்பி!'' என்று குரல் கொடுத்தார். அந்தக் குரலில்



உன்னதமான அன்பும், 'உனக்கு உதவி தேவையா? சொல் செய்கிறேன்' என்ற அரவணைப்பும் இழையோடியதை உணர்ந்த பரதன், அவர் அருகே சென்றான். மாலை முரசின் முதல் பக்கத்துத் தலைப்புச் செய்தி கொட்டை எழுத்தில் அவன் பார்வையை எட்டிப் பிடித்தது.

'தொழிலதிபர் காளியப்பர் ஜாமீனில் விடுதலை'

'கள்ள நோட்டு வழக்கில் கைதானவர்'

பரதன் அந்தச் செய்தித்தாளை எடுத்து, விரைவாகப் படித்து முடித்தான். பிறகு, ''ஐயா, வீட்டில் போன் இருக்குங்களா? முதல்லே அவசரமா ஒரு போன் செய்யணும். அப்புறம் நான் யாரு - எப்படி இங்கே வந்தேன்னு சொல்றேனுங்க'' என்றான்.



கிருஷ்ணமூர்த்தி அவனை தொலை பேசி இருக்கும் உள்ளறைக்கு அழைத்துச் சென்றார்.

பரதன் நாகன் வீட்டுக்குப் போன் செய்தான்.

நாகன்தான் போனை எடுத்தான்.

''நாகா, ஞானமும் சுகுமாரும் அங்கே வரலையா?''

''இல்லையே. அவங்க இங்கே ஏன் வரணும்?''

''வர வேண்டிய வேலை இருந்தது. நாகா, கள்ள நோட்டுக்காரர்களின் இருப்பிடத்தைக் கண்டுபிடிச்சுட்டேன். உங்கப்பா இருந்தால் போனை அவரிடம் கொடு.''

நாகன், ''அப்பா, பரதன் கள்ள நோட்டுக்காரர்களின் இருப்பிடத்தைக் கண்டுபிடிச்சுட்டானாம். அவன் உங்களோடு பேசறானாம்'' என்றபடி போனை தந்தையிடம் தந்தான்.

பரதன் காளியப்பரிடம், ஒரு பக்கம் அச்சான நோட்டைக் கண்டெடுத்த நாள் முதல் அந்த நிமிடம் வரை நடந்த அனைத்தையும் சொன்னான்.

''ஐயா, போலீஸிடம் பேசி, இப்பவே மயில்சாமி தோட்டத்துக்கு வந்தா, கள்ள நோட்டு ஆசாமிகளைக் கைது செய்யலாம். உறைகிணற்றில் ஏதோ இரகசிய அறை இருக்குன்னு நினைக்கறேன். அங்கே ஏராளமான கள்ள நோட்டு இருக்கும். அதையும் கைப்பற்றலாம்'' என்றான் பரதன்.

> ஆசிரியர் : பரீட்சை ஹாலில ஏண்டா பின்னாடி பையனின் பேப்பரைப் பார்த்தே?
>
> மாணவன் : வினாத்தாளில்தான், 'பின்புறம் பார்க்கவும்'னு இருந்ததே சார்!
>
> - சிவா கிருபானந்தன்



மயில்சாமி தோட்டத்துக்கு எப்படி வர வேண்டும் என்பதையும் விளக்கிய பரதன், ''அங்கே சுகுமாரும் ஞானமும் வருவாங்க. அவங்க வழிகாட்டுவாங்க. நான் மிஸ்டர் கிருஷ்ணமூர்த்தியின் வீட்டிலே - ரோஸ் காட்டேஜிலேயே இருக்கிறேன்'' என்றும் கூறினான்.

காளியப்பர் பரதனுக்கு நன்றி தெரிவித்து, தானே வந்து அவனை அழைத்துச் செல்வதாகக் கூறினார்.

சுமார் நூறு நிமிடத்துக்குப் பின், போலீஸ் படை மயில்சாமி தோட்டத்தில் புகுந்து, அங்கிருந்த அனைவரையும் கைது செய்தது. உறைகிணற்றுக்குள்ளே இருந்த இரகசிய அறையிலிருந்த பல கோடி மதிப்புள்ள கள்ள நோட்டையும் கைப்பற்றியது.

நாகன், ஞானம், சுகுமார் ஆகிய மூவருடன் காளியப்பர் ரோஸ் காட்டேஜுக்கு வந்தார். பரதனைக் கட்டித் தழுவிக் கண்கலங்க, நாதழுதழுக்க அவனுக்கு நன்றி கூறினார். நாகனும், ஞானமும், சுகுமாரும் பரதனைப் பாராட்டினார்கள்.

மறுநாள் காலை கள்ளநோட்டுக் கும்பல் கைதான செய்தியும் பரதனின் தீரச் செயலும் செய்தித்தாள்களில் வெளிவந்தன. பரதனின் புகைப்படம் இடம் பெறாத செய்தித்தாள்களே இல்லை. பள்ளிக்கூடத்து ஆசிரியர்களும் மாணவர்களும் அவனைப் பாராட்டினார்கள்.

போலீசார் விசாரணையில் கள்ள நோட்டுத் தொடர்பான எல்லா உண்மைகளும் வெளியாயின. காளியப்பர் தொழிற்சாலையின் கேஷியர், கோவை கள்ள நோட்டு ஏஜெண்டின் கையாள். அவரே சம்பளத்துக்காகக் காளியப்பர் தந்த பணத்தை எடுத்து விட்டுக் கள்ள நோட்டைக் கலந்து விட்டவர் என்பதும் விசாரணையில் தெரிந்தது. அதனால் காளியப்பர் குற்றமற்றவர் என்று விடுதலை செய்யப்பட்டார். கேஷியர், தங்கவேலு, மருது, சண்முகம், சோமு, மணி ஆகியோர் கோவையில் கைதாயினர். அவர்கள் கொடுத்த தகவலின் துணை

"ஐன்ஸ்டீன்" ஒரு சமயம் தாம் படித்துக் கொண்டிருந்த ஒரு புத்தகத்தில் அடையாளம் வைப்பதற்கு காகிதம் கிடைக்காமல், தமக்கு ராக்ஃபெல்லர் அன்பளிப்பாக அனுப்பியிருந்த 1500 டாலர் "செக்" ஒன்றையே பயன்படுத்திவாராம்! பின்பு அது அந்தப் புத்தகத்துடன் காணாமல் போய் விட்ட போதும் அவர் சிறிதும் வருத்தப்படவில்லையாம்!

- அ. முஸ்தபா, தக்கோலம்.



யால் மாணிக்கம் உட்பட சிவகாசியிலும் பெங்களூரிலும் பலர் கைதாயினர்.

ஒரு வாரத்துக்குப் பின்பு ஒரு நாள் மாலை.

பரதனைத் தேடி கோவை செய்தித்தாளின் பிரதம நிருபர் அவன் வீட்டுக்கு வந்தார். "பரதா, நீயும் உன் நண்பர்களும் கள்ள நோட்டைக் கண்டுபிடித்த கதை சுவையானது. விரிவான பேட்டி கொடுத்தால் அதை அப்படியே வெளியிடுகிறோம்" என்றார்.

நிருபர் 'சுவையான கதை' என்றதும் எழுத்தாளனாக வேண்டும் என்னும் அவனது ஆசை விழித்துக் கொண்டது.

"பரதா, வாய்ப்பு வந்தும் பயன்படுத்தாதவன் முட்டாள். வாய்ப்பு வரும் வரை காத்திருந்து வந்த போது பயன்படுத்திக் கொள்பவன் சாதாரண அறிவுள்ளவன். வாய்ப்பை உண்டாக்கி, தனது எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்பவன் அதிபுத்திசாலி" என்று குருநாதர் வெள்ளியங்கிரி எப்போதோ சொன்னது, இப்போது அவன் நினைவுக்கு வந்தது.

உடனே, "பேட்டி தரலாம். ஆனால் பேட்டியில் சொல்ல வேண்டியதை ஒரு கதையாக எழுதித் தந்தால் பிரசுரிப்பீர்களா?" என்று கேட்டான், பரதன்.

"பிரசுரிப்பீர்களாவாவது! மகிழ்ச்சியோடு பிரசுரிப்போம். தகுந்த சன்மானமும் தருவோம். இன்றைய தேதியில் கோவையில் - ஏன் தமிழ்நாட்டில் மிகவும் பிரபலமான நபர் நீதான். நீ எதை எழுதினாலும் மக்கள் விரும்பிப் படிப்பார்கள். உண்மைக் கதையாக எழுதினாலும் சரி. கற்பனைக் கதையாக எழுதினாலும் சரி. பிரசுரிக்கிறோம். புதனும் ஞாயிறும் பிரசுரிக்கும்படி வாரத்துக்கு இரண்டு அத்தியாயமாக எழுதிக் கொடு" என்றார் நிருபர்.

"நடந்ததைத் தழுவி ஒரு கற்பனைத் தொடர்கதை எழுதித் தருகிறேன். நீங்கள் சொன்னபடி வாரத்துக்கு இரண்டு அத்தியாயம் தருகிறேன்."

பரதன் ஒப்புக் கொண்டான்.

அன்றிரவெல்லாம் யோசித்து, மறுநாள் காலையில் கதை எழுத உட்கார்ந்தான்.

"குருநாதர் வெள்ளியங்கிரி துணை" என்று முதலில் எழுதி விட்டு, அதன் கீழே தொடர் கதையின் தலைப்பை எழுதினான்.

தலைப்பு என்ன?


"நூறு ரூபாய் இரகசியம்"

பரதன் தொடர் கதையை எழுதத் தொடங்கினான்.

தன்னம்பிக்கை மிக்க பரதன் இந்தத் தொடர் கதையால் பெரும்புகழ் பெறுவான் என்பதிலும், எதிர்காலத்தில் அவன் ஒரு எச்.ஜி. வெல்ஸாக விளங்குவான் என்பதிலும் அவனை அறிந்த யாருக்கும் ஐயமே இல்லை.

(முற்றும்)

பாட்டி போட்ட திட்டம்!



பாட்டி ஒருத்தி முன்பு
பாவம், தனியே இருந்தாள்.
காட்டில் அவள் வீடு;
காவல் யாரும் இல்லை!

பாட்டியிடம் கொஞ்சம்
பணமும், நகையும் உண்டு!
பார்த்திருந்தான் ஒருவன்,
பழைய, பக்காத் திருடன்!

அன்று இரவு பாட்டி,
ஆழ்ந்து உறங்கும் நேரம்,
வந்து விட்டான் திருடன்!
வகையாய் கையில் கத்தி!

கோவில் ஒன்று கட்ட,
கிழவி எண்ணி இருந்தாள்
''காவல் இல்லாச் சொத்து,
கவர்ந்து போதல் சரியோ?''

திருடன் கேட்க வில்லை!
திரும்பிப் போக வில்லை!
பெரிய கத்தி கொண்டு,
பயமுறுத்த லானான்!

''கானகத்தில் உள்ளோம்
காக்க யாரும் இல்லை
ஆணவத்தில் உள்ளான்
அறிவால் வெல்லலாமே!''

பாட்டி மனதில் எண்ணம்
பட்டை தீட்டலாச்சு.
போட்ட திட்டம் உடனே,
வேலை செய்யலாச்சு!

''தீமை செய்ய வேண்டாம்!
திருட வந்த தம்பீ!
காலை செய்த சோறு,
கனிவாய் உண்டு செல்வாய்!''

என்று சொல்லிப் பாட்டி,
இலையைப் போட்டு விட்டாள்!
அந்தத் திருட்டுப் பயலும்
ஆசையாக உண்டான்!

உண்டு முடித்த பின்னர்
உவகை யோடு நீயும்,
கொண்டு செல்வாய் செல்வம்!
என்று சொன்னாள் பாட்டி.

கண் பனிக்கத் திருடன்,
கத்தி நழுவச் சொன்னான் :
அன்னமிட்ட வீட்டில்,
கன்னம் வைக்க லாமோ?

திட்டம் வெற்றி கொள்ள,
திருடன் திரும்பிச் செல்ல,
கஷ்டம் நீங்கிப் பாட்டி
களிப்பில், தூங்கச் சென்றாள்!

- ஜக்குநாதன்



பரிதாபத்திற்கு உரியவர் யார்?

(கோபுவின் வீட்டுக் கூடத்தில் வாண்டுகள் உட்பட ஏராளமான சிறுவர் சிறுமியர் பட்டி மன்றத்தைக் காணத் திரண்டிருக்கிறார்கள். மேடையில் மேஜை போடப்பட்டு, இரு நாற்காலிகளும் போடப்பட்டுள்ளன. கோபுவின் அப்பா, சிவராமன், தலைவர் தணிகா சலத்தை அழைத்துக் கொண்டு வர, கூட்டத்தினர் பெரிதாகக் கத்தியும், கை தட்டியும் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள். சிவராமனும், தணிகாசலமும் நாற்காலிகளில் அமர, எல்லோரும் உட்காருகிறார்கள். சிவராமன் எழுந்து மைக்குக்கு வருகிறார்.)

சிவராமன் : பரிதாபத்திற்கு உரியவர்கள் யார் என்பதை அலசி எடுக்க வந்துள்ள பேச்சாளக் குழந்தைகளே, இந்தப் பரிதாபத்திற்கு உரிய பட்டி மன்றத்திற்குத் தலைமை தாங்க வந்துள்ள நடுவர் நண்டு பிடியூர் தணிகாசலனார் அவர்களே, இத்தனை பேருக்கும் போண்டா, காப்பி தரும் பொறுப்பை ஏற்றுள்ள பரிதாபத்திற்கு உரிய என் மனைவி மங்களநாயகியே, உங்கள் அனைவரையும் இந்தப் பட்டி மன்றத்திற்கு ஏற்பாடு செய்தவன் என்ற முறையில், இருகரம் கூப்பி, வருக வருக என அன்புடன் வரவேற்கிறேன். (திரும்பி ஒரு மூலையைப் பார்த்து) அங்கே ஜன்னல் கதவை பிளேடால் கரண்டும் கோடு போட்ட சட்டை வானர வீரருக்கும் அவருக்கு உதவிபுரியும் வீரக் குழவியினருக்கும் எனது சிரம்தாழ்ந்த பல நூறு வணக்கங்கள். நீங்களெல்லாம் வந்திருப்பது பட்டி மன்றத்தை சிறப்பிக்கத்தானே தவிர, கதவு ஜன்னல்களின் ஆயுளை முடிக்க அல்ல. இது வாடகை வீடு, இந்தப் பட்டி மன்றம் முடிந்த பிறகும் கூட எங்கள் குடும்பம் இந்த வீட்டில் தான் வாழ்ந்தாக வேண்டும். ஜன்னலுக்குக் கதவை எடுத்து விட்டால் திருடன் வந்து விடுவான் அல்லவா? அதற்காகவாவது கருணை காட்டி இங்குள்ள எதையும் தொடாமல் இருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இனி, இந்தப் பரிதாபமான பட்டி மன்றத்தை இங்கு என் வீட்டில் நடத்த எப்படி ஒப்புக் கொண்டேன் என்பதை உங்கள் எல்லோரிடமும் சொல்லி அழ வேண்டுமல்லவா?

கூட்டத்தினர் (ஒன்றாக) : சொல்லுங்கள், சொல்லுங்கள், அந்த உரிமை உங்களுக்கு உண்டு.

சிவராமன் : என் பையன் கோபுவை உங்களுக்கு நன்றாகத் தெரியும். படிப்பைத் தவிர மத்த எல்லாம் அவனுக்கு வரும். கிஷ்கிந்தையில் பிறந்து ராமபக்தனாக ஒளிவீச வேண்டியவன்! தப்பிப் போய் எனக்கு மகனாக இந்த வீட்டில் அவதரித்து விட்டான். ஒவ்வொரு வகுப்பிலும் இரண்டு ஆண்டுகள் படிக்கும் என் செல்லத் திருமகன் கோபு, போன வருஷம் என்னிடம் வந்தான். ''அப்பா, நான் இந்த ஆண்டு பெயிலாகாமல் பாஸ் பண்ணினால் என்ன தருவீங்க?'' என்று கேட்டான். நடக்காத

என். விஜயன்

காரியத்தைப் பற்றி என்ன வேண்டுமானாலும், பந்தயம் கட்டலாம் என்ற துணிச்சலில் ''அப்படி பாஸ் பண்ணினால் நீ என்ன கேட்டாலும் செய்கிறேன்'' என்று வாக்குறுதி தந்தேன். முப்பது மார்க் வாங்கியவர்களுக்குக் கூட பாஸ் போடப் போகிறார்கள் என்ற செய்தி எனக்குத் தெரியாது. என் பையன் கோபு பாஸ் பண்ணி விட்டான். சரி, சைக்கிளோ, காமிராவோ, கிரிக்கெட் செட்டோ, கேரம் போர்டோ கேட்பான் என்று எண்ணினேன். ஆனால் அவன் இந்தப் பட்டி மன்றத்தை நடத்த வேண்டும் என்று கூறிவிட்டான். கைகேயிக்கு வரம் கொடுத்த தசரதன் நிலை எனக்கு. நான் பட்டி மன்றம் இங்கே நடக்கப் போவதை, மாடியில் உள்ள வீட்டுக்காரரிடம் சொன்னதும் அவர் மாடிக்கும் கீழுக்குமாகக் குதித்தார். பட்டி மன்றம், கிட்டி மன்றம் எதுவும் இங்கே நடக்க விடமாட்டேன். வால் முளைக்காத வானரங்கள் கூடினால், வீட்டை அக்கக்காகப் பிரித்து எடுத்து விடுவார்கள். என்னைக் கேட்காமல் நீங்கள் ஒப்புக் கொண்டது தப்பு என்று குதித்தார். நான் கல்லும் கரையும்படி என் நிலையைச் சொன்னேன். கடைசியில் ஒரு வழியாகப் பட்டி மன்றம் நடத்த ஐம்பது ரூபாயும், சேதப் பாது காப்புக்காக ஐநூறு ரூபாய் முன் பணமாகத் தர வேண்டும் என்று நிபந்தனை போட்டார். வேறு வழியில்லாது ஒப்புக் கொண்டேன். அதனால் சீரும் சிறப்பும் மிக்க செல்வ வாண்டுப் படையினரே, இங்குள்ள கம்பம், கதவு, ஜன்னல் போன்றவைகளுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுத்து வீர்களானால், நான் கொடுத்து வைத்துள்ள சேதப் பாது காப்புத் தொகை ஐநூறும் எள்ளுதான். அதனால் என்மேல் பரிதாபப்பட்டு, இங்குள்ள உடமைகளுக்கு பாதிப்பு ஏதும் ஏற்படாது இருந்து என்னை சிறப்பாக்கு மாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பரிதாபத்திற்கு உரிய பட்டி மன்றத்தை இனிது நடத்தித் தரு மாறு உங்கள் சார்பில் நண்டுப்பிடியூர் தணிகாசலனார் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(வாண்டுகள் எல்லோரும் பலமாகக் கை தட்டுகிறார்கள்.)

தணிகாசலம் : ரொம்ப வித்தியாசமான தலைப்பு. சங்கடமானதும் கூட. இந்தப் பட்டி மன்றத்தின் முடிவில் தீர்ப்பு வழங்கும் பணியில் அநேகமாக நான்தான் பரிதாபத்துக்குரியவனாக இருப்பேன் என்று நினைக்கிறேன். (அனைவரும் சிரிக்கிறார்கள்) முதலில் அண்ணனார்கள் சார்பில் தன் வாதங்களைக் கூற சேதுவை அழைக்கிறேன்.

சேது : நடுவர் அவர்கள், தன் பால்ய காலத்தைக் கொஞ்சம் நினைத்துப் பார்க்கட்டும். சின்ன வயதில், வீட்டில் மூத்தவனாகப் பிறந்தவனுக்கு எத்தனை சிரமங்கள் இருக்கின்றன தெரியுமா? தம்பியும், தங்கையும் சண்டை போட்டுக் கொண்டால் கூட, 'நீ ஏன் தடுக்கவில்லை?' என்று மூத்தவனுக்குத்தான்



அடி விழும்! தம்பியோ, தங்கையோ அண்ணனிடம் வம்பு செய்தால் பாதிக்கப்படுவதும் அண்ணன்தான்! 'நீ ஏன் விட்டுக் கொடுக்கக் கூடாது?' என்று கேட்பார்களே தவிர, நம் பக்கத்தில் உள்ள நியாயத்தைக் கொஞ்சம் கூட யோசித்துப் பார்க்க மாட்டார்கள். தவிர, அப்பா ஏதாவது தின்பண்டங்கள், விளையாட்டுச் சாமான்கள் வாங்கி வந்தாலும் முதல் மரியாதை சின்னவர்களுக்குத்தான்! வீட்டில் அதிக செல்லம்

கொடுப்பதும் அவர்களுக்குத்தான்! இதையெல்லாம் பார்க்கும் போது ஏண்டா அண்ணனாகப் பிறந்தோம் என்று அழுகைதான் வருகிறது. இப்போது சொல்லுங்கள். யார் பரிதாபத்துக்கு உரியவர் என்று?


தணிகாசலம் : அண்ணனின் கட்சியை மட்டும் கேட்டால் போதுமா? ஆயிரக்கணக்கான தம்பிகள் சார்பில் தம்பியர் திலகம் தியாகுவைப் பேச அழைக்கிறேன்.

தியாகு : அண்ணன்கள் சார்பில் சேது அவர்கள் என்னவோ ரொம்ப உருக்கமாகப் பேசி விட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறார். உண்மை நிலையை நான் சொல்லுகிறேன். வாங்கி வரும் தின்பண்டங்களில் அப்பா எனக்கும், தங்கைக்கும் அதிக மாகக் கொடுப்பது என்னவோ உண்மை தான். ஆனால் அப்பா அந்தப் பக்கம் போனதும் அண்ணன், எங்களிட மிருந்து பாதியை 'லபக்'கென்று பிடுங்கிக் கொள்வது எந்த வகையில் நியாயம்? மேலும் அண்ணன், அடிக்கடி என்னை வேலை வாங்குவதும், சரியாகச் செய்யாவிட்டால் அம்மாவிடம் கோள் மூட்டுவதும், அம்மா என்னைத் திட்டுவதும் தினசரி நடக்கும் காட்சி. தவிர என் தங்கை... கத்தரிக்காய் சைஸில் இருந்து கொண்டு அவள் படுத்தும் பாடு....! என் நோட்டுப் புத்தகங்களைக் கிழிப்பது, ஒன்றும் தெரியாமல் சாது போல் இருந்து விடுவது, அப்புறம் அப்பா அதற்காக என்னை அடிப்பது.... இதெல்லாம் பரிதாபத்துக்குரிய விஷயம் இல்லையா? சந்தேகமே இல்லை. இரண்டு பக்கமும் அடிவாங்குவது தம்பிகளாகிய நாங்கள் தான்.

தணிகாசலம் : அண்ணனுக்கும், தம்பிக்கும் வாய்ப்புத் தந்தால் போதுமா? அது உண்மையை முழுவதும் அறியப் போதாதே. அதனால் ஆயிரக்கணக்கான தங்கைகள் சார்பில், அண்ணன்கள் தம்பிகளின் வாதத்திறமையைக் கிழித்தெறிய தங்கையர் திலகம் தீபாவைப் பேச அழைக்கிறேன்.



தீபா (மழலையில்) : பெரிய அண்ணனுக்குக் கோபம் வந்தால் அவன், சின்னவனைத் திட்டுவான். சின்னவன்? என்னைத்தான் அழவிடு வான்! நான் யாரைத் திட்டுவது? திட்டு வாங்குவதற்குத்தான் நான் பிறந்திருக் கிறேன் போலிருக்கிறது. அப்புறம்




எனக்கு வெண்டைக்காய் பிடிக்காது. ஆனா அம்மா சாப்பிடச் சொல்லிக் கட்டாயப்படுத்துவா. சாப்பிடாட்டா திட்டுவா. சில சமயம் அடிச்சுடுவா. எனக்கு மட்டும் இல்லே என் அண் ணங்க இரண்டு பேருக்கும் கூட வெண் டக்காய் பிடிக்காது. அவங்க என்ன பண்ணுவாங்கன்னா, நாங்க வீட்ல சாப் பிடல, ஸ்கூலுக்கு டிஃபன் பாக்ஸ்லெ வெச்சிடுன்னு சொல்லி தப்பிச்சுக்கு வாங்க. ஸ்கூல்ல வெண்டக்காயை தூக்கி காக்காவுக்குப் போட்டுடு வாங்க. இந்த மாதிரி தக்கலா பிக்கலா தனமெல்லாம் நான் எப்படி பண்ண முடியும்? அதனால நான்தான் பாவம்!

தணிகாசலம் : இவர்கள் மூன்று பேரும் பேசியதிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகத் தெரிகிறது. மூவரையும் சம மாகப் பராமரித்து, அன்பு செலுத்தி, அவர்கள் பிரச்னைகள் எதுவாக இருந் தாலும் தீர்த்து வைத்து, தன் குழந்தை களுக்காக ராப்பகலாகப் பாடுபடுவதில் பல கஷ்டங்களை அனுபவிப்பவர்கள் பெற் றோர்கள். குழந்தைகளின் நலனுக் காக குழந்தைகளுக்கிடையே இவர்கள் நாள் தோறும் நடத்தும், போராட்டம் பரிதாபத்திற்கு உரியது. அது அண்ணன், தம்பி, தங்கைகளின் துன் பங்களிலிருந்து முழுதும் மாறு பட்டது. மிகவும் பரிதாபத்திற்கு உரியது. இந்தப் பட்டிமன்ற ஏற்பாடுகளை எடுத்துக் கொள்ளுங்கள். இங்கே சிக்கிக் கொண்டு முழிப்பவர் கோபுவோ, அவன் தம்பியோ, தங் கையோ அல்ல. பரிதாபத்திற்குரிய அவன் பெற் றோர்களே. இதுவே ஒரு உறுதியான எடுத்துக்காட்டு. அதனால் பரிதாபத் திற்கு உரியவர்கள் அண்ணனோ, தம்பியோ, தங்கையோ அல்ல. பெற் றோர்கள்தான் என்று முடிவை வழங்கு கிறேன்.

"அந்த வீட்ல மட்டும் ஏன் மூணு தடவை கத்தறே?"

"அது ஏலக்காரர் வீடாச்சே?"

– ஜே. அப்துல் சலீம்





ஐயாவோட ரேங்க்!

"தாத்தா...."

பகவத் கீதை படித்துக் கொண்டிருந்த தாத்தா தலை நிமிர்ந்தார். 'பிராக்ரஸ் கார்டை' எடுத்து அலட்சியமாக நீட்டினான் ரமேஷ்.

"என்னப்பா ரமேஷ்?"

"பாருங்க ஐயாவோட ரேங்க்ஐ.....!"

ஸ்கூல் பேக்கை அசட்டையாகத் தூக்கிப் போட்டான் ரமேஷ்!

புரிந்துவிட்டது தாத்தாவுக்கு....! பையன் பள்ளியில் முதலாவது ரேங்கில் தேறியிருக்கிறான். குறிப்புரையில் தலைமையாசிரியர் வேறு, 'நன்று' என்று எழுதியிருக்கிறார். அதுதான். தங்கக் கிரீடத்தைத் தலையில் தூக்கி வைத்துவிட்டாற் போல, கனமேறிப் போய் விட்டது.

"அது மட்டுமில்லை தாத்தா. இந்த வருஷ ஆண்டு விழாப் போட்டிகளிலே நான்தான் நெறைய்யப் பரிசு வாங்கியிருக்கேன். அதனால எனக்கொரு வெள்ளிக் கோப்பை தரப் போறாங்களாம்....!"

பேரனின் திறமை மனசுக்குள்ளே சந்தோஷ மூட்டியது தாத்தாவுக்கு. ஆனாலும் அவன் காட்டும் செருக்குதான், பையனைப் பற்றிய கவலையைத் தந்தது.

"தாத்தா என்னால எங்க வகுப்புக்கே எவ்வளவு பெருமை தெரியுமா! என் 'ஃப்ரெண்ட்ஸெ'ல்லாம் கூடி நாளைக்கு எனக்கு ஒரு பெரிய 'பார்ட்டியே' குடுக்கப் போறாங்க! எங்க வகுப்பாசிரியர் கூட எனக்குன்னு தனியாப் பரிசு தரேன்னிருக்கார்... என்ன தாத்தா, நான் பாட்டுக்குச் சொல்லிக்கிட்டே இருக்கேன். நீங்க பாட்டுக்கு சும்மா இருக்கீங்க!"

"ம்....? மலைச்சுப் போயிட்டேன். எம் பேரன் எவ்வளவு கெட்டிக்காரன்!" என்றார் தாத்தா.

அவர் மனதுக்குள், 'எத்தனைதான் புத்திசாலிப் பையன் என்றாலும் இத்தனை கர்வம், அதுவும் இத்தனை சின்ன வயசில் கூடாதே. இதற்கு என்ன செய்யலாம்' என்ற யோசனை மெல்லச் சுழல ஆரம்பித்தது!

அன்று ஞாயிற்றுக் கிழமை. ரமேஷ் தாத்தாவிடம் கேட்டான்.

"ஏன் தாத்தா, இன்னிக்கு எங்காவது போகலாமா?"

"போகலாம்தான்! எங்கே போறது? அதுவும் இந்தக் காலை வெயில்லே?" என்று சொல்லி விட்டுக் கொஞ்ச நேரம் யோசித்த தாத்தா முடிவாய்ச் சொன்னார்.

"ஏன் ரமேஷ், உன் தோட்டத்துக்குப் போனா என்ன? நீ வச்சிருக்கிற பூச்செடிகளையெல்லாம் பார்த்த மாதிரியா இருக்கும்! சுகமாக் காத்தும் கெடைக்கும்?"

இருங்கை சேதுபதி

சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தான் ரமேஷ். ''வாங்க தாத்தா வாங்க!'' என்று உற்சாகமாய், உட்கார்ந்திருந்த தாத்தாவின் கையைப் பிடித்து இழுக்தான்!

இப்போதிருக்கும் வீட்டிற்குச் சற்றுத் தள்ளியிருப்பது அவனது தோட்டம்! இப்போதிருக்கிற வீட்டைக் கட்டிக் கொண்டிருக்கும் போது, அந்தத் தோட்டத்திலிருக்கும் வீட்டில்தான் குடியிருந்தார்களாம் எல்லோரும்! இப்போது அதில் தட்டுமுட்டுச் சாமான்களைப் போட்டு அடைத்து வைத்திருக்கிறார்கள்.

''தாத்தா... என்னோட பிறந்த நாளுக்கு அப்பா வாங்கித் தந்தாரே ரோஜாக் கன்னு. அது இப்போ மொட்டு விட்டிருக்கே தெரியுமோ!'' என்று சொல்லும் போதே ரோஜாவாய் மலர்ந்திருந்தது அவனது முகம்.

''அப்புறம் கத்தரிச் செடியெல்லாம் பிஞ்சு விட்டிருச்சு. புடலையெல்லாம் நீங்க கட்டின கல்லைச் சுமந்துக் கிட்டுப் பச்சைப் பாம்பு மாதிரி தொங்கறது எவ்ளோ அழகா



இருக்கு தெரியுமா? அட! சொல்ல மறந்துட்டேனே, தாத்தா..... நீங்க கிராமத்துக்குப் போயிட்டு வந்தப்போ கொண்டு வந்திங்களே.... ஆறு வாழைக்கன்னு, அதை வச்சு வளர்த்தோமில்லே... இப்போ அதுல ரெண்டு மரம் தார் விட்டிருக்கு தாத்தா!'' -சொல்லிக் கொண்டே வந்தான் ரமேஷ், தாத்தாவின் கையைப் பிடித்துக் கொண்டு.

தோட்டம் பச்சை போர்த்திக் கிடந்தது. தூரத்திலேயே நின்று வரவேற்று இலைக்கைகளை அசைத்தன வாழை மரங்கள்.

உற்சாகமாகக் கூவினான் ரமேஷ். ''தாத்தா தோபாருங்க நம்ப வாழை மரம்... எவ்வளவு ஜோரா நிக்கிது....!''

கம்பீரமாய் வளர்ந்து எல்லாத் திசைகளிலும், இலை விரித்திருந்தன வாழை மரங்கள். ''ரெண்டு மரம் பூ விட்டிருக்குன்னியே இதுதானா?'' எனத் தேடி, இலைகளை விலக்கிப் பார்க்கையில்... மூன்று மரங்களில் பூ விட்டிருப்பது தெரிய வந்தது....!

மௌனமாக நின்று பார்த்துக் கொண்டிருந்த தாத்தாவுக்கு அம்மரங்களின் நிலை புதிய யோசனைகளைத் தந்தது. முந்திய நாள் அவன் பிராக்ரஸ் கார்டோடு வந்து காட்டிய கர்வம் நினைவுக்கு வர, மெல்ல வாய்திறந்தார்!

''இந்த வாழை மரத்தை எதுக்காக நட்டு வளர்க்கிறோம் ரமேஷ்?''

''இது என்ன தாத்தா கேள்வி...! அது தர்ற வாழைப் பழத்துக்காகத்தான்!''

''வாழைப் பழங்களை மட்டுந்தானா இந்த மரம் தர்றது?''

''இல்லே, சாப்பிடறதுக்கு இலை தருது. வெட்டினதுக்கப்புறம் சமையலுக்குத் தண்டு தருது. வாழைப் பூ தருது,



ஏன், வாழை நார் கூட பூக்கோர்க்க உபயோகமாச்சே?''

''சரியாச் சொல்லிட்டே! இவ்வளவுந்தர்ற வாழை மரம், தான் அழிஞ்சதுக்கப்புறமும் தனக்கடுத்து வாரிசுகளாக நாலைஞ்சு வாழைக் கன்றுகளையும் விட்டுட்டுப் போறதைக் கவனிச்சிருக்கியா?''

''ஆமா தாத்தா... அதனாலதான் வாழையடி வாழைன்னு சொல்லுவாங்க!''

''ஆமா ரமேஷ் - இவ்வளவு பெருமைகளும் இதற்கு இருக்கறதனால்தான், வாழை மரங்களைக் கல்யாண வீட்டிலே கட்டி வைக்கிறாங்க! நீ கூட பார்த்திருப்பியே!''

''ஓ....!'' பலமாகத் தலையசைத்தான் ரமேஷ். ''அப்பா! அழகா... வழுவழுன்னு மேலே பார்த்து எப்படி வளர்ந்திருக்கு!''

''நீ சொல்றது இலைக்குருத்து கண்ணா... அதுக்கும் மேலே பக்கத்திலே வளர்ந்திருக்கும் இலைகளைப் பார்!''

''சொரசொரன்னு முரசலா.... கிழிஞ்சு போயிருக்கு தாத்தா!''

''ஆமா, அதுக்குக் காரணம் என்னன்னு தெரியுமோ?'' யோசித்தான் ரமேஷ். ''காற்றினால் கிழிஞ்சிருக்குமோ!''

''சரிதான் ரமேஷ்! அது கிழிஞ்சு போனதுக்கு அதுவேதான் காரணம்....!''

''எப்படி?'' - என்பதைப் போலப் பார்த்தான் ரமேஷ். ''நான்தான் வாழை மரத்துக்கு கிரீடம்னு அதுக்கொரு கர்வம், நான்தான் பெரியவன்னு ஒரு திமிர். அதனால தலை கொள்ளாம ஆடி காற்றினால, மழையினால கிழிஞ்சு தோரணச் சருகா அழிஞ்சிருக்கு! அதே நேரத்தில் இந்தப் பூவைக் கவனிச்சியா? எவ்வளவு அடக்கமா, தலைகுனிஞ்சு இருந்த இடந்தெரியாம இருக்கு! வாழையிலையை விட வாழைப் பழங்கள் தான் முக்கியம்னு நீ சொன்னியே, நாம அதுக்காகத்தானே இதை வளர்க்கிறோம்? அந்த லட்சியத்தை நிறை

வேற்றும் பெரிய பொறுப்புள்ள, இந்த வாழைப் பூ எவ்வளவு, அடக்க மாகத் தலைகுனிஞ்சிருக்கு பாத் தியா....! இது வும் வாழையிலை மாதிரி திமிரோட மேனோக்கி வளர்ந்திருந்தா, வாழைக் காய் வருமா? அப்படியே வந்தாலும் அணில், குருவிகள்தான் அதை விட்டு வைக்குமா?''

''திறமையோட இருக்கிறது பெருமைதான் ரமேஷ். அத்தோட அடக்கமா இருந்து செயல் படறதுலதான் அதிகப் பெருமை இருக்கு! அதுதான் கனியற அளவுக்கு ஞானத்தையும், வளர்ச்சியையும் குடுக்கும். புரியுதா....?'' என்று பேச்சை நிறுத்திவிட்டு பேரனைப் பார்த் தார் தாத்தா....

வாழைப் பூவாய்த் தலை குனிந் திருந்த ரமேஷ் தலையாட்டினான்!

பேரனின் மன மாற்றம் தாத்தாவுக்குப் புரிந்துவிட்டது. சந்தோஷமாக அவனைத் தட்டிக் கொடுத்தார் தாத்தா!

யாருக்குக் குடை?

பம்பாய் ஆஸாத் மைதானத்தில் 1940-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் மாபெரும் காங்கிரஸ் பொதுக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

நேருஜி, மௌலானா ஆஸாத், புலாபாய் தேசாய் ஆகியோர் அதில் பேச இருந்தார்கள்.

நேருஜி பேசத் தொடங்கிய போது பெரும் மழை கொட்டத் தொடங்கியது. இருந்தாலும் கொட்டும் மழையிலும் இலட்சக்கணக்கான மக்கள் கொஞ்சங் கூட அசையாமல் அமர்ந்து நேருஜியின் சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்!



அப்போது ஒருவர், குடை ஒன்றை விரித்து நேருஜியின் தலைக்கு மேலே பிடித்தார். நேருஜி நனைகிறாரே என்று அவர் கவலை!

''இத்தனை மக்கள் மழையில் நனையும் பொழுது எனக்கு மட்டும் குடை எதற்கு?'' என்று கோபமாகக் கேட்டார் நேருஜி.

குடை பிடிப்பவரோ நேருஜியின் கோபத்தைப் பொருட்படுத்தவில்லை! தொடர்ந்து குடை பிடித்துக் கொண்டே இருந்தார்.


நேருஜி பொது மக்களை நோக்கிப் புன் சிரிப்புடன், ''இவர் என் சொல்லையும் மீறிக் குடை பிடிப்பதைப் பார்த் தால் இவர் ஒலிபெருக்கியின் (மைக்) சொந்தக்காரராக இருப்பார் என்று நினைக்கிறேன்! இவர் எனக்காகக் குடைபிடிக்கவில்லை. ஒலிபெருக்கியை மழையிலிருந்து பாதுகாக்கவே குடை பிடிக்கிறார்'' என்று சிரித்துக் கொண்டே கூறியதுதான் தாமதம் -

கூட்டத்தினர் மழையை விடப் பலமாக ஆரவாரம் செய்தனர்!

'சிரிக்க சிந்திக்க - மேதைகளின் நகைச்சுவை' என்ற நூலிலிருந்து.

– ஆ. முருகன், சங்கராபுரம்.

பெரிய அரிச்சந்திரன்!



எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்

முத்துவைப் பார்த்ததும் மாதவன் எழுந்து அவர்களை அன்புடன் வர வேற்று கட்டிலில் உட்காரச் சொன் னான்.

''மாதவா! நீ இந்தக் கோடை விடு முறைக்குப் பட்டணம் போகப் போவ தாகச் சொல்லிக் கொண்டிருந்தாயே! போகவில்லையா?'' - முத்து கேட்டான்.

''இல்லை!'' இந்தத் தோப்பின் சொந்தக்காரர் என்னைச் சந்தித்தபோது 'இந்தத் தோப்பிற்குக் காவலாக ஒரு மாதம் இருக்க முடியுமா?' சம்பளம் தரு கிறேன் என்றார். விடுமுறையை வீணாகக் கழிப்பதைவிட இப்படி வேலை செய்தால் நல்லதுதானே? அடுத்த வருடம் புத்தகங்கள் வாங்க உதவியாயிருக்கும், என்று எனக்கும் தோன்றியது. ஒப்புக் கொண்டேன்!'' என்றான் மாதவன்.

''நீ இங்கே இருப்பது அவருக்கு மட்டுமல்ல எங்களுக்கும்தான் உதவியா இருக்கும்!'' என்று சிரித்துக் கொண்டே சொன்னான் முத்து!

''ஏன் அப்படிச் சொல்கிறாய்?''

''காரணமாத்தான்'' என்று சிரித்த முத்து, ''இவன் என் நண்பன். பெயர் அரசப்பன்! ஊருக்குப் புதிது. இந்த மாம்பழங்களைச் சாப்பிட ஆசைப் பட்டான். மரத்து மேலே ஏறிக் கொஞ்சம் பறித்துக் கொள்ளட்டுமா?'' என்று கேட்டான்.

''அது எப்படி முத்து முடியும்? இது என்னோட தோப்பில்லை! இந்தப் பழங் களைப் பறிக்க எனக்கு உரிமையில்லை! நான் காவல் காக்கிறது பறவைகள் கொத் தாமல், குரங்குகள், அணில்கள் கடிக் காமல், மனிதர்கள் திருடாமல், பாது காக்கத்தான். என் விருப்பப்படி எனக்கு வேண்டியவர்களுக்குப் பறிச்சுக் கொடுக்க இல்லே....'' என்றான் மாதவன் பணிவானகுரலில்!

''மாதவா! நீ என் நண்பன்!'' - என் றான் முத்து.

''ஆனால் இந்தப் பழங்கள் என் னோடதல்லவே....!''

''சரி! அந்தக் கூடையிலே சில பழங் களை வச்சிருக்கியே! அதையாவது....''

''அது தானாகக் கீழே விழுந்த பழம்! தினமும் அப்படி விழற பழங்களை பொறுக்கி சேர்த்து வச்சிருக்கேன்! சொந் தக்காரர் வந்ததும் ஒப்படைச்சுடுவேன். அதிலிருந்து ஒரு பழம் கூட என்னால் எடுக்க முடியாது முத்து!''

''சரிதான்! போடா! பெரிய அரிச் சந்திரன் இவன்.'' அரசப்பன் முத்துவின் தோளில் கைபோட்டபடி மாதவனைக் கேலியாகப் பார்த்தான்.

''கோபிக்காதே அடுத்த வாரம் பழங் களை அறுத்ததும் எனக்கு ஒரு கூடை கிடைக்கும். நானே கொண்டு வந்து உங்களுக்கு வேண்டிய பழங்களைத் தரு கிறேன்!''

''டேய் மாதவா! உனக்கு இவ்வளவு திமிரா? இப்போ நாங்களே மரத்தில் கல்லை விட்டெறிந்தால் உன்னால் என்ன செய்து விட முடியும்?'' முத்து கேட்டான்.

''ம்! அப்படிச் செய்தால் கத்துவேன்! அடுத்த தோப்பு காவலாளிகள் வந்து உங்களையும் பிடித்துக் கொள்வார் கள்!'' என்ற மாதவன் ஏதோ சத்தம் கேட் டுப் பின்னால் திரும்பிப் பார்த்தான்! தோப்புச் சொந்தக்காரர் தூரத்தில் வந்து கொண்டிருந்தார்.

''முத்து! வா போகலாம்! இவனுக்குச் சரியான பாடம் கற்பிக்க எனக்குத் தெரியும்!'' என்றபடி அரசப்பன் முத்துவை இழுத்துக் கொண்டு பரபரவென்று வெளியேறிவிட்டான்!

அன்றிரவு -

மாதவன் டார்ச் விளக்கை இப்படியும் அப்படியும் அடித்துப் பார்த்துக் கொண்டு விழிப்புடன் காவல் காத்துக் கொண்டிருந்தான்! அப்போது சற்றுத் தூரத்தில் இருந்த ஒரு மரத்தில் யரோ மெதுவாக ஏறிக் கொண்டிருப்பது தெரிந்தது.

''ஏய் யாரது?'' - மாதவன் அந்த மரத்தினருகே கூச்சலிட்டபடி விரைந்தான்! அந்தச் சிறுவன் வாட்டசாட்டமாக இருந்தான்! பார்வையே பயமூட்டுவ தாக இருந்தது!

''ஏய் தம்பி! கூச்சல் போடாதே! போட்டே உன்னை ஒரே நசுக்கா நசிக்கிடுவேன்! ஜாக்கிரதை!'' - குரலும் கொடூரமாகத் தொனித்தது.

''ஏய்! நில்லு!...'' அதட்டல் போட்டான் மாதவன்!

''ஏய்! காவல்காரத் தம்பி! என் பேர் சிங்கராஜ்! குச்சிபோல இருந்துக்கிட்டு குறும்பு செய்யாதே! மீறி கத்தினே... ஜாக்கிரதை! எனக்கு வேண்டியது ஒரு கோணி பழம்! பறிக்கக்கிட்டு இறங்கற வரைக்கும் மூச்சு விட்டே.... பொல்லாதவனாயிடுவேன்!'' என்றபடி சிங்கராஜ் மரத்தில் கீழ்க் கிளையைப் பிடித்துத் தொங்கியபடி மரத்தில் ஏறலானான்!

மாதவன் பயந்த நிலையிலிருந்தான்! - சிங்கராஜின் உருவம், பேச்சு, பார்வை அப்படி அவனைப் பயமுறுத்தி இருந்தது! 'என்ன செய்யலாம்?' என்று யோசித்தான்! அவன் அறிவு வேகமாக வேலை செய்தது.

''சிங்கராசு! சிங்கராசு!'' - மாதவன் மெதுவான குரலில் சிங்கராசுவைக் கூப்பிட்டான்.

''என்ன?''

''மாங்காய்ப்பால் பட்டால் சட்டை பாழாகிவிடும்! உன் சட்டையைப் பார்த்தால் விலையுயர்ந்த சட்டையாக இருக்கும் போல் தெரிகிறதே!''

''அடேடே! ஆமாம்! நானே கழட்ட வேண்டும் என்று நினைத்திருந்தேன். மறந்துட்டேன்! இதைப் பத்திரமாக வைத்திரு,'' என்றபடி சட்டையைக் கழட்டி மாதவனிடம் எறிந்தான்! மாதவன் சட்டையை வாங்கி நன்றாகப் பார்த்தான்! அவன் மூளை பலமாக சிந்தித்தது.... இப்படிச் செய்யலாமா?... ம்! அதுதான் சரி! ஒரு நிமிடம்...



இரண்டு.... மூன்று... நான்கு... ஐந்து.... ஆறு.... ஏழு..... எட்டு... ஒன்பது.... பத்து... என்று நேரம் பறந்துவிட்டது!

சிங்கராசு ஒருவழியாக மளமளவென்று மாம்பழங்களைச் சிறு கோணிப் பையில் நிரப்பி முதுகில் லாவகமாகக் கட்டிச் சுமந்தபடி கீழே இறங்கினான். கீழே இறங்கியதும் மூட்டையைக் கீழே இறக்கி வைத்துவிட்டு மாதவனிடமிருந்து சட்டையை வாங்கிப் போட்டுக் கொண்டான். அப்போது மாதவன் சற்று பயத்துடன் சிங்கராசுவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஏய்! என்ன... என்னையே பார்த்துக் கொண்டிருக்கிறாய்?'' - சிங்கராசு மூட்டையைக் கெட்டியாகக் கட்டிக் கொண்டிருந்தான்!

''சிங்கராசு! இவ்வளவு பழங்களை என்ன செய்யப் போகிறாய்?'' - மாதவன் கேட்டான்.

''கால் பங்கு என் நண்பர்களுக்கு! முக்கால் பங்கு எனக்கு! என் பங்கை என்

னோட கிராமத்திற்கு எடுத்துச் சென்று விற்றுவிடுவேன்! என்றான் சிங்கராசு.

''அப்படியானால் ஒன்று செய்! இந்த கிராமத்திலேயே நான் சொல்கிற வீட்டிற்குச் சென்றால் எல்லாப் பழங்களையும் மொத்தமாக நல்ல விலைக்கு விற்றுவிடலாம்! அவர்களுக்கும், அவர்கள் வீட்டில் நடக்கவிருக்கும் திருமணம் ஒன்றிற்காக நிறையப் பழங்கள் தேவைப்படுகிறது இப்போது.''

''நல்ல யோசனை! எந்த வீடு அது?''

''17, நல்ல பிள்ளைத் தெரு.''

'ம், ஆமாம்! நீயே எனக்கு யோசனை சொல்வது எனக்கு ஆச்சரியமாயிருக் கிறது!''



பரீட்சை முடிவு!



முடிவு வருது முடிவு வருது
முழுப் பரீட்சை முடிவு வருது!
விடிய விடிய படித்து வரைந்த
விடைத் தாளின் முடிவு வருது!

உணவும் உண்ண முடிய வில்லை
உறக்கம் கண்ணில் வருவ தில்லை.
கனவில் கூட முடிவில் வந்து
கலக்கும் வயிறு ஐயோ தொல்லை!

வெற்றி பெற்றால் எந்தன் அப்பா
விரும்பி யதை வாங்கித் தருவார்
முற்றும் தோல்வி யடைந்து
விட்டால்
முதுகுத் தோலை உரித்துத் தருவார்!

சிலரின் வாழ்வில் இன்ப மாக
சிரிக்கச் செய்து காட்டும் முடிவே
பலரின் வாழ்வில் துன்பம் தந்து
பார்த்து நகைத்துக் காட்டும்
முடிவே!

- தமிழன்பன்

''தீமை செய்தவர்க்கும் நல்லது செய்ய வேண்டும் என்று நினைப்பவன் நான்.''

''அப்படியா? என்று சிரித்தபடியே சிங்கராசு மாதவனை மடமடவென்று பிடித்து இழுத்து ஒரு மரத்தோடு மர மாகச் சேர்த்துக் கட்டிவிட்டான். அவன் வாயிலும் துணியை அடைத்துவிட் டான். தான் மறைந்ததும் மாதவன் கூச்சல் போட்டுத் தன்னைக் காட்டிக் கொடுத்து விடுவானோ என்ற பயம் அவனுக்கு! முதுகில் மூட்டையைச் சுமந் தால் சட்டை கெட்டுவிடும் என்று தலை மீது மூட்டையை வைத்துக் கொண்டு புறப்பட்டான்.

சிங்கராசு மாதவன் சொன்ன அந்த வீட்டைக் கண்டு பிடித்து உள்ளே சென்று குரல் கொடுத்தான்! ஒரு பெரி யவர் வந்தார்!

''ஐயா! உங்க வீட்டுத் திருமணத் திற்கு மாம்பழம் கேட்டதாக மாதவன் சொன்னான்! கொண்டு வந்திருக்கேன்!'' என்றபடி சிங்கராசு மூட்டையை இறக்கிக் கீழே வைத்தான்!

''மாம்பழமா?... எனக்கா?... எனக்கு ஒரு தோப்பே இருக்குப்பா!... நீ விலாசம் மாறி வந்திருக்கிறாய்!'' என் றார் பெரியவர்! இதைக் கேட்டதும் சிங்கராசு பயந்துவிட்டான்!''

மாதவன் தன்னை ஏமாற்ற ஏதோ விளையாடி யிருக்கிறான்! என்று நினைத் தபடி மூட்டையைத் தூக்கத் திரும்பி னான்! அப்போது பெரியவர் ''தம்பி! நில்! நில்!'' என்றபடி அவனருகில் சென்று முதுகுப்புறத்தைக் கவனித்தார்!

''என்ன தம்பி இது? உன் முதுகில் தாளில் ஏதோ எழுதிக் குத்தியிருக் கிறது?''

''அப்படியா?''

''ஆமாம்! இதோ பார்!'' என்றபடி முதுகுப்புற சட்டைப்பகுதியில் குண்டூ சியால் குத்தப்பட்டிருந்த ஓர் அரைக் காகிதத்தை எடுத்து அவனிடம் காண் பித்து விட்டு அவரே படித்துக் காண் பித்தார்.

''ஐயா! இவன் பெயர் சிங்கராசு! அடுத்த கிராமத்தைச் சேர்ந்தவன்! இவன் என்னைப் பயமுறுத்தி மாந்தோப்பில் மாம்பழங்களைப் பறித்துத் தப்பித்துக் கொண்டு வருகிறான்! நான்தான் தந்திர மாக இவன் சட்டையில் இந்தக் கடி தத்தை எழுதி 'பின்' செய்து உங்கள் வீட்டிற்கே அனுப்பியிருக்கிறேன்! இவனைப் பிடித்துக் கொள்ளுங்கள்'' - இப்படிக்கு, மாதவன்! இதைக் கேட் டதும் சிங்கராசு 'திரு திரு'வென்று விழித்தான். அவன் உடம்பு நடுங்கியது.

''ஏய்! இதெல்லாம் உண்மை தானே?'' - தோப்புச் சொந்தக்கார் அதட்டினார்!

''ஆமா...ம் சார்! தெரியாம செய் துட்டேன்! மன்னிச்சுடுங்க சார்...! தோப் பிலே மாதவனைக் கட்டிப் போட்டு விட்டு வந்திருக்கேன் சார்!'' - சிங்கராசு குரல் நடுங்க தன் தவற்றை ஒப்புக் கொண்டான்!

மாந்தோப்பை அடைந்ததும் சிங்க ராசுவே மாதவன் வாயில் அடைக்கப் பட்டிருந்த துணியை எடுத்துக் கட்டை அவிழ்த்தான்!

''மாதவா! நானா இந்தத் திருட்டை செய்யல்லே - முத்துவும், அரசப்பனும் என்னிடம் வந்து உன்னைப் பயமுறுத்தி இப்படி பழங்களைத் திருடிக் கொண்டு வந்துரச் சொன்னாங்க.... அவங்களுக் குக் கொடுத்தது போக, மீதிப் பழங் களை வித்து பணம் சம்பாதிக்க நானும் ஆசைப்பட்டேன். நான் என் உடல் பலத்தைக் காட்டி உன்னை பயமுறுத்தி னேன். ஆனால் நீ அறிவுபலத்தால் என்னை ஜெயிச்சுட்டே...'' என்றான் சிங்கராசு!


தோப்புச் சொந்தக்காரரான பெரி யவர் மாதவனின் அறிவுக் கூர்மையை, நேர்மையை வியந்து பாராட்டினார். அவனுக்குப் பரிசுகள் பல கொடுத்து ஊக்குவித்தார்.

மாதவன் நன்றிப் பெருக்குடன் அவரைப் பார்த்துக் கை கூப்பினான்!

இப்போது சிறுவர்களுக்கு உயிராய் விளங்கும் 'பப்பிள்கம்' 1928 - ஆம் ஆண்டு 'வால்ட்டர் டைமா' என்பவ ரால் கண்டு பிடிக்கப்பட்டது. அப் போது, அவரது பப்பிள்கம் தயாரிக் கும் யோசனையைப் பைத்தியக்காரத் தனமானது, போணியே ஆகாது என்று பலரும் ஏளனம் செய்தார் களாம். ஆனால், இன்று ஆண்டுக்கு 150 மில்லியன் டாலர் பிசினெஸ் ஆகிறது பப்பிள்கம்!


– மதுகை எம். அஹமது அலி





''அமெரிக்காவின் ஒஹையோ மாநிலத்தில் இன்றும் நடை முறை யில் உள்ள சட்டம் இது; நாய் பூனை போன்ற வீட்டு மிருகங்களை இரவில் வெளியே அழைத்துச் சென் றால், இந்த மிருகங்கள் தங்கள் வால் ஆரம்பமாகும் இடத்தில் விளக்குப் பொருத்தியிருக்க வேண்டும். 'வால் விளக்கு' இல்லாத மிருகங்களை அழைத்துச் செல்பவர்களுக்கு அப ராதம் உண்டு. இவை போன்ற உயி ரினங்களுக்கு விபத்து ஏற்படாதிருக் கவே இச்சட்டமாம்!''

– தக்கோலம் அ. முஸ்தபா



பானை சோற்றுக்கு

எங்கள் பள்ளி உடற்கல்வி ஆசிரியர் நகைச்சுவையாகப் பேசுவார். புதுசு புதுசா ஏதாவது விளையாட்டைச் சொல்லிக் கொடுப்பார். ஒரு நாள் பி.டி.



பீரியட்டில் அவர், ''இன் றைக்கு உட்கார்ந்தபடியே விளை யாட்டு. நான் ஒரு பழமொழியின் முதல் வரியைச் சொல்லுவேன். அடுத்த வரியை நீங்கள் சொல்ல வேண்டும். சரியா?'' என்றார். நாங்கள் 'சரி' என்ற தும் அவர் 'ஒரு பானை சோற்றுக்கு....' என்றார். உடனே ஒரு குறும்புக்காரப் பையன் எழுந்து, ''ஒரு சட்டி குழம்பு சார்!'' என்றதும் பலமான சிரிப்பு - ஆசிரியர் உட்பட.

- கு. ஆசைத்தம்பி, சோழன் மாளிகை

வாலை நறுக்கு!

என் பேரன் அரவிந்தனுக்கு நாலு வயது. ரொம்பக் குறும்புக்காரன். அவன் குறும்பு செய்யும் போதெல்லாம், கண்டிக்கும் விதமாக, ''இரு, இரு, உன் வாலை ஒட்ட நறுக்கிடறேன்!'' என்பார் அவன் தாத்தா.

ஒரு நாள், காலை சமையலுக்கு வேண்டிய காய்கறியெல்லாம் நறுக்கி விட்டு, நான் என் மருமகளிடம், ''இன்னும் ஏதாவது நறுக்க இருக்கா?'' என்று கேட்டேன். உடனே என் பேரன் அரவிந்த், ''பாட்டி, இப்ப என் வாலை



ஒட்ட நறுக்கேன், பார்க்கலாம்!'' என் றானே பார்க்கலாம். குபீர்ச் சிரிப்பில் வீடே அதிர்ந்தது.

- வசந்தா மகாதேவன், சென்னை - 82.

கல் மிதக்காத காரணம்!

நான் எட்டாம் வகுப்பு படிக் கிறேன். எங்கள் அறிவியல் ஆசிரியர்

ரொம்ப கோபக்காரர். அவர் கேட்கிற கேள்விகளுக்கு சரியான பதில் சொல்லா



விட்டால் அவ்வளவுதான்! பின்னி எடுத்து விடுவார்! ஒரு நாள் அவர், ''கல் ஏன் நீரில் மிதப்பதில்லை?'' என்று கேட்டார். யாருக்கும் சரியான பதில் தெரியவில்லை. ஆசிரியர் அடிக்கப் போகிறாரே என்ற பயம் வேறு! ஒரு பையன் மெதுவாக எழுந்தான். ''சார்! நான் பதில் சொல்லலாமா?''

''சொல்!''

''கல் ஏன் மிதக்கலைன்னா, அதுக்கு நீச்சல் தெரியாது சார்!''

அவ்வளவுதான், வகுப்பறையே சிரிப்பில் மூழ்கியது.

- எஸ். பெருமாள்,
கொண்டரசம் பாளையம்.

ஆறு அதிர்ஷ்டம்!

எங்கள் பக்கத்து வீட்டில் ராமு என்று ஒருவர் குடியிருந்தார். அவர் சரியான குதிரைப் பைத்தியம். எப்பவும்



'ரேஸ்'தான்! ஆனால் ஒருமுறை கூட அவர் ஜெயித்ததே இல்லை! அதனால் அவர் ஒரு ஜோசியரிடம் சென்று, 'நான் குதிரைப் பந்தயத்தில் எப்படி ஜெயிப்பது?' என்று கேட்டார். அதற்கு ஜோசியர், ''உங்களுக்கு அதிர்ஷ்ட எண் ஆறு. ஆறாம் தேதியில், ஆறு மணிக்கு, ஆறு டிக்கெட் எடுங்கள். அப்புறம் பாருங்கள்!'' என்றார். ராமுவும் சந்தோஷமாகத் திரும்பி, ஜோசியர் சொன்னபடியே செய்தார்!

என்ன ஆயிற்று, தெரியுமா? குதிரையும், பந்தயத்தில் ஆறாவதாகத்தான் வந்தது!

- பி. ஜெயக்குமார், வந்தவாசி.


நேரம் தெரியாது....!

எங்கள் பள்ளியில், ஆறாம் வகுப்பில் ஆசிரியர் ரொம்ப சுவாரஸ்யமாகப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். ரமேஷ் என்கிற சிறுவன் ரொம்ப லேட்டாக வந்து 'சார்' என்று கூப்பிட்டான்.

''ஏன் லேட்?'' என்று ஆசிரியர் கோபமாகக் கேட்டார். அதற்கு அவன்,



''கிரிக்கெட் மேட்ச் பார்ப்பதாகக் கனவு கண்டேன், சார்!'' என்றான். ஆசிரியருக்கு ஒன்றும் புரியவில்லை. ''அதற்கும், நீ லேட்டாக வந்ததற்கும் என்ன சம்பந்தம்?'' என்று கேட்டார். அதற்கு ரமேஷ், ''அவர்கள் நேரம் போவது தெரியாமல் விளையாடிக் கொண்டிருந்தார்



இறந்தும் ஈந்த வள்ளல்

‘அப்துல் காதர் மரைக்காயர்’ - என்ற இயற்பெயர் கொண்டவர் சீதக்காதி வள்ளல். இவர் வரையறாது வழங்கும் கொடைத் தன்மை மிக்கவர். மிகுந்த தமிழ்ப் பற்று உடையவர். பல தமிழ்ப் புலவர்களை ஆதரித்தவர். நபிபெருமானின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும், ‘சீறாப் புராண’த்தை எழுதிய உமறுப்புலவரை ஆதரித்தவர் இவரே. உயிருடன் இருக்கும் பொழுது மட்டுமல்ல, இறந்த பிறகும் கொடை கொடுத்த பெருமை இவருக்குண்டு.

புலவர் ஒருவர் ஒருநாள் சீதக்காதி வள்ளலைத் தேடி வந்தார். அவரை வரவேற்றுப் போற்றிய ‘சீதக்காதி வள்ளல்’ அவரிடம் ‘‘என்ன குறை?’’ என்று கேட்டார். புலவர் தாம் மிகுந்த வறுமையில் வாடுவதாகத் தெரிவித்தார். இதைக் கேட்டு வருந்திய வள்ளல், அவருக்குத் தேவையான பொருட்களை அளித்து அனுப்பி வைத்தார். புலவர் அவரை வாழ்த்திச் சென்றார். புலவர் உள்ளம் மகிழ்ந்தது. புரவலர் நெஞ்சம் நிறைந் தது.

ஆண்டுகள் ஓடின. புலவரை வறுமை மீண்டும் ஆட்கொண்டது. வள்ளலை மறுபடி காண விரைந்து வந்தார். ஆனால் அங்கு ஒரு சோகச் செய்தியைக் கேட்டார். ‘சீதக்காதி வள்ளல் மறைந்து விட்டார்’ - என்பது தான் அது. புலவர் மனம் கலங்கினார். கதறி அழுதார். சீதக்காதியின் உடல் புதைக்கப்பட்ட இடு காட்டை அடைந்தார். கதறி அழுதபடி நின்றார். இனித் தன்னுடைய வறுமையைத் தீர்க்கக் கூடியவர் யார் இருக்கிறார்கள்? அது எப்படித் தீரப் போகிறது என உள்ளம் வருந்தினார். அப்பொழுது ஒரு அதிசயம் நடந்தது. வள்ளல் புதைக்கப்பட்ட இடத்தில் ஒரு பிளவு ஏற்பட்டது. அது வழியாக ஒரு கை தோன்றியது. தன் கை விரலிலிருந்த மோதிரத்தைப் போட்டு விட்டு, அக் கை பூமிக்குள்ளே பழையபடி மறைந்தது! புலவர் உள்ளம் கசிந்து அழுதது. துன்பத்திலும் இன்பம் அடைந்தது. ‘செத்தும் கொடுத்த வள்ளல் சீதக்காதி ஒருவனே!’ - என வாழ்த்திச் சென்றார் புலவர். ‘செத்தும் கொடுத்தான் சீதக்காதி’ என்ற தொடரும் தமிழுக்குக் கிடைத்தது!

– பா. சுவாமிநாதன்

கள் சார். அதனால்தான் லேட்!’’ என்றானே பார்க்கலாம்!


-எஸ். தட்சிணாமூர்த்தி,
நாகலூர்.

ஃப்ரூட்டி

எங்கள் வீட்டுக்குச் சில உறவினர்கள் வந்திருந்தனர். நல்ல வெயில் நேரம் வீட்டில் வேலை பார்க்கும் பழனி என்பவரிடம் என் அப்பா, ‘‘நீ போய் ஃப்ரூட்டி (Frooti) வாங்கி வா’’ என்றார். கொஞ்ச நேரம் ஆயிற்று. பழனி வந்தார். அவர் கையில் நாலைந்து கண்ணாடி டம்ளர்கள். அதில்-காப்பி! ‘‘என்ன பழனி, நான் உன்னிடம் ‘ஃப்ரூட்டி’ வாங்கி வரச் சொன்னால், நீ காப்பி வாங்கி வந்திருக்கிறாயே?’’ என்றார் அப்பா. அதற்குப் பழனி, ‘‘கடையில் ப்ரூ (BRU) டீயெல்லாம் கிடையாதாம். ப்ரூ, காப்பிதான் இருக்கிறதாம்!’’ என்றதுதான் தாமதம், அத்தனை பேரும் விழுந்து விழுந்து சிரித்தனர்! ‘ஃப்ரூட்டி’யை ‘ப்ரூ டீ’ யாக நினைத்துக் கொண்ட பழனி, ஒன்றும் புரியாமல் திரு திருவென்று விழித்தார்!



-எஸ். காளிச்சரண், சாத்தனூர் அணை.



தொட்டால் மரவட்டை சுருள்வது ஏன்?

''ஆயிரம் கால்கள் உடையவரே!
அழகாய் ஆடிக் காட்டுங்களேன்!''

பாரதி கிணற்றடியில் இருந்து பாடிக் கொண்டிருந்தாள்.

''ஏண்டி, உன்னைத் தண்ணி கொண்டு வரச் சொன்னா, பாடிக்கிட்டிருக்கே! என்னடி பண்றே? எதைப் பார்த்துப் பாடறே?'' என்று கேட்டுக் கொண்டே வந்தாள் அம்மா.

கிணற்றின் கைப்பிடிச் சுவற்றில் கறுப்பும் மஞ்சளுமான ஒரு மரவட்டை ஊர்ந்து கொண்டிருந்தது. பாரதி அதைப் பார்த்துத்தான் பாடிக் கொண்டிருந்தாள்.

''அம்மா, இந்த மரவட்டை எத்தனை அழகாயிருக்கு பாருங்களேன்?''

''ஆமாம், நீ பார்த்து நேரங்கழிக்கிறது போதாது. நானும் சேர்ந்துக்கணுமா? இன்னும் அரை மணியில, அப்பா, பையன், பொண்ணு மூணு பேரும் தட்டை வைத்துக் கொண்டு சாப்பிட உட்காருவீங்களே? நான் என்னத்தைப் போடுவேன்?'' என்று அம்மா கேட்டாலும் அந்த மரவட்டையைப் பார்க்கத் தவறவில்லை!

''கறுப்பா இருந்தாலும், எண்ணெய் தடவி விட்ட மாதிரி எப்படிப் பளபளன்னு இருக்கு!''

''கால்களைப் பாரும்மா. எத்தனை மெலிசாய், நம்ம தலைமுடியை விட மெலிதாக இருக்கு! ஒரே சமயத்தில் இத்தனை கால்களையும் இயக்கி, விறுவிறுவென்று எப்படி ஊர்ந்து விரைகிறது!'' என்று வியந்தாள் பாரதி.


''இன்னிக்கி சமையல் அம்போவா? என்ன பண்றீங்க அம்மாவும் பொண்ணும்?'' என்று கேட்டுக் கொண்டே வந்தார் அப்பா. கேட்டாரே தவிர அவரும் குனிந்து மரவட்டையை ரசிப்பதில் சேர்ந்து கொண்டார். பின்னால் வந்த கார்த்தியும் கலந்து கொண்டான்.

''இது ஆண் மரவட்டையா, பெண் மரவட்டையா?''

''இது என்ன இன்னும்?''

''ஊர்ந்து போகும் வேகத்தைப் பார்த்தால் பாம்பு இனமாக இருக்கும் போல இருக்கே?''


ரேவதி



''காக்கா குருவி எல்லாம் இதைக் கொத்தாதா?''

நான்கு பேரும் மாற்றி மாற்றித் தங்களுக்குள் கேள்வி கேட்டுக் கொண்டார்கள்.

பாரதி ஒரு சிறு குச்சியை அதன் அருகே கொண்டு போனாள். குச்சி உடம்பில் பட்டது தான் தாமதம், ஊர்ந்து விரைந்து கொண்டிருந்த மரவட்டை கீழே அவள் கை மேல் விழுந்தது. பாரதி கையை உதற, அது தரையில் விழுந்து நொடியில் நாலணா அளவுக்குச் சுருண்டு கொண்டது!



''எப்படித்தான் எல்லாக் கால்களையும் மடக்கிக் கொண்டு நொடியில் சுருண்டு கொள்கிறதோ!''

''சட்டுனு பார்த்தா, ஏதோ மரவிதை இருப்பது மாதிரியே இருக்கே!''

''அம்மா, மரவட்டை விழுந்த இடத்தில் கை அரிக்கிற மாதிரி இருக்கு'' என்றாள் பாரதி.

அங்கே வந்த வேலைக்காரி, ''ஐயோ, மரவட்டை விழுந்த இடம் மரத்துப் போகும்னு சொல்லுவாங்களே?'' என்று காபராபடுத்தினாள்.

''சரி, டாக்டர் வீட்டுக்குப் போய், காட்டி, ஏதாவது மருந்து வாங்கிக்கோ'' என்றாள் அம்மா.

''எனக்கு நேரமாச்சு'' என்று அப்பா நகர்ந்தார். அம்மாவும் பின்தொடர்ந்தாள். பாரதி டாக்டர் வீட்டுக்குக் கிளம்பினாள்.

கார்த்தி? அவன் கிணற்றடியில்தான் இருந்தான். ஓட்டை போடப்பட்ட ஒரு காலி தீப்பெட்டியும், குச்சியும் அவன் கையில் இருந்தன.

சுருண்டிருந்த மரவட்டை இப்பொழுது சுறுசுறுப்பாக எழுந்து விரைந்து கொண்டிருந்தது. குச்சியால் அதைப் பிடித்து, தீப்பெட்டிக்குள் சிறையிட அவன் முயன்றான். ஆனால் அவன் குச்சியால் தொட்டதுதான் தாமதம், அந்தப் பொல்லாத மரவட்டை சுருண்டு கொண்டு சண்டித்தனம்



பண்ணியது! பலமுறை முயன்றும் இதே ஏமாற்றம்தான். வேறு வழியில்லாமல் சுருண்டு கிடந்தாலும் பரவாயில்லை என்று அப்படியே குச்சியை வளைத்துப் பிடித்து தீப்பெட்டிக்குள் போட்டு மூடினான். அரிசி மூட்டையில் இருந்து நாலைந்து புழுக்களைப் பிடித்து பெட்டிக்குள் போட்டான். பெட்டியை பத்திரமாக அலமாரியின் மேல்தட்டில், காற்றோட்டமான இடத்தில் வைத்தான்.

இதற்குள் டாக்டர் வீட்டுக்குப் போன பாரதி திரும்பி வந்து விட்டாள்.

''டாக்டர் ஊசி போட்டாரா?'' என்று கேட்டார் அப்பா, சாப்பிட்டுக் கொண்டே.

''இல்லை. மருந்து கூடத் தரவில்லை. அவசியமே இல்லையாம். மரவட்டை தீங்கு இழைக்காத உயிரினமாம்.''


''அப்போ, அரிச்சதுன்னு சொன்னியே... அது எதனால்? கேட்டியா?''

''கேட்டேன். மரவட்டை உடம்பில் பட்டால், அரிக்கப் போகிறது என்ற தவறான எண்ணம் உன் மனத்தில் உறுதியாக இருந்திருக்கு. அதனால்தான் அது பட்டதும் அரிப்பது போல் தோன்றியிருக்கு. இது வெறும் மனப் பிரமைதான். அப்படியே உண்மையாகவே அரித்தால், அதற்கு வேறு ஏதாவது காரணம் இருக்கும். மரவட்டை காரணமாக இருக்காது என்று டாக்டர் கூறிவிட்டார்'' என்றாள் பாரதி.


''அதிசயமா இருக்கே! பூரான் கடிச்சா விஷமாகும் போது, மரவட்டை விஷமாகாதா?'' என்று கேட்டாள் அம்மா.

''விஷமாகாதாம். பூரானுக்கும் இதுக்கும் நிறைய வித்தியாசம் இருக்காம். பூரானுக்கு உள்ள நஞ்சுக் கொடுக்கு இதற்கு இல்லையாம். பூரான் ஒரு மிலிடரியாம். புழு, பூச்சிகளை உண்ணுமாம். ஆனால், நம்ப மரவட்டையார் சுத்த சைவமாம். மக்கிப் போன மரப் பட்டை, இலைக் கொழுந்து தான் இதற்கு உணவாம்.''

''டாக்டருக்கு எப்படி இதெல்லாம் தெரியுமாம்! மரவட்டை வைத்







ஓயம் படிச்சிருக்காரா?'' என்று கேட்டாள் அம்மா.

''அவருடைய அப்பா பெரிய பூச்சி இயல் வல்லுனராம்.''

''அப்படின்னா, மரவட்டை தொட்டதும் ஏன் கருண்டுக்குதாம்?''

''பகைவர்கள் வந்து விட்டார்கள். அவர்கள் நம்மைத் தொடுகிறார்கள். அவர்களால் நமக்கு ஆபத்து ஏற்படப் போகிறது என்ற உணர்வுதான். உடனே உடம்பை வளைத்து, குறுக்கி, கருண்டு கொண்டு விடுகிறதாம்!''

''அதிசயமா இருக்கே!'' என்றாள் அம்மா.

''அதோட, அப்படி கருண்டுக்கும் போது, மரவட்டை தன் உடலில் உள்ள நுண்ணிய கரப்பிகளில் இருந்து ஒருவித துர்நாற்றத்தை வெளியிடுகிறதாம். இதனால் இதைக் கொத்திக் கொண்டு போக முயலும் சிறு பறவைகள் அருவருப்புடன் இதை விட்டு விலகிப் போய் விடுகின்றனவாம்!''

ஜன்னலோரமாக மறைந்து நின்று கொண்ட கார்த்தி, தீப்பெட்டியைத் திறந்தான். அவன் பிடித்துப் போட்ட ஆறு அரிசிப் புழுக்களும் உயிருடன் இருந்தன.

மரவட்டை? அவன் பெட்டியைத் திறந்த அதிர்ச்சியில் உடலைச் சுருக்கிக் கொண்டது!

அறிவியல் உண்மைகள்

★ மில்லிப் பிடி (MILLIPEDE) என்ற மரவட்டை கணுக்காலிகள் தொகுதியில், மிரியாப்போடா (MYRIAPODE) வகுப்பில், இரட்டைக் காலிகள் பிரிவைச் (DIPLOPODE) சேர்ந்தவை.

★ முன்னே உள்ள உணர்கொம்புகளைக் கொண்டு ஆண் பெண் வேறுபாட்டை அறியலாம்.


★ முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். குஞ்சுகள் வெளிவந்ததும் பூச்சியைப் போல் 6 கால்கள் கொண்டவையாக இருக்கும்.

★ ஈரமான (DAMP) இடங்களில் வாழும்.

★ சுத்த சைவம். அழுகிய, மக்கிய தாவரப் பொருட்களையே உணவாகக் கொள்ளும்.

★ பூரானைப் போல் நச்சுக் கொடுக்குகள் கிடையாது. அபாயம் இல்லா உயிரினம்.

★ கருண்டு கொள்வதும், கரப்பிகளில் இருந்து துர்நாற்றம் வீசுவதும் இயற்கை அளித்துள்ள பாதுகாப்பு.



''அப்பா! அது என்ன மிருகம்?''

''அதுவா? அது ஓநாய்.''

''அட, அப்படியானால் நாய்க்கும் 'இனிஷியல்' உண்டா?''

- இம்ரான்

பாம்பும் இசையும்



'பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும்' என்பது பழமொழி. ஆனால் பாம்பாட்டி பாம்பைக் கூடையில் அடைத்து படம் எடுத்து ஆட வைப்பதை ஆர்வமாகப் பார்த்து மகிழ்கிறோம்.

பாம்பு மகுடி இசையைக் கேட்டுத் தான் படம் எடுத்து ஆடுகிறது என்று தானே நினைக்கிறீர்கள்? ஆனால் அது உண்மையல்ல. ஆனாலும் பாம்பு மகுடி இசைக்கு மயங்கி ஆடுகிறது என்பதை நமது இலக்கியங்கள் கூறுகின்றன. இருந்தாலும் பாம்புக்கு இயற்கையில் கேட்கும் சக்தி இல்லை. அதாவது செவிடு. பாம்பாட்டி மகுடி இசைக்கும் போது மகுடியை இப்படியும், அப்படியும் ஆட்டுகிறான். அதற்கேற்பவே பாம்பு ஆடுகிறது.

இதை 'வால்' என்னும் அறிவியல் அறிஞர் கூறினார். ஆனால் மக்கள் நம்பினார்களா? அவரைப் பலவாறு கேலியும், கிண்டலும் பண்ணினார்கள். பாமர மக்கள் மட்டுமல்ல. பல துறை அறிஞர்களும் கூட 'வாலி'ன் கூற்றை நம்ப மறுத்தனர்.

ஆனால் தக்க ஆதாரங்களுடன் வால் தனது முடிவை நிரூபித்தார். காற்றில் கடத்தப்படும் எந்த ஒலியையும் பாம்பினால் கேட்க முடியாது என்பதைப் பல சோதனைகளால் மெய்ப்பித்துக் காட்டினார்.

தான் கண்ட உண்மையை வால் எப்படி நிரூபித்தார்? பிளாஸ்திரியை சிறு துண்டாக வெட்டி பாம்பின் இரு கண்களையும் மறைத்து விட்டார். பின் மகுடி இசைக்கப்பட்டது. ஆனால் பாம்பிடம் எந்த அசைவும் இல்லை.

பிறகு மேளம், தகரப் பெட்டி எனப் பல சத்தம் உண்டாக்கும் கருவிகளைக் கையில் பிடித்துக் கொண்டு அடித்தார். பாம்பிடம் அசைவே இல்லை. ஒரு துப்பாக்கியை எடுத்து பயங்கர சப்தம் வரும் படி வானத்தை நோக்கிச் சுட்டார். அப்போதும் கூட பாம்பிடம் எந்த மாற்றமும் இல்லை.


ஆனால் தரையிலுள்ள ஒரு நாற்காலியை வால் என்ற அந்த அறிஞர் நகர்த்தியதும் உடனே பாம்பு நிமிர்ந்து எழுந்தது. அதே போல் தரையில் யாராவது நடந்ததும் பாம்பு துள்ளி எழுந்து படமெடுத்துச் சீறியது.

இதனால், அதிர்வு ஒலிகளை மட்டுமே பாம்பால் உணர முடியும், காற்றில் கடத்தப்படும் ஒலிகளை உணர முடியாது என்பதை அந்த அறிஞர் நிரூபித்தார்.

இதற்குப் பிறகே பாம்புக்குக் காது கேட்காது என்பதை அறிஞர் கூட்டமும் மக்களும் ஏற்றுக் கொண்டனர்.


பாம்புக்கு காது கேட்குமா, கேட்காதா என்ற கேள்விக்கு அறிவியல் அடிப்படையில் விடை காண்பதற்காக, அமெரிக்காவின் ஹரிஜோனா பல்கலைக் கழகத்தில் ஒரு தனி ஆராய்ச்சி பிறிவே அமைக்கப்பட்டது. அவர்களுடைய முடிவும், அறிவியல் அறிஞர் வால் கண்டு பிடித்த முடிவும் ஒன்றாகவே இருந்தாலும், இன்னமும் சாதாரண மக்கள் பாம்புக்கு காது உண்டு. அது இசையை கேட்கும் என்று நம்புவதில் தனி மகிழ்ச்சி அடைகிறார்கள்.

– ந. கமலக்கண்ணன்




INSTANT 'COLOR 'N' STIK' STICKERS
FOR CHILDREN FROM
FUJICON
PICK IT..COLOR IT.. STIK IT
a loveable gift for your loving ones
50 'HILARIOUS' PICTURE STICKERS - SIZE 150 Sq. Cm. - OF FUN-CRAZY ANIMALS, NAUGHTY TINY TOTS, CLOWNS, MAGICIANS, BUTTERFLIES, SNOWMEN & WHAT NOT? JUST COLOUR IT & STICK IT. A GREAT VACATION TIME PASTIME THAT STIMULATES IMAGINATION & INTELLIGENCE IN CHILDREN. PACKED IN LOVELY 'GIFT PACKS' OF 50s. (Rs.75) & 100s (Rs. 125) POST PARCEL CHARGES Rs. 25/- SPECIAL DISCOUNT TO SCHOOLS. BOOK-STALLS AND DEALERS. SEND M/O, D/D OR CHEQUE
FUJICON
FUJICON
161, Thambuchetty Street, Madras 600 001
Tel. 5342177, 5342497

பறவைப் பிரியர்



சலீம் மொய்சுதீன் அலி என்றால் எல்லோரும் புரியாது விழிப்பீர்கள். சலீம் அலி என்று சொன்னால் சட்டென்று எளிதில் புரிந்து கொள்வீர்கள்.



1896 - நவம்பர் 12-ல் பம்பாய்க்கு அருகிலுள்ள கேத்வாடி என்ற ஊரில் பிறந்தவர்தான் சலீம் அலி. பறவைகளை உயிராக நேசித்த இந்த மாமனிதர் சிறுவனாக இருந்த போது பறவைகளைப் பிடித்துக் கொல்வதையே பொழுதுபோக்காகக் கொண்டிருந்தார் என்பது வியப்பான உண்மை! இந்தக் கொலைகாரப் பொழுதுபோக்கு எப்படி மாறியது?

ஓர் ஆங்கிலேயரைப் பார்த்துத்தான் பறவைகளை கவனிக்கும் (Bird Watching) பழக்கத்தை சலீம் மேற்கொண்டார்.

சலீமுக்கு படிப்புத் திறமை இல்லையென்று சேவியர் கல்லூரியில் சேர்த்துக் கொள்ள மறுத்தார்கள். அதனால் பெற்றோர், வியாபாரத்தைக் கவனிக்க பர்மாவிற்கு அவரை அனுப்பி வைத்தார்கள். அங்கும் சலீம் வியாபாரத்தை விடப் பறவைகளிடந்தான் அதிக ஈடுபாடு காட்டினார்!

சலீம் அலி வாழ்ந்த காலத்தில் இந்தியாவில் மகாராஜாக்கள் நிறையப் பேர் இருந்தனர். சலீம் அலி அவர்களைப் பறவைகள் பற்றிய ஆராய்ச்சி

களில் அறிவியல் (ormi-thology) பூர்வமாக ஈடுபடச் செய்தார். அதற்கு முன் வேட்டையாடுவதிலேயே விருப்பமாயிருந்த ராஜாக்கள், சலீமுக்குப் பண உதவி செய்து அவருடைய பணியில் ஊக்குவித்தனர். பம்பாய் நேச்சுரல் ஹிஸ்டரி சொஸைட்டியும் சலீமுக்கு ஊக்கமளித்து உதவியது.

சைபீரிய கொக்கு போன்ற அபூர்வமான பறவை இனங்களைக் காக்க சலீம் அலி வகை செய்தார். பரத்பூர் பறவைகள் சரணாலயத்தில் (Keolo deo National Park) இன்றும் அவற்றை நாம் காணலாம்.

சலீம் அலி தெற்கு மற்றும் மேற்கு இந்தியக் காடுகளுக்கிடையில் 2000 கி.மீ. பயணம் செய்து, பறவைகளின் பாதையைக் கண்டறிந்திருக்கிறார்!


இந்தியப் பறவைகள் பற்றிய கையேடு (Hand Book of Indian Birds) என்ற அவருடைய புத்தகம் உலகப் பிரசித்தமானது.


பறவை விஞ்ஞானத்திற்காக பம்பாய் நேச்சுரல் ஹிஸ்டரி சொஸைட்டியில் ஒரு துறையை ஏற்படுத்தி அதில் ஆராய்ச்சி இயக்குநராகவும் பணிபுரிந்தார் சலீம் அலி.

ஆசிய கழகம் சலீமிற்குத் தங்கப் பதக்கம் வழங்கியது. இந்திய அரசு பத்ம பூஷண், பத்ம விபூஷண் விருதுகளை வழங்கியது. இந்திய தேசிய அறிவியல் கழகம் வழங்கிய சுந்தர்லால் ஹோரா நினைவுப் பரிசும், பால்கெட்டி சர்வதேச வன ஆராய்ச்சிக் கழக விருதும் அவரை உலகப் புகழ்வாய்ந்தவராக்கியது.

சலீம் அலி தனது நூற்றியோராவது வயதில் (1987 ஜூன் 20) இந்த மண்ணுலகை விட்டுப் பறந்தார். இயற்கையுடன் ஒட்டிய வாழ்வுதான் அவரை நீண்ட நாள் வாழச் செய்திருக்கிறது.

– டி. தேவராஜன்





கேட்கட்டுமா டாக்டர்?

டாக்டர் கு. கணேசன்

கே. சோமசேகர்,
காவேரிப்பட்டணம்.

? 'ஃபோபியா' என்றால் என்ன டாக்டர்?

! 'ஃபோபியா (PHOBIA) என்பது அச்ச நோய். இந் நோய்க்கு உள்ளாகிறவர்கள் அபாயம் இல்லாத சூழ்நிலையிலும், அளவுக்கு மீறி, இயல்புக்குப் புறம்பாக பயம் கொள்வார்கள். அப்போது நெஞ்சு படபடப்பு, கைகால் நடுக்கம், பதட்டம், அதிக வியர்வை, சோர்வு, மயக்கம் போன்ற பல அறிகுறிகளால் அவதிப்படுவார்கள். தங்களுக்குப் பிடிக்காத ஒன்றைத் தவிர்க்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இந்நோய் தோன்றுகிறது. நெருப்பைப் பார்க்க பயம் (Phrophobia), இருட்டைக் கண்டு பயம் (Nyctophobia), தண்ணீரைக் கண்டால் பயம் (Hydrophobia), ரத்தத்தைக் காண பயம் (Hematophobia), மிருகங்களைக் கண்டால் பயம் (Zoophobia) தனித்திருக்க பயம் (Clasutrophobia) என்பவை அச்ச நோயின் சில வகைகள்.



ரா. விஜயலட்சுமி, செஞ்சி - 2.

? நாக்கிற்கு ருசி அறியும் தன்மை ஏற்படக் காரணம் என்ன?



! நாக்கில் உள்ள 'சுவை மொட்டுகள்' நம் உணவின் சுவையை உணர்த்துகின்றன. ஒரு நாக்கில் சுமார் 9000 சுவை மொட்டுகள் உள்ளன. இவைதான் சாப்பிடும் உணவு இனிப்பா, புளிப்பா, கசப்பா, காரமா, உப்பா என்பதை நமக்குத் தெரிவிக்கின்றன.

கு. சிவா, போரூர்.

? 'அக்கிப்புண்' எதனால் வருகிறது? இது தொற்றுநோயா?




! சின்னம்மை (Chickenpox) யை உண்டாக்கும் வைரஸ் கிருமிகள்தான் 'அக்கிப்புண்' (Herpes Zoster) வருவதற்கும் காரணகர்த்தா. இது சந்தேகமில்லாமல் ஒரு தொற்றுநோய்தான்.

பி. அ. முஸ்தபாகமால், தக்கோலம்.
திவாகர், ஆலங்காயம்.

? திக்குவாய் ஏற்படக் காரணம் என்ன? இது ஒரு பரம்பரை நோயா? இதனைப் போக்குவதற்கு என்ன வழிமுறைகள் உள்ளன?

! திக்குவாய் ஏற்படுவதற்கு மூன்று காரணங்களைச் சொல்லலாம். முதல் காரணம் மனம் தொடர்பானது. அதாவது குழந்தைப் பருவத்தில் ஏற்படும் பயம், பதட்டம், பரபரப்பு, கவலை, அதிருப்தி, அவநம்பிக்கை போன்ற காரணங்களால் திக்குவாய் வருகிறது. இரண்டாவது காரணம் - குழந்தைகள் பேசப் பழகும்போதே தவறான முறையில் பேசுவது. மூன்றாவதாக - பரம்பரை அம்சம்! பரம்பரையாக சில குழந்தைகளுக்கு நாக்கு, உதடு, மேலண்ணம், குரல் மடிப்புகள் (Vocal Folds) போன்றவற்றில் பிறவி ஊனம் உண்டாகி திக்குவாயைத் தோற்றுவிக்கும். திக்குவாயை குழந்தைப் பிராயத்திலேயே கவனித்து சிகிச்சை கொடுத்தால் பூரணமாக குணப்படுத்தி விடலாம். மனமாற்றல் பயிற்சி, பேச்சுப் பயிற்சி, மருந்து மற்றும் அறுவை சிகிச்சைகள் மூலம் திக்குவாயைப் போக்கலாம், தம்பிகளே!



வெ. ஜெகதீசன், தொம்பக்குளம்.

? காய்ச்சல் வந்தவர்களை குளிக்கக் கூடாது என டாக்டர்கள் கூறுவது ஏன்?




! காய்ச்சல் வந்தவர்களுக்கு அலுப்பு ஏற்படக் கூடாது. ஓய்வு தேவை. பெரும்பாலான காய்ச்சலுக்கு முழுப் பொறுப்பேற்கும் வைரஸ் கிருமிகள், பாக்டீரியா கிருமிகள் போன்றவை தண்ணீர் மூலம்தான் நமக்குத் தொற்றுகின்றன. இதனால் காய்ச்சலின் போது குளித்தால், அந்தத் தண்ணீரிலிருந்து மீண்டும் கிருமிகள் தொற்றும் வாய்ப்பு உண்டாகுமல்லவா? அதனைத் தவிர்க்கத்தான் காய்ச்சல் இருக்கும் போது குளிக்கக் கூடாது என மருத்துவர்கள் சொல்கிறார்கள். இருந்தாலும், காய்ச்சல் சமயத்தில் வெந்நீரால் உடம்பு முழுவதையும் துடைத்து சுத்தப்படுத்திக் கொள்ளலாம்; தவறில்லை.

உதையுங்கள்!


அந்தப் பள்ளியில் மற்ற எல்லாரையும் விட வயதிலும் உருவத்திலும் சிறியவன் அவன்தான்! லத்தீன் மொழி மட்டுமே அவனுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டு வந்தது. மாணவர்கள் ஈசாப்பின் கதைப் பாடல்களை (Aesop's Fables) மனப்பாடம் செய்ய வேண்டும். வருடத்திற்கு ஒருமுறை வருகை நாள் (Risitation Day) என்றொரு நாள் வரும். அந்த நாளில் நகர கவர்னர் மற்ற பிரமுகர்களோடு பள்ளியைப் பார்வையிட வருவார். ஒவ்வொரு மாணவனும் அப்போது ஆசிரியர் கேட்கும் கதைப் பாடலை ஒப்பிக்க வேண்டும்.

வழக்கம் போல் அந்த ஆண்டும் வருகை நாள் வந்தது. அந்தச் சிறுவனை 'நாயும் அதன் நிழலும்' என்ற பாட்டைப் படித்து வரும்படி சொல்லியிருந்தார் ஆசிரியர். அந்தச் சிறுவனுக்கு உயிருக்குயிராய்ப் பழகும் நண்பன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் 'நதன்'. அவனை 'ஓநாயும் ஆட்டுக் குட்டியும்' என்ற பாடலைப் படித்து வரும்படி ஆசிரியர் கூறியிருந்தார்.

குறிப்பிட்ட நேரத்தில் பெற்றோரும் மாணவரும் பள்ளியில் வந்து கூடினர். ஆசிரியர் 'நாயும் அதன் நிழலும்' என்ற பாடலை ஒப்பிக்க வேண்டிய அந்தச் சிறுவனை மேடைக்கு அழைத்தார். அவனும் வந்தான். ஆனால், ஞாபகமறதியாக 'ஓநாயும் ஆட்டுக் குட்டியும்' என்ற பாடலை ஒப்பிக்கும்படி கூறினார் ஆசிரியர். பையனுக்கு அந்தப் பாடலும் தெரியும். ஆனால், அந்தப் பையனின் உயிர் நண்பனான நதனுக்கு இவனுடைய பாடல் தெரியாது. எனவே, ஆசிரியர் கேட்ட பாடலை ஒப்பித்து விட்டால், நண்பனுக்குத் தொந்தரவு. 'ஆசிரியர் தவறுதலாகச் சொல்லி விட்டார்' என்று எடுத்துக் காட்டினாலோ, அவரது தவறுக்காக, கவர்



னருக்கு அவர் மீது கோபம் வரும். எனவே, ஆசிரியருக்கும் தொந்தரவு. இருவருக்கும் சிரமம் கொடுக்க விரும்பாத அந்தப் பையன், வாய் திறவாமல், தலைகுனிந்தபடி மௌனமாக நின்றான். பாடலை ஒப்பிக்காவிட்டால், தனக்குக் கடுமையான தண்டனை கிடைக்கும் என்பதும் அவனுக்குத் தெரியும். அப்படியிருந்தும் பேசாமல் நின்றான். ''சிறிய பாடலைக் கூட ஒப்பிக்கத் தெரியலையே அந்தப் பையனுக்கு. அவனுக்கு செம்மையாக உதை கொடுங்கள்'' என்று ஆசிரியருக்கு உத்தரவு போட்டு விட்டுப் போனார் கவர்னர். ஆசிரியருக்கும் முதலில் அவன் மீது கோபம் வரத்தான் செய்தது.



ஆனால், பின்புதான் ஞாபகக் குறைவால் அவர் செய்த தவறு அவருக்குத் தெரிய வந்தது. ''ஆகா! என்னையும் காட்டிக் கொடுக்காமல் நண்பனையும் காப்பாற்ற வேண்டுமென்று நினைத்த அவனது அருங்குணத்தை என்னவென்று புகழ்வது!'' என்று மனதிற்குள் நினைத்து வியந்தார் ஆசிரியர்.

அந்தப் பையன்தான் அமெரிக்காவின் சிறந்த விஞ்ஞானியாக, அரசியல் தலைவனாக, நாட்டுத் தொண்டனாக வாழ்ந்து, மக்களின் நாகரிக வாழ்க்கைக்குத் தேவையான நல்ல பொருள்கள் பலவற்றைக் கண்டுபிடித்துப் பிறந்த மண்ணுக்குப் பெருமை தேடித் தந்து சென்ற பெஞ்சமின் பிராங்க்லின்!

– புத்தனாம்பட்டி சி. மணி

கனவில் என்ன காண்கிறோம் என்பதை இனி, எலெக்ட்ரானிக் கம்ப்யூட்டர் (Electronic Computer) மூலம் படமாக எடுக்க முடியும். பெல்ஜியத் தைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்கள் இதற்கென ஒரு எலெக்ட்ரானிக் கதிர் வீச்சு இயந்திரத்தை இப்போது கண்டு பிடித்திருக்கிறார்கள்! இனி யாரும் கனவில் சாமி வந்து கட்டளையிட்டார் என்று ரீல் விட முடியாது!

– சி. மணி, புத்தனாம்பட்டி





பார்ட்சையெல்லாம் முடிந்து பள்ளிக்கூடம் திறக்க ஆரம்பித்து விடு வார்கள்!

உங்களுக்கெல்லாம் ஒரே கொண் டாட்டம்தான்! புது வகுப்பு! புது ஆசிரி யர்! புதிய சீருடைகள், புதிய புத்த கங்கள். புதிய குறிப்பேடுகள் எல்லாமே புதுசுதான்!

பெரிய வகுப்புக்குப் போனாலே பெரிய படிப்புதான்! பெரிய பெரிய புத்த கங்கள்தான்!

நிறைய நிறைய புத்தகங்கள், நோட் டுகள் வாங்க வேண்டி வரும். அவற் றைப் பள்ளிக்குக் கொண்டு செல்ல அழ கழகான பைகள் வேறு வாங்குவீர்கள்!

புத்தகங்களையும் நோட்டுகளை யும் வாங்கும்போதே உங்கள் அப்பா விடம் சொல்லி அதற்கான மேல் அட்டை வாங்கி விடுங்கள். நீங்கள் வாங்குகிற அட்டை பிரௌன் அல்லது காக்கி கலராக இருக்கட்டும்! அப்போது தான் அழுக்கைத் தாங்கும். தவிர கொஞ் சம் கனமாக இருந்தால் ரொம்ப நல்லது!

அதைவிடவும் சுலபமான ஒரு வழி இருக்கிறது. பழைய கேலண்டர் தாள் களை பத்திரமாக எடுத்து வைத்து

புத்தகங்களைப் பாதுகாப்போம்!



அட்டை போட்டுப் பாருங்கள்! நீடித்து உழைக்கும்.

ஆண்டு முழுக்க, புத்தகங்களையும் நோட்டுகளையும் பத்திரமாக வைத்தி ருக்க வேண்டும். அடிக்கடி புத்தகங் களைக் கிழித்து விட்டோ அல்லது தொலைத்து விட்டோ அப்பாவை மறுபடி புதிது வாங்கித் தரச் சொல்லித் தொந்தரவு செய்வது கெட்டிக்காரப் பிள்ளைகள் செய்யும் காரியம் இல் லையே?

சரி. புத்தகங்களையும் நோட்டுக் களையும் எப்படி பத்திரமாக ஆண்டு இறுதிவரை கிழியாமல் வைத்திருப் பது? கொஞ்சம் கஷ்டமான காரியம் தான். ஆனால் நீங்கள் முயற்சி செய்தால் முடியாததும் உண்டா என்ன?

அட்டைதான் போட்டுவிட்டோமே என்று புத்தகங்களின் மேல் புறத்தில் கண்டபடி கிறுக்குவதோ, படம் வரை வதோ கூடவே கூடாது. புத்தகம் என்பது கல்வி கற்கும் சாதனம். மரியாதைக்கு உரியது. அதன் முகத்தில் யாராவது கிறுக்குவார்களா? சின்னதாக, அழகாக ஒரு லேபிள் ஒட்டுங்கள். அதில் உங்கள் பெயர், வகுப்பு, பள்ளி. அது போதும்.



இப்போது உங்கள் புத்தகத்தை அல்லது நோட்டைத் தூக்கிப் பிடித்துப் பாருங்கள்! எத்தனை அழகாக இருக்கிறது!

மேலும், தினமும் பள்ளிக்குத் தேவையான புத்தகங்களை மட்டுமே எடுத்துச் செல்லுங்கள்! பையில் அத்தனை புத்தகங்களையும் நோட்டுகளையும் போட்டு அடைத்தால் முனைகள் மடங்கி, அழுக்கு சேர்ந்து, ஓரங்கள் கிழிந்து, ஒரே மாதத்தில் உங்கள் புத்தகம் கிழிந்து அழ ஆரம்பித்து விடும்!

புத்தகங்கள், நோட்டுகளின் முதுகுப் புறத்தில் நீட்டு வாக்கில், ஸ்கெட்ச் பேனா கொண்டு, அதன் பெயரை எழுதி உங்கள் அலமாரியில், வைத்து விடுங்கள். தேவைப்பட்ட போது தேவையான புத்தகத்தை, நோட்டை டக்கென்று உடனே எடுக்க வசதியாக இருக்கும்.

உங்கள் புத்தக அலமாரி எப்போதும் சுத்தமாக இருக்க வேண்டும். ஒட்டடையோ, பூச்சிகளோ, கறையானோ கிட்டே நெருங்கக் கூடாது! அதற்குத் தான் இருக்கவே இருக்கிறதே, பூச்சி உருண்டைகள்! அதை வாங்கி உங்கள் புத்தக அலமாரியில் இரண்டு மூன்று போட்டு வையுங்கள். ஒரு பூச்சி கிட்டே வராது.

வேப்ப மரம் இருந்தால் அதன் இலைகளைக் காய வைத்து புத்தக அலமாரிக்குள் போட்டு வைக்கலாம். பூச்சிகள் கிட்டே நெருங்காது.

புத்தகமோ நோட்டோ கனமாக இருந்தால் அவற்றைப் படிக்க, மடிக்கக் கூடாது. முதுகுத் தையல் இளகி, கொள கொளவென்று ஆகும். அந்தப் பக்கம் மட்டும் வெளியே நீட்டிக் கொண்டு வந்து விடும். இதைத் தவிர்க்க ஒருவழி இருக்கிறது. வீட்டில் வாங்கும் பற்பசைகளின் வண்ணப் பெட்டிகளை எறிந்து விடாது, நீள வாட்டில் கத்தரித்து வைத்துக் கொண்டால், புத்தக reference ஆகப் பயன்படுத்தலாம். அழகாகவும் இருக்கும்.

'சரிதான், புத்தகங்களை அழகாக பத்திரமாக வைத்து விட்டேன்! இனி என்ன?' என்று சும்மா இருந்து விடுவதா?

ஒழுங்காகப் படிக்கணும்! இது தானே முக்கியம்? ''இதை எங்களுக்கு சொல்லித் தரணுமா, நாங்கள் கோகுலம் வாசகர்கள் ஆயிற்றே?'' என்கிறீர்களா?



அதுவும் சரிதான்!

அட்டையில் அட்டை போடுபவர்கள் : பல்லவி ராஜசேகர், கோவை மது
வண்ணப்படம் : யோகா



★ புவனை கலைச் செழியனின் "கால் முளைத்த நோட்டு" மிகச் சிறப்பான MORAL TEACHING ஆக இருந்தது - நாகமலை ப. கா. மணிமொழியாள், மற்றும் பலர்.

★ ரிக்ஷாவில் வந்த கர்ணன் நல்ல மனோதத்துவக் கதை. நாம் எதுவாக நம்மை நினைக்கிறோமோ அதுவாகவே ஆகி விடுகிறோம் என்பது எத்தனை பெரிய உண்மை! இதனால்தானே பெரியவர்கள் உயர்ந்த லட்சியங்களையே எண்ணி வாழச் சொன்னார்கள்! படம் படு சூப்பர். - கட்டளையூர். எம். இசக்கிராஜ், பாளையங்கோட்டை எஸ். அடைக்கலம், சமயபுரம் எஸ். சுந்தரமூர்த்தி, தம்பியாவோர் குணசேகரன், கரூர் ஆர். கே. ஜெயராம் மற்றும் பலர்.

★ கரடி பொம்மை சொல்லும் கதை படிக்கச் சுவையாக இருந்தது. 'டெடிபேர்' பொம்மைக்குப் பின்னால் இத்தனை சுவையான வரலாறா? - பூரணி எம். சூரி, நெற்குப்பை சுந்தரதம்பி, தாளூர் மோகனராம், பெருங்குடி பொன்னப்பன், நூப மதியாளூர் எம். கற்பகராகவன் மற்றும் பலர்.

★ பெருமைப்பட்டேன் போன்ற போட்டிகளில் இனிமேலாவது ஊர் பெயரைக் குறிப்பிடுங்கள் சார். - முத்துச்சரிகை வெ. பரசுராமன், ரெட்டியார் குப்பம் ச. சலாவுத்தீன் மற்றும் பலர்.

★ பதினெட்டு கவிதைகளா! வாழ்க வாழ்க கோகுலம். பெரிய சாதனை! - எருக்காஞ்சேரி க. முருகானந்தம், பெரம்பலூர் எ. எல்லப்பன், திருநீர்மலை எஸ். பாலசந்திரன் மற்றும் பலர்.

★ நூறு ரூபாய் இரகசியம் முடியப் போவதை எண்ணும் போது மனதை என்னவோ பண்ணுகிறது - தண்டுராம்பட்டி முத்துக்கருப்பன், கட்டிமங்கலம் என். அற்புதராஜ், முகவை. க. கந்தசாமி, சாத்தூர் என். நரசிம்மன் மற்றும் பலர்.

★ அட்டை சூப்பர்தான்! எப்படி சார் நீங்க மட்டும் வித்தியாசமா பண்றீங்க? - செய்யூர் சுதாராணி, காஞ்சிபுரம் எஸ். சந்திரன், தங்க வரம். சு. காந்தி, திருமெய்யம் எஸ். பாவாடை மற்றும் பலர்.

★ வாள்களைப் பற்றி இத்தனை சுவையான தகவல்களைத் தந்த கோகுலத்திற்கு ஒரு தங்க வாள் பரிசு தரலாம்! மூன்று ரூபாய்க்கு இத்தனை பயனுள்ள தகவல் கட்டுரைகளா! - கோவில்பட்டி. கு. சாந்தா, பப்பிரோயன்பட்டி தெ. நெல்லையப்பன், போளூர் க. லாவண்யா, திவ்யா மற்றும் பலர்.

★ கோடை விடுமுறையை ஜாலியாகக் கழிக்க எண்ணியிருப்பவர்களைப் பயனுள்ள செயல்களைச் செய்ய உசுப்பி விட்டிருக்கிறது தலையங்கம். ஓர் இயக்கமே செய்ய வேண்டியதை கோகுலம் செய்து வருகிறது. எத்தனை பாராட்டினாலும் தகும். - சிதம்பரம் மு. கவியமூர்த்தி, பிட்சாண்டார்கோவில் க. கனகசபை, பாபநாசம் வெ. விநாயகம், தக்கோலம் அ. முஸ்தபா, மற்றும் பலர்.

★ டாக்டர் பதில்களுக்கும், கதையான் கட்டுரைக்கும், சித்திரைக் கதைக்குமே மூன்று ரூபாய் சரி! மீதி எல்லாமே போனஸ்தான் - திருமழிசை. கு. செல்லப்பா, கரியமங்கலம் க. சேர்வராயன், தினமொழுகூர் ச. சச்சிதானந்தம், பரங்கிப்பேட்டை கே. சீனிவாசன், மற்றும் பலர்.

★ கேளுங்கள் பகுதி எங்கே சார்? எங்க வகுப்பில் எல்லோருக்கும் ஒரே ஏமாற்றமாக இருந்தது. - சேலம். சத்தியவேல் முருகன், வடலூர் எம். தியாகராசன், விருத்தாசலம் எம். பொன்னப்பன், உளுந்தூர்பேட்டை மு. அரசபாலன் மற்றும் பலர்.

(இடமில்லாததால் வரவில்லை. இந்த இதழில் வந்திருக்கிறது -ஆர்.)

★ பனிமனிதன் கட்டுரை மிகத் தெளிவாக பல சந்தேகங்களைப் போக்கியது! - நாகலாபுரம் மு. சந்தானகுமார், இலந்தைக்குடி எம். மூர்த்தி, திருவேனி, து. வேம்படையான், காளாப்பூர் எஸ். காமராஜ் மற்றும் பலர்.

★ இசை அரசன் ஆனந்தன் சித்திரக் கதையை ஒரே மூச்சில் படித்தோம். உங்களுக்கு மட்டும் எப்படி சார் இப்படி வித்தியாசமான கதைகள் கிடைக்கின்றன? - சித்தூர் வ. பாலாஜி, அலமேலுமங்காபுரம் வி. கோதை, தேப்பூர் க. நடனமணி, புத்தேரி மு. சிங்கராஜன், அணையாபுரி து. வெற்றிவேலன், பெரம்பலூர் எஸ். காமராஜ் மற்றும் பலர்.


★ விடுமுறையில் குழந்தைகளுக்கு ஏற்றபடி போட்டி வைப்பது கோகுலம்தான்! - கண்ணாம்பாடி கா. ரங்கபாபு, காவியலூர் பூ. பூபதி, கருவிளைப்பட்டி கு. மாணிக்கம், ஆனைமயபுரம் தேப்பெருமாள், காளாப்பூர் எஸ். காமராஜ் மற்றும் பலர்.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 140/-; விமானத் தபால் ரூ. 360/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 70/-; விமானத் தபால் ரூ. 180/-.


ஐ லைக் இட்!
I like it!
Yankee doodle
ice creams
TAS Vision ● 029
For Details Contact:
SRI VENKATADRI ENTERPRISES
Flat 14, 250, Lloyds Road, Madras-86. Ph: 8278807


ஐ லைக் இட்!
Yankee doodle
ice creams
For Details Contact:
SRI VENKATADRI ENTERPRISES
Flat 14, 250, Lloyds Road, Madras-86. Ph: 8278807
TAS Vision ● 030

REGISTERED NO. TN MS (S) 281
Registered as Newspaper in Srilanka



வேற வீடு மாத்திப்
போனப்போ...
அந்த பில்டிங்குல

எல்லா குழந்தைங்களும்
ஆயிரத்தெட்டு கும்மாளம்
அடிச்சிட்டிருந்தாங்க...
என்னை யாரும் கண்டுக்கல!
எப்படி இவங்கள ஃப்ரெண்ட்ஸ்
ஆக்கிக்கறதுடம்? ஆங், ஐடியா!
ஒரு ட்ரை-மீ சாப்பிட்டேன்... டக்டக்கு
நேரா போயி அவங்களுக்கும் கொடுத்தே
கைநிறைய ட்ரை-மீ.... 'ம், வாங்க, ட்ரை
அவ்ளோதான்! ஒரே நாள்ள அஞ்சு பே
என் ஃப்ரெண்ட்ஸ்
ஆயிட்டாங்க.



Parry's

Try-Me!

சவால் விடும் புதுச்சு